விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 28 வியாழக்கிழமை (11.04.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 113

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## தமிழர்களை கைது செய்த போது
# பயங்கரவாத தடைச் சட்டம் தவறாக தெரியவில்லையா?
## கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க கேள்வி

(கொழும்பு)
தமிழர்களை கைது செய்யும்போது தவறாக தெரியாத பயங்கரவாதத் தடைச்சட்டம் தற்போது நாட்டின் ஒரு தரப்பினரை கைது செய்யும்போது மாத்திரம் அது தவறாக தெரிவதாக கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

காணி சுவீகரிப்பை தடுக்க
## மண்டைதீவில் இன்று ஆர்ப்பாட்டம்

(மண்டைதீவு)
மண்டைதீவில் கடற்படைக்கு முகாம் அமைப்பதற்காக 18 ஏக்கர் விவசாய நிலத்தை சுவீகரிக்கும் முயற்சியை தடுத்து நிறுத்த இன்று 11 ஆம் திகதி காலை மண்டைதீவு கிழக்கு பகுதியில் பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்த 23

## மக்கள் பிரதிநிதிகளே பிரச்சினைக்கு காரணம் - ஜனாதிபதி

(கொழும்பு)
நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான பிரதான தடைகளாக ஊழல், மோசடி ஆகியவற்றை போன்றே மக்கள் பிரதிநிதிகள் தமது பொறுப்புக்களை உரியவாறு நிறைவேற்றாமையும் காணப்படுவதாக ஜனாதிபதி தெரிவித்தார். 24

## சிறிய, நடுத்தர வியாபாரிகளுக்கு வழங்கப்படும் வட்டி குறைப்பு
### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)
சிறிய மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்கு வழங்கப்படும் வங்கிக் கடன் வட்டிவீதம் குறைக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில். 23

## இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்களுக்கு தொடர்ந்து பிரச்சினை - ஸ்டாலின்

(கொழும்பு)
இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்களுக்கு பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டிருப்பதாக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து 24

புத்தாண்டை முன்னிட்டு
## எரிபொருள் விலை அதிகரிக்கப்படாது - நிதி அமைச்சு

(கொழும்பு)
எரிபொருள்களின் விலை இந்த மாதம் மாற்றியமைக்கப்படாது என நிதி அமைச்சு அறிவித்துள்ளது. உலக சந்தையில் எரிபொருள்களின் விலை அதிகரித் 23


பண்டிகையை முன்னிட்டு
## நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு

(கொழும்பு)
சித்திரைப் புத்தாண்டு பண்டிகைக் காலங்களில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத்திட்டமிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலங்களில் இடம்பெறும் விபத்துக்களினால் 23

## மானிப்பாயில் வாள்வெட்டுக்குழு பட்டப்பகலில் மூன்று வீடுகளுக்குள் புகுந்து தாக்குதல்
### மோ. சைக்கிளில் வந்த 9 பேர் தாக்குதல் நடத்தினர்


(யாழ்ப்பாணம்)
மானிப்பாயில் மூன்று வீடுகளுக்குள் புகுந்த வாள்வெட்டுக் கும்பல் அங்கு வசிப்பவர்களை அச்சுறுத்தும் வகையில் அட்டூழியத்தில்



ஈடுபட்டுத் தப்பித்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஒழுங்கை 23

## வவுனியாவில் மிதிவெடி மீட்பு



23

## சுதந்திரக்கட்சி - பொதுஜன முன்னணி கூட்டணியில் நம்பிக்கையில்லை
### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)
2019 ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் இறுதி வாக்கெடுப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் பங்கேற்காமையானது நம்பிக்கை இழக்கச் செய்துள்ளதாக ஸ்ரீலங்கா 23

## மண்டைதீவு – அல்லைப்பிட்டி இணைப்பு வீதி திருத்தப்படாதது ஏன்?
### மக்கள் விசனத்துடன் கேள்வி

(மண்டைதீவு)
மண்டைதீவையும் அல்லைப்பிட்டியையும் இணைக்கும் வீதியை புனரமைத்துத் தாருங்கள் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தும் இதுவரை அந்த வீதி கவனிப்பாரற்றுக்கிடக்கிறது.

மண்டைதீவையும் அல்லைப்பிட்டியையும் இணைக்கும் குறித்த வீதி பல வருடங்களாக 23

எதிர்வரும் நாட்களில்
## வெப்பநிலை மேலும் அதிகமாகும்

(கொழும்பு)
நாட்டில் கடந்த 48மணி நேரத்துக்குள் வவுனியா மாவட்டத்திலேயே அதிகூடிய வெப்பநிலையாக 38.5 பாகை செல்சியஸ் 24

## கோத்தபாயவுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட வேண்டும் - சந்திரிகா

(கொழும்பு)
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்‌ஷவிற்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட வேண்டும் அல்லது குடியுரிமை இரத்துச் செய்யப்பட வேண்டும்



என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்‌ஷ செய்த குற்றங்களுக்கு இலங்கையின் நீதிமன்றங்களில் தனி 23

## பகிடிவதையில் ஈடுபட்டால் வெட்டித் துண்டாடப்படுவீர்
### யாழ்.பல்கலை மாணவர்களுக்கு ஆவா குழு பகிரங்க எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)
பகிடிவதையில் ஈடுபடும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் உடல் பாகங்களை, ஈவு இரக்கமின்றி வெட்டியெறிவோம் என பகிரங்க எச்சரிக்கை விடுத்து, துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துள்ளது ஆவா குழு. 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக்கட்சி - பொதுஜன பெரமுனவின் கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும்

## சு.க பொதுச் செயலாளர் தயாசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

பரந்துபட்ட கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை உள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஒன்றிணைந்து அமைக்கவுள்ள பரந்துபட்ட கூட்டணிக்கான மூன்றாவது பேச்சுவார்த்தை நேற்று எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இப்பேச்சுவார்த்தைக்கு பொதுஜன பெரமுனவின் சார்பில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெருமவும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால மற்றும் பேராசிரியர் ரோஹன லக்ஷமன் பியதாச ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போதே மேற்கண்டவாறு கூறிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

பரந்துபட்ட கூட்டணியமைத்தல் தொடர்பில் முன்னெடுத்த இரண்டாவது பேச்சுவார்த்தையில் 20 சித்தாந்த கொள்கை திட்டங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டன. இம்முறை 25 கொள்கை திட்டங்கள் இருதரப்பினராலும் முன்வைக்கப்பட்டுள்ளது. இரண்டு கட்சிகளையும் எவ்வாறு கொள்கை ரீதியில் ஒன்றிணைத்து நிலையான ஒரு அரசியல் கொள்கையினை வகுப்பது தொடர்பில் இரு தரப்பினாலும் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

எனவே எதிர்வரும் 09 ஆம் திகதி இடம்பெறவுள்ள நான்காவது பேச்சுவார்த்தை மாறுபட்டதாக காணப்படும். இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட மூன்று பேச்சுவார்த்தைகளும் ஆவணப்படுத்தப்பட்டு அவை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுவின் செயற்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவதுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரது கவனத்திற்கு கொண்டு சென்றதன் பின்னர் அடுத்த பேச்சுவார்த்தையினை மேற்கொள்ள தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தற்போது மாகாணசபை தேர்தலை விரைவாக நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை இருதரப்பினரும் மேற்கொள்ளவுள்ளோம்.

மாகாண சபை தேர்தலை நடத்த முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முழுமையான ஆதரவு வழங்கும். ஜனநாயகத்தை மதிக்கின்ற அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுத்துள்ளோம். பரந்துபட்ட கூட்டணி நிச்சயம் வெற்றிப் பெறும் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிடுகையில்,

பரந்துபட்ட கூட்டணியமைத்தல் தொடர்பில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை பல கேள்விகளுடன் நிறைவு பெற்றுள்ளது. வரவு - செலவு திட்டத்தின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செயற்பட்ட விதம் பல சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது என்று எமது தரப்பில் குறிப்பிடப்பட்டது. இதற்கு சுதந்திரக்கட்சியினர் முறையான காரணத்தை குறிப்பிடவில்லை.

இரண்டு தரப்பினரும் கொள்கை ரீதியில் ஒன்றிணைய வேண்டுமாயின் அனைத்து விடயங்களிலும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும். வரவு-செலவு திட்டத்தில் இவர்களின் செயற்பாடு பொதுஜன பெரமுன உறுப்பினர்களின் மத்தியில் அதிருப்தியினையும், அவநம்பிக்கையினையும் ஏற்படுத்தியது. இதனை சுதந்திர கட்சியினர் கூட்டணியமைக்கும் முன்னரே திருத்திக் கொள்ள வேண்டும் என்றார். (ம-3)

# ஜனாதிபதித் தேர்தல் தாமதிப்பதற்கு இடமளியோம்

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை எக்காரணம் கொண்டும் தாமதப்படுத்த பொதுஜன பெரமுன இடமளிக்காது என பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவிற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையிலான பரந்துபட்ட கூட்டணி குறித்து நேற்று புதன்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது, மாகாணசபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. இதுவரையில் ஆறு மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவடைந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் தென் மாகாண சபையும், இம்மாத இறுதியுடன் மேல்மாகாண சபையும் கலைக்கப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் 8 மாகாணங்கள் நிர்வகிக்கப்படும் நிலை ஏற்படும் என்று தெரிவித்தார்.

அத்தடன், மாகாண சபைத் தேர்தல் பிற்போடுவதற்கு சுதந்திரக்கட்சியும் முழுமையான பொறுப்பு கூறவேண்டும். தேசிய அரசாங்கத்தில் இரண்டு பிரதான கட்சிகளும் மக்களின் அடிப்படை உரிமையான தேர்தல் உரிமையினை பகிரங்கமாக பறித்துள்ளது எனவும் இதன்போது கூறினார். (ம-3)

# வீதியின் அருகே படுத்தவரின் கால்கள் மீது டிப்பர் ஏறியது!

## இரு கால்களும் சிதைவடைந்தது; ஏ9 வீதி பனிக்கன்குளத்தில் சம்பவம்

வீதியின் அருகே படுத்திருந்தவரின் கால்களின் மீது டிப்பர் வாகனம் ஏறியதால் அவர் படுகாயமடைந்த நிலையில். கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மாங்குளம் ஏ9 வீதியில் பனிக்கன்குளம் பகுதியில் நேற்றிரவு 8.30 மணியளவில் இடம்பெற்றது.

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த டிப்பர் வாகனம் வீதியின் அருகே படுத்திருந்தவரின் கால்களின் மீது ஏறிச்சென்றது. சுமார் 40 வயது மதிக்கத்தக்க நபரே இந்தச் சம்பவத்தில் கால்கள் சிதைவடைந்த நிலையில் அம்புலன்ஸ் வண்டியில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (ம-3)



# கனடாவுக்கு அனுப்புவதாக பண மோசடியில் ஈடுபட்ட இளைஞர் மீசாலையில் கைது

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி பணம் பெற்றமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் மீசாலைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கிளநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, கடந்த வாரம் கனடா நாட்டுக்கு சட்டவிரோதமாக செல்வதற்கு தயாராகிய நிலையில் இருந்த 26 பேர் கிளிநொச்சி பகுதியில் வீடொன்றில் வைத்து விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் மீசாலைப் பகுதியில் வைத்து நேற்றைய தினம் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3-10)


# மரண அறிவித்தல்



(8429)

## செல்வி ஆறுமுகம் கமலாதேவி

*கந்தர்மடம் இல.49, மணல்தறை வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஆறுமுகம் கமலாதேவி அவர்கள் நேற்று முன்தினம் (09.04.2019) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் சண்முகலிங்கம் (USA) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வசுமதி (USA) அவர்களின் மாமியாரும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.04.2019) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

**இல.49, மணல்தறை வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**தகவல் : ஆ.சண்முகலிங்கம்**
**குடும்பத்தினர் (0212227952)**

# சபிண்டீகரண அழைப்பு



*பிறப்பு: 1943.05.08*
*இறப்பு: 2019.03.13*

கடந்த 13.03.2019 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் சின்னத்தம்பி கதிரேசன்**

அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (12.04.2019) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**குருக்கட்டு வீதி,**
**துன்னாலை கிழக்கு,**
**கரவெட்டி.**

**தகவல்:**
**சீனா -நித்தியா**
**குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாவின் உத்தரவில் சித்திரவதைகள்!

## யஸ்மின் சூக்கா பகிரங்க குற்றச்சாட்டு





(லண்டன்)

சித்திரவதைகள் செய்வதற்கான உத்தரவுகள் அனைத்தும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவால் வழங்கப்பட்டதென உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பின் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா பகிரங்கமாக குற்றம்சாட்டியுள்ளார்.

கோத்தபாயவுக்கு எதிராக வழக்கு செய்தமையை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று லண்டனில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு யஸ்மின் சூக்கா மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் வழக்கைத் தாக்கல் செய்த ரோய் சமாதானம் மற்றும் பிரபல சட்டத்தரணி ஸ்கொட் கிள்மரே ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்; "முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது தற்போது நாம் வழக்கு தொடர்வதற்கு இது சிறந்த சந்தர்ப்பமாக காணப்படுகின்றது.

ஏனென்றால் சித்திரவதை செய்வதற்கான உத்தரவு மற்றும் கட்டளைகள் அனைத்தும் கோத்தபாய ராஜபக்ஷவால் வழங்கப்பட்டுள்ளன. இந்தச் செயற்பாடுகளுக்கு கோத்தபாய சட்டபூர்வமாக பொறுப்புக் கொண்டவர்.

பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டை மையமாகக் கொண்டிருந்ததாக பல ஆண்டுகளாக கோத்தபாய தனது பகிரங்க அறிக்கைகளில் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்தச்சம்பவங்கள் ஐ.நா. சபையினால் ஆவணப்படுத்தப்பட்டு அறிவிக்கப்பட்டதுடன் இலங்கை அரசாங்கம் இந்த குற்றச்சாட்டுக்களை மீண்டும் மீண்டும் எதிர்கொண்டது.

பாதுகாப்புச் செயலாளர் என்ற ரீதியில் இந்த முறைகேடுகள் நடைபெற்றதா? அல்லது சரியான முறையிலேயே செயற்பட்டார்களா? என நன்கு அறிந்திருந்தார். ஆனால் அவர் குற்றவாளிகளை விசாரணை செய்ய அல்லது தண்டிக்க சட்ட நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

எனவே தற்போது முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்காவில் இருக்கும்தருணத்தில் அவர்மீதான குற்றச்சாட்டுகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு சிறந்த வாய்ப்பு கிட்டியுள்ளது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(இ-7)

---

## புதிய கூட்டணி அமைப்பு

# ஸ்ரீல.சு.க.-பெரமுன இடையிலான பேச்சுவார்த்தை நிறைவு- தயாசிறி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் இடம்பெற்ற புதிய கூட்டணி அமைப்பது தொடர்பான மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தை நிறைவுபெற்றுள்ளது.



அத்துடன் இது தொடர்பான நான்காம் கட்டப் பேச்சுவார்த்தையை எதிர்வரும் மே மாதம் 09 ஆம் திகதி முன்னெடுக்க இதன்போது தீர்மானித்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.(இ-7)

---

# முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும்-துமிந்த

(அநுராதபுரம்)

முதலில் ஜனாதிபதி தேர் தல் நடத்தப்பட வேண்டு மென நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் பகுதியில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் தேர்தல் தொட ர்பில் அனைத்து அரசியல் கட்சிகளும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரி வித்துள்ளார்.

எவ்வாறெனினும் முத லில் ஜனாதிபதி தேர்தலே நடத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (இ-7)

---

## அபராத முறைக்கு எதிராக

# தனியார் பேருந்து ஊழியர்கள் நள்ளிரவு முதல் வேலைநிறுத்தம்

(கொழும்பு)

புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள போக்குவரத்து அபராத முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து தனியார் பேருந்து ஊழியர்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை வெற்றிகரமாக வேலை நிறுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாக தனியார் பேருந்து ஊழியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சில போக்குவரத்து விதி மீறல்களுக்கு அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அபராத தொகைக்கு எதிர்ப்பு தெரிவித்து தனியார் பேருந்து சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை புகையிரத தொழிற்சங்கங்கள் சில நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் ஆரம்பிக்க இருந்த வேலை நிறுத்த போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.(இ-7)

---

## அரசியலமைப்புச் சபையிலிருந்து சமல் விலகல்

# சம்பந்தனுக்கு நியமனம் வழங்க ஜனாதிபதி மைத்திரி இழுத்தடிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்புச் சபையின் உறுப்பினர் பதவியிலிருந்து சமல் ராஜபக்ஷவின் விலகலையடுத்து அப்பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கான நியமனத்தை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்னமும் வழங்கவில்லை.



அரசியலமைப்புச் சபைக்கு இரா.சம்பந்தனை நியமிப்பதற்கு, கடந்த 5 ஆம் திகதி சபாநாயகரும் அரசியலமைப்புச் சபையின் தலைவருமான, சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் நடந்த அரசியலமைப்புச் சபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதுதொடர்பாக சபாநாயகர் கரு ஜெயசூரியவால், இரா.சம்பந்தனுக்கு அறிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. எனினும், இந்த நியமனத்துக்கு, ஜனாதிபதியின் அங்கீகாரம் இன்னமும் வழங்கப்படவில்லை.

உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் நியமனம் தொடர்பான பரிந்துரையைச் செய்வதற்காக, அரசியலமைப்பு சபை இந்த மாத இறுதியில் கூடவுள்ளது. இந் நிலையில், இரா.சம்பந்தனின் நியமனத்துக்கான அங்கீகாரம் ஜனாதிபதியால் இன்னமும் வழங்கப்படாமல் இருப்பது கேள்விகளை எழுப்பியுள்ளது. ஏற்கனவே, அரசியலமைப்பு சபையின் செயற்பாடுகள் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

---

# அடுத்தாண்டு ஜூன் வரை பதவியை தக்கவைக்கும் முயற்சியில் மைத்திரி

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பதவிக்காலம் எப்போது முடிவடைகிறது என்று உச்சநீதிமன்றத்திடம் விளக்கம் கோரவுள்ளார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

"2015 ஜூன் 21ஆம் திகதி சபாநாயகரினால் கையெழுத்திடப்பட்ட, 19 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அமைய ஜனாதிபதியின் பதவிக் காலம், ஐந்து ஆண்டுகளில் முடிவடைகிறது.

எனவே, 19 ஆவது திருத்தச் சட்டம் 2015 ஜூன் 21ஆம் திகதி நடைமுறைக்கு வந்த அன்றில் இருந்தே, ஜனாதிபதியின் ஐந்து ஆண்டு பதவிக்காலம் கணக்கிடப்பட வேண்டும்.

இதன்படி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 2020 ஜனவரி 08ஆம் திகதி வரை பதவியில் இருப்பதற்குப் பதிலாக, 2020 ஜூன் 20 வரை பதவியில் இருக்க முடியும்.



மிகவும் உணர்வுபூர்வமான இந்த விவகாரம் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏன் உச்ச நீதிமன்றத்தின் விளக்கத்தைக் கோரக் கூடாது? இதுபற்றி நாங்கள் எமது சட்ட வல்லுநர்களுடன் ஆராய்ந்து வருகிறோம்.

2015 ஜூன் 20 வரை ஜனாதிபதியின் ஐந்தாண்டு பதவிக் காலம் வரையறுக்கப்பட்டால், நாடாளுமன்றத்தை நான்கரை ஆண்டுகளில் கலைக்கின்ற அதிகாரம், ஜனாதிபதிக்கு அந்தக் காலப்பகுதியில் கிடைக்கும்.

எனவே, 2020 பெப்ரவரியில் அவர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் வாய்ப்பு உள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொங்கிய 'வேங்கை' பொலார்ட்

## ● இறுதி பந்தில் மும்பை 'திரில்' வெற்றி
## ● ராகுலின் சதம் வீணானது

பஞ்சாப் அணிக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் பொலார்ட் அரைச் சதம் விளாச. மும்பை அணி கடைசி பந்தில் 'திரில்' வெற்றி பெற்றது.

இந்தியாவில் ஐ.பி.எல்., கிரிக்கெட் தொடர் நடக்கிறது. மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று நடந்த லீக் போட்டியில் பஞ்சாப், மும்பை அணிகள் மோதின.


வெற்றியைக் கொண்டாடும் பொலார்ட் அருகில் ஹர்திக் பாண்ட்யா


அபாரமாக துடுப்பெடுத்தாடி சதம் அடித்த பஞ்சாபின் ராகுல்

காயம் காரணமாக அணித் தலைவர் ரோகித் திற்குப் பதில் மும்பை அணியில் சித்தேஷ் வாய்ப்பு பெற்றார். பஞ்சாப் அணியில் மயங்க் அகர்வால். முஜிப்பிற்குப்பதில் கருண் நாயர், வில்ஜோயன் சேர்க்கப்பட்டனர். மும்பை அணியை வழிநடத்திய பொலார்ட், நாணயச்சுழற்சியல் வென்று களத்தடுப்பை தேர்வு செய்தார்.

### கெய்ல் விளாசல்

பஞ்சாப் அணிக்கு கெய்ல், லோகேஷ் ராகுல் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. முதல் ஓவரை பெஹ்ரண்டர்ப் கட்டுக்கோப்பாக வீச, ஒரு ஓட்டம் மட்டுமே கிடைத்தது. இந்த கோபத்தை 5ஆவது ஓவரில் மொத்தமாக தீர்த்தார் கெய்ல். பெஹ்ரண்டர்ப்பின் பந்துவீச்சில் 3 சிக்சர், ஒரு பவுண்டரி அடித்து மிரட்டினார். அல்ஜாரி ஜோசப் பந்துவீச்சில் ராகுல் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார்.

குர்னால் பந்தில் சிக்சர் அடித்த கெய்ல் அரைச்சதம் கடந்தார். முதல் விக்கெட்டுக்காக 116 ஓட்டங்கள் சேர்த்தபோது, பெஹ்ரண்டர்ப் பந்தில் கெய்ல் (63) ஆட்டமிழந்தார். ஹர்திக் 'வேகத்தில்' மில்லர் (7) ஆட்டமிழந்தார். கருண் நாயர் 5 ஓட்டங்கள் எடுத்தார். பும்ரா பந்தில் கர்ரான் (8) சிக்கினார். ஹர்திக் வீசிய 19வது ஓவரில் 3 சிக்சர். ஒரு பவுண்டரி விளாசிய ராகுல். ஐ.பி.எல்., தொடரில் முதல் சதம் அடித்தார்.

பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 197 ஓட்டங்களை எடுத்தது. லோகேஷ் ராகுல் (100), மன்தீப் சிங் (7) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மும்பை அணிக்கு சித்தேஷ் (15) ஏமாற்றினார். கர்ரான் பந்தில் சூர்யகுமார் (21) ஆட்டமிழந்தார். மில்லரின் 'சுப்பர் பிடியில்' குயின்ரன் (24) சிக்கினார். இஷான் கிஷான் (7) நிலைக்கவில்லை. பொலார்ட், ஹர்திக் பாண்ட்யா வேகமாக ஓட்டங்கள் சேர்த்தனர். ஹர்திக் 19 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

### பொலார்ட் அரைச்சதம்

ஷமி பந்தில் குர்னால் (1) சிக்கினார். பொலார்ட் அரைச்சதம் விளாசினார். ராஜ்புட் வீசிய கடைசி ஓவரில் வெற்றிக்கு 15 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

இதில் போலார்ட் (83) சிக்க, 'டென்ஷன்' ஏற்பட்டது. கடைசி பந்தில் இரண்டு ஓட்டங் தேவை என்ற நிலையில், ஜோசப் கைகொடுத்தார்.

மும்பை அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்கள் எடுத்து 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஜோசப் (15), ராகுல் சகார் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் நாயகனாக மும்பையின் பொலார்ட் தெரிவானார்

**ரோகித் காயம்**

மும்பையின் வழமையான அணித் தலைவர் ரோகித், பயிற்சியில் ஈடுபட்டபோது இடது கால்பகுதியில் தசைபிடிப்பு ஏற்பட்டது. இதன் காரணமாக, நேற்றைய போட்டியில் பங்கேற்கவில்லை. ஐ.பி.எல்., தொடரின் போட்டியில், 11 ஆண்டுக்குப்பின் ரோகித் பங்கேற்காமல் இருந்துள்ளார். இதற்கு முன், கடந்த 2008ல் சென்னை அணிக்கு எதிரான போட்டியில் (டெக்கான் சார்பில்) விளையாடவில்லை.

**4**

நடப்பு சீசனில் சதம் அடித்த 4வது வீரரானார் லோகேஷ் ராகுல். ஏற்கெனவே, ஹைதராபாத் அணியின் பேர்ஸ்டோவ், வோர்னர், ராஜஸ்தான் அணியின் சாம்சன் இந்த இலக்கை எட்டி இருந்தனர்.




## சென்னைக்கு ஈடுகொடுக்குமா ராஜஸ்தான்
## இன்று ஜெய்ப்பூரில் பலப்பரீட்சை

ஐ.பி.எல்., தொடரில் இன்று நடக்கவுள்ள லீக் போட்டியில் சென்னை, ராஜஸ்தான் அணிகள் மோதுகின்றன. இதில் ராஜஸ்தான் அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி எழுச்சி கண்டால் மட்டுமே பலம் வாய்ந்த சென்னை அணியை வீழ்த்தலாம்.

இந்தியாவில், பிரிமியர் கிரிக்கெட் தொடரின் 12வது சீசன் நடக்கிறது. இதில் கொல்கத்தா, பஞ்சாப், பெங்களூர் உள்ளிட்ட 8 அணிகள் பங்கேற்கின்றன. ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் இன்று நடக்கவுள்ள லீக் போட்டியில் 'நடப்பு சம்பியன்' சென்னை அணி, ராஜஸ்தானை எதிர்கொள்கிறது.

### டு பிளசி நம்பிக்கை

சென்னை அணி, இதுவரை விளையாடிய 6 போட்டிகளில் 5 வெற்றி, ஒரு தோல்வியை சந்தித்துள்ளது. கடைசியாக சென்னையில் நடந்த லீக் போட்டியில் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் கொல்கத்தாவை வீழ்த்தியது. 'ரொப் ஓர்டரில்' டுபிளசி நம்பிக்கை அளிக்கிறார். ஷேன் வோட்சன் எழுச்சி கண்டால் நல்ல ஆரம்பம் கிடைக்கும். மூன்றாவது இடத்தில் களமிறங்கும் ரெய்னா ஆறுதல் கொடுக்கிறார். ராஜஸ்தானுக்கு எதிராக சென்னையில் நடந்த போட்டியில் அரைச் சதம் கடந்த அணித் தலைவர் தோனி மீண்டும் சாதிக்கலாம். 'நடுத்தர வரிசையில்' கேதர் ஜாதவ், அம்பதி ராயுடு கைகொடுத்தால் நல்ல ஓட்ட எண்ணிக்கையை எட்டலாம்.

### சகார் அசத்தல்

வேகப்பந்துவீச்சில் தீபக் சகார் அசத்துகிறார். கொல்கத்தாவுக்கு எதிராக 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய இவரது விக்கெட் வேட்டை இன்றும் தொடரலாம். இவருக்கு ஸ்காட், ஷர்துல் தாகூர், மோகித் சர்மா ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். சுழலில் இம்ரான் தாகிர் (9 விக்கெட்), ஹர்பஜன் சிங் (7), ரவிந்திர ஜடேஜா (5) பலம் சேர்க்கின்றனர். இவர்கள் இன்றும் 'சுழல் ஜாலம்' காட்டினால் சுலப வெற்றி பெறலாம்.

### கட்டாய வெற்றி

ராஜஸ்தான் அணி இதுவரை விளையாடிய 5 போட்டிகளில் ஒரு வெற்றி, 4 தோல்வியை பெற்றுள்ளது. மீதமுள்ள போட்டிகளில் வெற்றி பெற்றால் மட்டுமே 'பிளே-ஓப்' சுற்றுக்கான வாய்ப்பை தக்கவைத்துக் கொள்ள முடியும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இத்தொடரில் முதல் சதத்தை பதிவு செய்த சஞ்சு சாம்சன் காயத்தால் பாதிக்கப் பட்டிருப்பது பின்னடைவு. கடந்த 2 போட்டியில் ஏமாற்றிய ஜொஸ் பட்லர் எழுச்சி காண வேண்டும். இதுவரை பெரிய அளவில் சோபிக்காத அணித் தலைவர் அஜின்கியா ரகானே, ராகுல் திரிபாதி, 'சகலதுறை வீரர்' பென் ஸ்ரோக்ஸ் கைகொடுக்க வேண்டும். ஸ்ரீவ் ஸ்மித் ஆறுதல் கொடுக்கிறார்.

சுழலில் ஸ்ரேயாஸ் கோபால் (8 விக்கெட்) ஆறுதல் தருகிறார். வேகப்பந்துவீச்சில் ஸ்ரோக்ஸ் (4 விக்கெட்), ஜோப்ரா ஆர்ச்சர் (3), ஜெயதேவ் உனத்கட் (2), தவால் குல்கர்னி (2) ஆகியோர் அதிக விக்கெட் வீழ்த்த முயற்சிக்க வேண்டும்.

**20 போட்டி**

ஐ.பி.எல், தொடர்வரலாற்றில்சென்னை, ராஜஸ்தான் அணிகள் 20 முறை மோதியுள்ளன. இதில் சென்னை 13, ராஜஸ்தான் 7ல் வெற்றி பெற்றன.

இந்த சீசனில் சென்னையில் நடந்த போட்டியில் சென்னை அணி 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தானை வீழ்த்தியது.

### இந்தியன் பிறிமியர் லீக் - 2019 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை சுப்பர் கிங்ஸ் | 6 | 5 | 1 | 10 |
| 2 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 6 | 4 | 2 | 8 |
| 3 | மும்பை இந்தியன்ஸ் | 6 | 4 | 2 | 8 |
| 4 | கிங்ஸ் XI பஞ்சாப் | 7 | 4 | 3 | 8 |
| 5 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | 6 | 3 | 3 | 6 |
| 6 | டில்லி கப்பிட்டல்ஸ் | 6 | 3 | 3 | 6 |
| 7 | ராஜஸ்தான் றோயல்ஸ் | 5 | 1 | 4 | 2 |
| 8 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 6 | 0 | 6 | 0 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோனியர் விமானத்தை வழங்குகிறது இந்தியா



(கொழும்பு)

டோனியர் ரக கடல் கண்காணிப்பு விமானம் ஒன்றை இலங்கைக்கு இந்தியா வழங்கவுள்ள தாக தகவல்கள் வெளியாகியுள் ளன..

இலங்கையுடனான பாதுகாப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள் ளும் திட்டத்தின் ஒரு கட்ட மாகவே டோனியர் விமா னம் ஒன்றை இலங்கைக்கு வழங்க இந்தியா திட்டமிட் டுள்ளது.

பிராந்திய நாடுகளுட னான பாதுகாப்பு உறவு களை வலுப்படுத்திக் கொள் வதில் இந்தியா கவனம் செலுத்தி வருகின்றது.

இந் நிலையிலேயே, இந்திய கடற்படையின் பயன் பாட்டிலுள்ள டோனியர் விமா னம் ஒன்றை இலங்கை கடற்படைக்கு வழங்க இந் தியா திட்டமிட்டுள்ளதாக டில்லி தகவல்கள் தெரிவிக் கின்றன. (இ-7)

# 31 ஆம் நாளில் நினைவுகூருகின்றோம்



## அமரர்: திருமதி. புஸ்பராணி மனோகரா திருநாவுக்கரசு

எமது வலய விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் திருநாவுக்கரசு கதிர்காமநாதன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி. புஸ்பராணி மனோகரா திருநாவுக்கரசு அவர்கள் 11.03.2019 அன்று காலமானதையிட்டு 31 ஆம் நாளில் நினைவுகூருவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**விஞ்ஞான பாட ஆசிரியர்கள்,**
**யாழ். கல்வி வலயம்.**

(8412)

# இரண்டாம் ஆண்டு நினைவில்...



**அமரர் சுந்தரலிங்கம் ஈஸ்வரன்**
பிறப்பு 03.10.1959 இறப்பு 06.01.2002



**ஈ.கவிராஜ்**
பிறப்பு 10.03.1995 இறப்பு 24.10.1997



**ஈ.குருபரன்**
பிறப்பு 11.07.1998 இறப்பு 10.12.2001



**ஈஸ்வரன் கோகுலன்**
பிறப்பு 20.02.1997 இறப்பு 03.04.2017
திதி: 11.04.2019

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் திருவுருவாய்
மலர்ந்த என் அருமை மகனே கோகுலா
என்னை தவிக்க விட்டுச் சென்று
இரண்டு ஆண்டுகாலம் வந்ததே ஐயா!
எல்லோர் மனதிலும் என்றும் அணையாத
தீபச்சுடராய் வாழ்ந்து கொண்டிருக்கும் நீர்!
பெற்ற அன்னை உன் பிரிவால்
உன் சகோதரரின் பிரிவால் உன் தந்தையின் பிரிவால்
பரிதவிக்க விட்டு நீண்ட தூரம் போனதேனோ?
பெற்றவள் கலங்கி நீ கண் காணாத தேசம் சென்றதேனோ?
உன் அம்மா இரு பிள்ளைகளையும் கணவனையும் இழந்து
உன்னையே நம்பியிருந்த
உன் அம்மாவை பரிதவிக்க விட்டு பாதியில் பறந்ததேனோ?
என் வாழ்வில் உன்னுடன் கடைசி வரை வாழ ஆசைப்பட்டேன்...
ஆனால் நீயோ அரை வழியில்
நன்றி சொல்லி விடைபெற்று விட்டாய்...
பிள்ளைகளின் பாசம் என்றால் அது நீயல்லவே...
உன்னிடம் அல்லவா அந்த
படிப்பினையை நான் கற்றேன்
மறக்க முடியாது உன் பாசப்பிணைப்பை!
உன் அப்பாவும் உன் சகோதரர்களும்
உன்னையும் என்னையும் விட்டு
பிரிகையில் நீ எனக்கு ஏணியாய் நின்றாயே!
என் வாழ்வில் நீ என்னுடன்
கடைசி வரை இருப்பாய்
என்று எண்ணினேன் அதுவும்
என் வாழ்வில் பொய்யாகி விட்டது!
நீ என்னை விட்டு அகலவில்லை
நீ என்றுடன் இருந்த நினைவலைகள்
என்னை வாட்டி வதைக்கின்றன.!
ஊர் விட்டு ஊர் வந்து எல்லோரிடத்திலும்
அன்பானவனாக நீ இருக்குமிடத்தில்
கலகலப்புடனும் மற்றவர்கள்
கஷ்ட துன்பங்களைக் கண்டு
இன்னல்களைக் கண்டு கலங்குபவனே!
இன்று என்னை கலங்கி தவிக்கவிட்டு
எங்கு சென்று மறைந்தாய்
ஐயோ! என்ற அலறல் ஒலித்த ஒலி
இன்னும் ஓயவில்லை என் மனதில்
நீ எங்கு ஓடி மறைந்தாய் என் நினைவில் என்றும்
ஓயாது உங்கள் நால்வரின் நினைவுகள் என் மனதில்
ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
அகலாது உங்கள் பிரிவுமறக்க முடியுமா?
என்னை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாமல் சென்று விட்டீர்கள்
என் அன்புத் தெய்வங்களின்
ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை பிரார்த்திக்கின்றேன்
என்றும் உங்கள் நினைவுகளுடன்
வாழும் உங்கள் பாசமிகு அம்மா...
ஓம் சாந்தி...! ஓம் சாந்தி...! ஓம் சாந்தி...!



**கே.கே.எஸ்.வீதி, ஐயனார் முகப்பு,**
**சுன்னாகம் வடக்கு , சுன்னாகம்.**

(8428)

**பிரிவால் வாடும்**
**அம்மா சந்திரிகா**

# இராசி பலன்

**11.04.2019**
பங்குனி 28, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
உத்திரட்டாதி முழுவதும்
சுபநேரம் 7.40-3.10 மணிவரை
இராகுகாலம் 1.40 -3.10 மணிவரை

கிரகநிலை: சூரி, புத — செவ் — சந் ராகு — சுக் — சனி, குரு, கேது
சந்திராஷ்டமம்: மூலம்

**மீனம்:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், உடல்நலன் சீராகும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், மனதில் இனம்புரியாத குழப் பங்கள் தோன்றி மறையும்.

**மேடம்:** வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய பிரச்சினை யொன்று நல்ல முடிவுக்கு வரும், சகோதர ஒற்றுமை மேலோங்கும், வருமானம் திருப்திதரும்.

**இடபம்:** நிதி நிலை உயரும் நாள், உற வினர் மத்தியில் மதிப்பும் மரி யாதையும் உயரும் நாள், செய் தொழில் மேன்மையுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்:** குடும்பச் செலவுகளில் சிக்க னம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் பயண மொன்று உருவாகலாம், போசன சுகமுண்டு, வழிபாட்டால் பெரு மைகள் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** உறவினர் வழியில் மனத்திற் கினிய சம்பவமொன்று நடை பெறலாம், வளர்ச்சி பாதையை நோக்கி அடியெடுத்து வைப் பீர்கள், வருமானம் திருப்திதரும்.

**கடகம்:** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், தொழில் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், மறைமுக எதிர்ப்புகள் மாறும் செய்தொழில் மேன்மை யுண்டு, காரிய அனுகூலமு ண்டு, உடல் நலன் சீராகும்.

**சிம்மம்:** பயணங்கள் கைகூடும் வாய்ப் புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, பொது வழியில் புகழ்கூடும் நாள்.

**தனுசு:** குடும்ப நலன்கருதி எடு த்த முயற்சிகள் கைகூடும், இனி மையான அனுபவங்கள் ஏற் படலாம், வியாபாரத்தை விரு த்தி செய்யும் எண்ணம் உருவாகும்

**விருச்சிகம்:** கடவுளை வழிபட்டு காரி யம் தொடங்க வேண்டிய நாள், தேவையற்ற பண விரயங் கள் ஏற்படலாம், எடுத்த காரி யங்களில் சிறு தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**துலாம்:** தொழில் வளர்ச்சிக்கு குறுக் கீடாக இருந்தவர்கள் விலகு வர், காரிய வெற்றிக்கு நண் பர்களின் ஒத்துழைப்பு கிடைக் கும், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** உறவினர்களும் நண்பர்க ளும் வலிய வந்து உதவுவார் கள், கொள்கைப்பிடிப் போடு செயற்படுவீர்கள், பொரு ளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார உறவுகளுக்கான இந்திய பேராய நாள்




(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தினால் கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேராயநாள் நேற்று முன்தினம் Northgate Jetwing hotelவில் கொண்டாடப்பட்டது.

2. இந்நிகழ்வில் Northgate வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், பிரதம செயலாளர் பத்திநாதன், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாதன், வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், அமைச்சுக்களின் பிரதி செயலாளர்கள், யாழ்.மாநகர சபை ஆணையாளர் ஆர்.ரீ. ஜெயசீலன், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் விக்னேஸ்வரன், பேராசிரியர் மிகுந்தன், பேராசிரியர் வேல்நம்பி, வட மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் திருதவராஜா, யாழ்ப்பாண தமிழ் சங்க தலைவர் லலீசன், மூத்த அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேராயத்தினால் வழங்கப்பட்ட புலமைப் பரிசிலைப் பெற்று இந்தியாவுக்கு சென்று கல்வி கற்றவர்கள் என 80இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

3. இந்தியத் துணைத் தூதுவர் பாலச்சந்திரனின் வரவேற்புரையினைத் தொடர்ந்து பேராசிரியர்கள் வேல்நம்பி மற்றும் மிகுந்தன் ஆகியோர் பயனாளிகள் என்ற முறையில் தமது அனுபவங்களை பகிர்ந்தனர்.

அதனைத் தொடர்ந்து "கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேராயத்தினால் வழங்கப்படும் வாய்ப்புக்களை வடக்கு மாகாண மக்கள் முழுமையாக பயன்படுத்துகின்றார்களா? இல்லையா. என்ற தலைப்பில் யாழ்ப்பாண தமிழ் சங்கத்தின் லலீசன் மற்றும் அவரது குழுவினரின் சிறப்புப் பட்டிமன்றமும் இடம் பெற்றது. இறுதியாக வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தின் சிறப்புரை இடம் பெற்றது.

4. இந்தியத் துணைத் தூதுவர் இந்தியப் பேராயத்தின் சிறப்பான பணிகளையும் அதன் மூலம் வடமாகாணம் பெற்றுக் கொள்கின்ற அனுகூலங்களையும் குறிப்பிட்டதுடன் இப் பேராயத்தினால் வழங்கப்படும் அனைத்து வசதிகள் மற்றும் சலுகைகளை வடமாகாண மக்கள் முழுமையாகப் பெற்று உச்ச அளவில் பயன்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். (5-7)

## மத்தியஸ்தர் சபை நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

"பிரதி ஞாயிற்றுக்கிழமை கந்தரமடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெறும் நல்லூர் மத்தியஸ்த சபை அமர்வு, தமிழ்ப் புதுவருட தினமான 14.04.2019 ஞாயிற்றுக்கிழமை நடைபெறமாட்டாதென்றும் எதிர்வரும் 21 ஆம் திகதி வழமைபோல் அமர்வு நடைபெறுமென்றும் தவிசாளர் நா.நித்தியானந்தன் தெரிவித்துள்ளார். (5)

## 'இலக்கை இலக்குவை' சிறுவர் முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் "இலக்கை இலக்குவை" சிறுவர் முகாம் எதிர்வரும் 19, 20,21ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை யாழ்.மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச் சிறுவர் முகாம் 8-13 வயதுடைய மாணவர்களுக்குரியதாகும். எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை தினமும் மாலை 4 மணிமுதல் 6 மணிவரை இல-9 செட்டித்தெரு வீதி, நல்லூர் சின்மயா மிஷனில் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (5)

# எமது பிரதேச மக்களுக்கே எமது வளம் கிடைக்க வேண்டும்

(சாவகச்சேரி)

தென்னிலங்கையைச் சேர்ந்த பலர் எமது வளங்களைச் சுரண்டக் காத்திருப்பதாக சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் கவலை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை தென்மராட்சி மறவன்புலோ பகுதியில் இடம்பெற்ற உப்பளத்திற்கு நீரேற்றும் நிகழ்விற்கு தலைமை தாங்கிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில், எமது வளங்களை நாம் சரியாகப் பயன்படுத்தாது விட்டால்எமது வளங்களை சுரண்ட சிலர் காத்திருக்கின்றனர்.

எமது வளங்களைச் சுரண்ட தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் பேரம் போடுகிறார்கள். எமது பிரதேச மக்களுக்கே எமது வளங்கள் கிடைக்க வேண்டும். இன்று இருக்கும் அரசியல் சூழல் நாளையும் இருக்கும் என்று கூற முடியாது.

எதிர்காலத்தில் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் வந்து எமது வளங்களைச் சுரண்டும் போது நாம் எதுவும் செய்ய முடியாத கையாலாகாத நிலைக்கு தள்ளப்படலாம்.ஆகவே.எமக்கு கிடைத்த இந்த சாதகமான அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்தி எமது வளங்களை எமது மக்களுக்கே கிடைக்கச்செய்ய வேண்டும்.

நாம் தென்மராட்சியில் பல வளங்களை இனங்கண்டுள்ளோம். இந்த வளங்கள் ஊடாக ஏழை மக்களுக்கு நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்துவோம்.தென்மராட்சி-மறவன்புலோ பகுதியில் பல வளங்கள் கவனிக்கப்படாது கட்டாந்தரைகளாகக் காணப்பட்ட நிலையில் ஆனந்தா சோல்ட் நிறுவனம் அந்த நிலத்தில் பாரிய முதலீட்டை மேற்கொண்டு பிரதேச அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய இரண்டையும் ஏற்படுத்தியுள்ளது.

எமது பிரதேசத்தில் பல வளங்கள் இனங்காணப்பட்டுள்ள போதிலும் அதில் அபிவிருத்தியை மேற்கொள்ள பல தடைகள் காணப்படுகின்றன.அபிவிருத்திக்கு முட்டுக்கட்டை போட பலர் காத்திருக்கின்றனர். பிரதேசம் சார் அபிவிருத்தியானது நிலைத்து நீடித்து நிற்கக்கூடியதாகவும் மக்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி வருமானத்தை உயர்த்தக்கூடியதாகவும் இருக்க வேண்டும். தென்மராட்சிப் பகுதியில் உப்பளம் செய்வதற்காக இரண்டாயிரம் ஏக்கர் நிலத்தை இனங்கண்டுள்ளோம்.

இதன்மூலம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என 1200 பயனாளிகள் பயனடைய முடியும். இது தொடர்பாக நாம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பேசுவோம். பிரதேச மக்கள் சார்ந்த நிலையான அபிவிருத்தி நோக்கி முன் நகர்ந்து செல்வோம் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-30)

# கமநலசேவை நிலையத்தால் ஏக்கர் வரி அறவீடு-2019

(யாழ்ப்பாணம்)

கைதடி கமநலசேவைகள் நிலையத்தால் பின்வரும் திகதிகளில் குறித்த கமக்கார அமைப்பு பிரிவுகளுக்கு குறித்த பிரதேசத்தில் ஏக்கர் வரி அறவீடு மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் தங்களது கடந்த வருட ஏக்கர் வரி பற்றுச் சீட்டையும் உறுதியின் போட்டோ பிரதியையும் அல்லது குத்தகைக் கடிதத்தையும் கொண்டு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.


இதனடிப்படையில் இன்று 11 ஆம் திகதி வியாழக்கிழமை ஜே/298 மறவன்புலோ-மறவன்புலோ பொது நோக்கு மண்டபத்திலும் ஜே/299 தனங்கிளப்பு-தனங்கிளப்பு பொது நோக்கு மண்டபத்திலும் ஜே/311 மட்டுவில் நுணாவில்-மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்திலும் ஜே/309 கைதடி நுணாவில் குமரகுருபரன் முன்பள்ளியிலும் ஜே/295 நாவற்குழி கிழக்கு-பொது நோக்கு மண்டபத்திலும் ஜே/289 கைதடி கிழக்கு, ஜே/291 கைதடி தெற்கு, ஜே/297 கைதடிநாவற்குழி-கைதடி கமநல சேவைகள் நிலையத்திலும் ஏக்கர் வரியினை செலுத்துமாறும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, ஜே/298 மறவன்புலோ-சாவகச்சேரியிலுள்ள தலைவர் இல்லத்திலும் ஜே/299 தனங்கிளப்பு-சாவகச்சேரியிலுள்ள தனங்கிளப்பு தலைவர் இல்லத்திலும் ஜே/312மட்டுவில் மத்தி மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்திலும் ஜே/309 கைதடி நுணாவில் கைதடி நுணாவில் குமரகுருபரன் முன்பள்ளியிலும் ஜே/294 நாவற்குழி-கைதடி கமநல சேவைகள் நிலையத்திலும் ஏக்கர் வரிகளைச் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

# விசமிகளால் பாடசாலை முன்பகுதியில் குப்பை கூழங்கள் கொட்டப்படுகின்றன

(ஈச்சமோட்டை)

ஏழாலை மகாவித்தியாலயத்தின் முன் பகுதியில் பிரதான வீதியில் விசமிகளால் குப்பை கூழங்கள் கொட்டப்படுவதால் அப் பிரதேசத்தில் சென்று வரும் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். பல்வேறு சந்தர்ப்பங்கள் பாடசாலைச் சமுகத்தினராலும் மற்றும் சமூக நலன்விரும்பிகளாலும் குறித்த இடத்தில் கொட்டப்படும் குப்பைகளை எரித்து அழித்த போதிலும் தொடர்ந்து அப்பிரதேசத்தில் குப்பை கொட்டப்பட்டு வருகின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-105)

# பிரதேச சபைக் கூட்டத்தில் பூஞ்சணம் பிடித்த குளிர்பானம்



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபை விசேட கூட்டம் முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட குளிர்பானம் பழுதடைந்த நிலையில் உட்பகுதியில் கப் பூஞ்சணம் பிடித்த நிலையில் காணப்பட்டது.

இரண்டு ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டு முடிவு திகதி 14.5.2019 என அச்சிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பிரதேச சபை உறுப்பினர்கள் தவிசாளரிடம் கோரியுள்ளனர். (5-10)




சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியின் திறன் வகுப்பறை திறப்பு விழாவும் காணி கையளிப்பு நிகழ்வும் அண்மையில் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக பாடசாலையின் பழைய மாணவர், ஆசிரியர் சங்க ஐக்கிய இராச்சிய கிளை தலைவர் கு.சபாரட்ணம், தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி) திருமதி சிவத்திரை சிவநாதன், பழைய மாணவர் ஆசிரியர் சங்க ஐக்கிய இராச்சிய கிளை நிகழ்ச்சி... இணைப்பாளர் ஜெனி கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகியை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



திருமதி லோகேஸ்வரி ஸ்ரீரங்கநாதன்

(சேவைக்காலம் 29 வருடங்கள்)

அகவை அறுபதினை உவகை பெறத்
தொட்டு நிற்கும் எமது
பாடசாலை ஆசிரியை
திருமதி லோகேஸ்வரி ஸ்ரீரங்கநாதன்
அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புற
நீடூழி காலம்
எண்ணம் போல் இனிது வாழ
இறைவனை வேண்டுகின்றோம்.

கோப்பாய் தெற்கு
றோமன் கத்தோலிக்க
தமிழ்க் கலவன் பாடசாலை

Congratulations

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்

(8420)


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCY

Applications are invited by me up to 03.05.2019 from suitably qualified persons for the following post.

**WORKSHOP ENGINEER (GRADE III)**

**Qualifications:**

Should possess a B.Sc. In Engineering Degree specializing in Mechanical/Production Engineering from a recognized University/HEI.

**OR**

Should possess a national Diploma in Technology specializing in Mechanical/Production Engineering or equivalent qualification, with at least seven [07] years of experience in Mechanical workshop of a recognized establishment.

**NOTE:** The in-plant training period shall not be counted for the period of experience.

**Salary Scale:** U-EX 1(II)
Rs. 50,625-3X1,125-54,000[EB] 55,335;12X1,335-71,355/- p.m. (as at 01.01.2020)

**Selection** : By Structured Interview

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free Medical Care

Applications should be on specified forms issued by the University. Application form and particulars for the above posts can be downloaded only from the University website **www.jfn.ac.lk.** Applicants should deposit Rs.100/- at any branch of the People's Bank in favour of "University of Jaffna" Account No. **"162-1-001-6-0000880".** Applications must accompany the bank deposit slip and copies of relevant documents.

The envelope containing the duly filled application form must bear Title of the Post on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the **Deputy Registrar/Non-Academic Establishments** of this University on or before 03.05.2019.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received. Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR**
**University of Jaffna.**

(8060)


# மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்

திரு.கிருஷ்ணபிள்ளை சிவலோகநாதன்



பணிதன்னை ஏற்றகாலம்
முதலாய் நீங்கள்
என்றும் விஞ்ஞானமும்
நிர்வாகத்தின்
நுணுக்கமும்
கொண்டே நின்று
அணிகலன் ஆகி
எங்கள் பள்ளியை
அலங்கரித்த
மணிவிழாக் காணும்
நல்ல நாயகன்
வாழி வாழி

Best Wishes

சேவை விபரம்

01.10.1992-09.03.1994 கிளி/பரந்தன் இ.ம.வி
10.03.1994-09.10.1994 கிளி/முழங்காவில் ம.வி
10.10.1994-09.03.1996 கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்
10.03.1996-31.12.1999 கிளி/அக்கராயன் ம.வி
01.01.2000-31.12.2005 கிளி/கோணாவில் ம.வி
01.01.2005-31.12.2013 கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்
01.01.2014-08.12.2016 கிளி/கிளிநொச்சி ம.வி
09.01.2016-11.04.2019 மு/விசுவமடு ம.வி

எமது வித்தியாலயத்தின் ஆசிரியராகவும் பகுதித்தலைவராகவும் பணி புரிந்து 11.04.2019 இல் ஓய்வு பெறும் திரு.கிருஷ்ணபிள்ளை சிவலோகநாதன் அவர்களை வாழ்த்தி வணங்குகின்றோம்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
மு/விசுவமடு மகா வித்தியாலயம்

(8417)



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா:18 ½ சூரி செவ். 5 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L,மேற்பார்வையாளர்<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்உள்நாடுவெளிநாடு<br>தொ.இ: B/9551 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம் 1<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:B.Sc, MLT<br>எதிர்பார்ப்பு: Engineer, Doctor, Lecturer, அரசஉயர்பதவி,உள்நாடு<br>தொ.இ: G/9588 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி<br>கி.பா: 28 ¾<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L, France<br>எதிர்பார்ப்பு:A/L . உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/9552 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம் 3<br>கி.பா: 45<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்:A/L, NCSP<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்,உள்நாடு<br>தொ.இ: G/9589 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:அனுசம் 4<br>கி.பா: சூரி செவ் 11 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L, Qatar<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/9554 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம் 4<br>கி.பா: 19 ¼<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant, Lecturer, உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: G/9599 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்:165cm<br>தகைமை/தொழில்:BAபட்டதாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில். உள்நாடு<br>தொ.இ: B/9556 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 27¾ செவ் 12 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:O/Lஎதிர்பார்ப்பு: அரசதொழில்,உள்நாடு<br>தொ.இ: G/9546 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### "போர்க்குற்றங்கள் குறித்து புதிய அணுகுமுறையை கையாள வேண்டும்"

# காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு பத்தாண்டுகள் கடந்தும் தீர்வு வழங்கவில்லை!

## இலங்கை அரசு மீது உலகத் தமிழர் பேரவை அதிருப்தி

(கொழும்பு)

**யுத்தம் ஓய்ந்து 10 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு உரிய தீர்வு வழங்கப்படாமை அதிருப்தியளிப்பதாக உலகத் தமிழர்பேரவை தெரிவித்துள்ளது. அத்தோடு இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாக, இலங்கை அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய அணுகுமுறையை கையாள வேண்டும் என்றும் அப்பேரவை வலியுறுத்தியுள்ளது.**

தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் இடம்பெற்ற மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை அரசாங்கம் முன்வைத்த கருத்துக்களும் மாநாடு நிறைவடைந்து ஓரிரு வாரத்தின் பின்னர் வெளியாகின்ற கருத்துக்களும் அதிருப்தியளிக்கும் வகையில் இருப்பதாக அப்பேரவை தெரிவித்துள்ளது.

சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய நீதிப்பொறிமுறை உருவாக்குதல் உள்ளிட்ட பல பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு இலங்கை அரசாங்கம் மூன்று முறை ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டின் பிரேரணைகளுக்கு அனுசரணை வழங்கியுள்ளது என்றும் அதன்படி இலங்கை அரசாங்கம் நடந்து கொள்ள கடமைப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் வெளிநாட்டு நீதிபதிகளை உள்நாட்டு பொறிமுறையில் இணைக்க முடியாது என்று வெளிவிவகார அமைச்சர் நாடாளுமன்றில் வைத்து மீண்டும் கூறி இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தமிழர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

யுத்தம் நிறைவடைந்து 10 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் இன்னும் காணாமல் போனவர்களில் ஒரு குடும்பத்துக்கேனும் அவர்களது உறவுகள் குறித்த உண்மை நிலைமையை தெரிந்துகொள்ள முடியாதிருக்கின்றமை வருத்தமளிக்கின்ற விடயம் என்றும் உலக தமிழர் பேரவை தெரிவித்துள்ளது. (இ-7)

## இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா யாழ்.வருகை





(யாழ்ப்பாணம்)

முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எச்.எம். பௌசி, சுவிட்சர்லாந்து மற்றும் நெதர்லாந்து நாடுகளின் தூதுவர்களும் பங்களாதேஷின் உயர்ஸ்தானிகரும் நேற்று முன்தினம் பிற்பகல் ஆளுநரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு விஜயம் மேற்கொண்டனர்.

இதன்போது தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் நோக்கில் இதுவரையிலும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திராத றுகுணு பல்கலைக்கழகத்தின் 50 மாணவர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்தது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் 50 மாணவர்களுடன் தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தியிருந்ததுடன் அம்மாணவர்களை ஆளுநருடைய வாசஸ்தலத்திற்கு விஜயம் மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தினையும் வழங்கியிருந்தது.

றுகுணு மற்றும் யாழ்.பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் ஆளுநரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு நேற்று முன்தினம் பிற்பகல் வருகை தந்ததுடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க, ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், சுவிட்சர்லாந்து, நெதர் லாந்து தூதுவர்கள் மற்றும் பங்க ளாதேஷ் உயர்ஸ்தானிகர் உள்ளிட்டோருடன் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். (5-7)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் திடற்புலம் அருள்மிகு ஸ்ரீநரசிங்க வைரவர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவ விஞ்ஞாபனத்தை முன்னிட்டு ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் முதலாம் திகதி வரை இரவு 7.30 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒருங்கமைப்பில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இதில் 15 ஆம் திகதி சைவப் புலவர் சிவநெறிச்செம்மல் கா.கமலநாதன் விடயம் "சகலலோக ரட்சகி" 16ஆம் திகதி சைவசிம்மயர் சைவப்புலவர் பொன்.சந்திரவேல் விடயம் "திருமுறைகள் காட்டும் வாழ்க்கை நெறி" 17ஆம் திகதி இளம்சைவப்புலவர் ஆன்மீகத் திலகம் க.கைலநாதன் விடயம் "அன்பு வழி பாடு" 18 ஆம் திகதி சைவப்புல வர் சிவநெறிச்செம்மல் கா.கமலநாதன் விடயம் "மன்னவனையும் புலவனையும் வாழ்வித்த நாயகி" 19ஆம் திகதி சிவநெறிச்செம்மல் இளம்சைவப்புல வர் ச.நவநீதன் விடயம் "என்ன புண்ணியம் செய்தனை .... " 20ஆம் திகதி சைவசிம்மயர் சைவப்புலவர் ச.முகுந்தன் விடயம் "வழிபாட்டியலும் தத்துவம்" 21ஆம் திகதி சிவநெறிச் செம் மல் சைவசின்மயர் நித்தியபாபு தரன் விடயம் "மனிதனும் ஆன் மீகமும்" 22ஆம் திகதி சைவப் புலவர் சிவநெறிச்செம்மல் பொன் சந்திரவேல் விடயம் "பெரிய புராணம் காட்டும் இல்லறம்" 24ஆம் திகதி இளம்சைவப்புலவர் ஆன்மீகத்திலகம் க.கைலநாதன் விடயம் "யார் பெறுவார் அச்சோவே" 25ஆம் திகதி இளம் சைவப்புலவர் சைவசின்மயர் த.மனோஜ்குமார் விடயம் "திருவாக்கும் செய்கருமம்" 26ஆம் திகதி சிவநெறிச்செம்மல் சைவப் புலவர் கந்த சத்தியதாசன் விடயம் "உள்ளம் பெருங்கோவில்" 27 ஆம் திகதி சைவசிம்மயர் சைவப்புலவர் கா.கமலநாதன் விடயம் "விண்ணுலகு சென்று வாழ்வு பெற வைக்கும் விரதம்" 28ஆம் திகதி சைவப்புலவர் சைவசிம்மயர் பொன் சந்திர வேல் விடயம் "சித்தர்களின் வாழ்வு" 29ஆம் திகதி சைவப்புலவர் சைவசிம்மயர் கந்த.சத்தியநா தன் விடயம் "ஐந்தொழில் தத்து வம்" 30ஆம் திகதி இளம் சைவப் புலவர் சிவநெறிச் செம் மல் ச.நவநீதன் விடயம் "அறத் தான் வருவதே இன்பம்" 01ஆம் திகதி ஈழவூர் சைவப்புலவர் சிவஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் விடயம் "தேர் உற்சவச் சிறப் புக்கள்" சிறப்புச்சொற்பொழிவு சைவப் புலவர் சிவநெறிச் செம் மல் பொன் சந்திரவேல் விடயம் "ஆலய வழிபாட்டு முறைகள்"

**குறிப்பு:-** சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில் வழங்கப்படும். (இ-7)

## இரு கைத்துப்பாக்கிகள் மாயம்; விசாரணைகள் தீவிரமாக முன்னெடுப்பு

(அக்கரபத்தனை)

அக்கரபத்தனை பொலிஸ் நிலையத்தின் களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த 2 கைத்துப்பாக்கிகள் காணாமல் போனமை தொடர்பில் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா பொலிஸ் [illegible] யத்திற்கு உட்பட்ட அக்கரபத்தனை பொலிஸ் நிலையத்தின் துப்பாக்கி களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த 2 கைத்துப்பாக்கிகள் காணாமல் போனமை தொடர்பில் நுவரெலியா பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அத்தியட்சகர் ஐ.வூ.டீ. சுகத்தபால தெரிவித்தார்.

அக்கரபத்தனை பொலிஸ் நிலையத்தில் உள்ள துப்பாக்கி களஞ்சியசாலையானது குறித்த பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் பொறுப்பில் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு இருந்த 2 கைத்துப்பாக்கிகள் காணாமல் போயுள்ளதாகவும், கடந்த 23 ஆம் திகதி அக்கரபத்தனை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஆனந்தசிறியிடம் அறிவிக்கப்பட்டதாகவும் குறித்த நிலையத்தின் களஞ்சியசாலையில் இருந்த 2 கைத்துப்பாக்கிகளை பொலிஸ் உத்தியோகத்தர் மீது தனிப்பட்ட விரோதத்தில் இருக்கும் யாராவது 2 கைத்துப்பாக்கிகளை எடுத்து மறைத்து வைத்திருக்கலாம் என பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சந்தேகம் வெளியிட்டுள்ளார். (7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளின் 38 ஆவது குருபூசைத்தினம் இன்று



இலங்கை உட்பட உலக நாடுகளில் சைவசமயத்தையும், தமிழையும் அழியவிடாது இம் மாநிலத்தில் நிலை பெறச் செய்து சைவ மக்கள் மனதிலே நீங்கா இடம் பெற்ற ஸைவப் பெருந்தகை, நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன ஸ்தாபகர் நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளின் 38 ஆவது குருபூசைத் தினம் பங்குனி 28 ஆம் திகதி (11/4/2019) வியாழக்கிழமை. இன்று மேற்கு வீதி நல்லூரில் அமைந்துள்ள அவரின் சமாதி கோவிலிலே அவரை நினைவு கூர்ந்து சிறப்பு அபிஷேகங்களும், சிறப்பு வழிபாடுகளும் வெகு சிறப்பாக நடைபெற ஏற்பாடாகி உள்ளன.

நல்லூர் கந்தசுவாமி வருடாந்த மஹோற்சவ காலங்களில் கிட்டத்தட்ட 45 வருட காலத்திற்கு முன்பு 25 நாட்களும் நல்லூர் ஸ்ரீ முருகன் தண்ணீர் பந்தலில் இரவு 9 மணியில் இருந்து தொடர் கதாப் பிரசங்கம் செய்து பக்தர்கள் மனதிலே அழியா இடம் பிடித்து "மணி ஐயா" எனும் புனைப் பெயர் பெற்றவர். இத்தகைய சைவச் செம்மலின் கதாபிரசங்கத்தை நேரடியாகக் கேட்க முதியவர்கள் உட்பட அனைத்துப் பக்தர்களுமே திருவிழா முடிந்தவுடன் தண்ணீர் பந்தலில் ஒன்று கூடி விடுவார்கள். திரு விளையாடற்புராணம், கந்தபுராணம், இராமாயணம், மகாபாரதம் திருத்தொண்டர் புராணம் முதலியவற்றை தொடர் பிரசங்கமாக செய்வதில் இருவருக்கும் நிகரான எவரும் அன்று இல்லை என்றே கூறலாம். நல்லூர் கந்தன் ஆலய மேற்கு வீதியில் 1996 திருஞானசம்பந்தர் ஆதீனத்தை ஆரம்பித்த அவர் அதன் மூலம் பல அறப்பணிகளையும் மேற்கொண்டார். நல்லை ஆதீனத்திலே சங்கீத வகுப்பு, பாலர் வகுப்பு, பண்டித வகுப்பு, அறநெறி வகுப்பு மற்றும் பல இன்னோரன்ன பல வகுப்புக்களை யும் ஆரம்பித்து யாழ்.குடா நாட்டிலே சைவமும், தமிழும் தழைத்தோங்க தன்னாலான பல முயற்சிகளையும் மேற்கொண்டு அதில் கூடுதலான வெற்றியும் கண்டார்.

சுவாமிகளுடைய பிரசங்கம் இடம்பெறாத சைவக் கோவில்கள் இலங்கையில் இல்லை என்றே கூறலாம். சுவாமிகளின் பிரசங்க மகிமையினால் "முத்தமிழ் மணி" எனும் சிறப்புப் பட்டம் கொடுத்து கௌரவிக்கப்பட்டார். சுவாமிகள் இந்தியாவிலே உள்ள மதுரை ஆதீனத்திலே காஷயம் பெற்று துறவு பூண்டு தம்பிரான் சுவாமிகள் என்னும் திருநாமத்துடன் இங்கு வந்து நல்லூரிலே ஞானசம்பந்தர் ஆதீனத்தை ஆரம்பித்து எமது சைவ மக்களை தலைநிமிர வைத்தவர் அறப்பணிகள் செய்து சைவத்தையும், தமிழையும் நிலை பெறச் செய்த சுவாமிகள் 1981 இல் சமாதி நிலை அடைந்தார்.

**கந்தையா கனகசபை**
**சண்டிலிப்பாய்**

## ஜனாதிபதி ஆணைக்குழு அதிகாரிகள் விஜயதாஸவிடம் வாக்குமூலம் பதிவு

(நாவலை)

முன்னாள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் ஜனாதிபதி ஆணைக்குழு அதிகாரிகள் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

நாவலையிலுள்ள அவரது வீட்டில், நேற்றுப் புதன்கிழமை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் இந்த விசாரணைகளை மேற்கொண்டனர்.

முன்னாள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை நேற்றுக் காலை குறித்த ஆணைக்குழு வில் முன்னிலையாகுமாறு அழை ப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் சுகயீனம் காரணமாக தன்னால் அங்கு முன்னிலையாக முடியாது என்றும் இதன் காரணமாக தனது வீட்டில்வைத்தே வாக்குமூலம் வழங்குவதாகவும் அவர் குறித்த ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளார். அதற்கமைய அவரின் வீட்டிற்குச் சென்ற ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள், அவரிடம் வாக்குமூலம் பெற்றுள்ளனர். (இ-7)

## உயர் நீதிமன்றம் உத்தரவிட்டாலும் மாகாணத் தேர்தலை நடத்த முடியாது

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டமூலத்தின் ஊடாக மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும் என்ற போதிலும் அதனை எந்த அரசியல் கட்சியும் விரும்பவில்லை என முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டாலும் நடத்தப்படும் தேர்தல் முறை சம்பந்தமாக மீண்டும் பிரச்சினை எழும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனால், ஜனாதிபதி, மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பாக உயர் நீதிமன்றத்திடம் கருத்து கோருவதில் எந்த பயனும் இல்லை எனவும் ஜாகொட சுட்டிக்காட்டியுள்ளார்.

எல்லை நிர்ணய அறிக்கையை உருவாக்க பங்களிப்பு செய்த முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா உட்பட அனை வரும் அந்த அறிக்கையை தோற் கடித்தனர். இது மிகப் பெரிய கேலி.

இதனால், புதிய முறையில் தேர்தலை நட த்த முடியாது. இது நாடாளு மன்றத்தில் வைக்கப்பட்ட பொறி. தேர்தல் ஆணைக்குழு மற்றும் நீதிமன் றத்தினால், இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியாது.

உயர் நீதி மன் றம் தேர்தலை நடத்துமாறு உத் தரவிட்டால், தொகுதி எல்லை கள் தெரியாமல் தேர்தலை நட த்த முடியாது.

மாகாண தொகுதி எல்லைகள் நிர்ண யிக்கப்படும் வரை பழைய முறை யில் தேர்தலை நடத்தும் சட்ட த்தை கொண்டு வர நாடாளும ன்றத்திற்கு முடியும்.

எனினும் இதற்கான யோசனையை ஆளும் கட்சியோ எதிர்க் கட்சியோ கொண்டு வரப் போவதில்லை. இவர்கள் எவருக்கும் தேர்தல் அவசியமில்லை. அனைவரும் தேர்தலுக்கு பயம் எனவும் புபுது ஜாகொட தெரிவித்தார். (இ-7)

## தமிழக மீனவர்களுக்கு மறியல்

(யாழ்ப்பாணம்)

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழகம் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி அவர்களை எதிர்வரும் 16ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் அ.ஜூட்சன் உத்தரவிட்டுள்ளார்.

கடற்றொழில் நீரியல்வளத் துறை அதிகாரிகள் குறித்த மீனவர்களை ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி ஜூட்சன் வீட்டில் முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மீனவர்களை மருத்துவ சோதனைக்கு பின்னர் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் கடற்படையினர் ஒப்படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஒரே பிரசவத்தில் பிறந்த நான்கு குழந்தைகளுக்கு ஜனாதிபதி நிதியுதவி



(கொழும்பு)

விமானப்படை உத்தியோகத்தரான அயேஷா தில்ஹானி தனது முதலாவது பிரசவத்தில் நான்கு குழந்தைகளை பெற்றெடுத்தார். இரண்டு பெண் மற்றும் இரண்டு ஆண் குழந்தைகளினதும் பாதுகாப்பு, போசணை மற்றும் சுகாதாரத் தேவைகளை பூர்த்திசெய்வது இந்த இளந்தாய்க்கு சவாலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

பெற்றோர்களின் உதவியுடன் குழந்தைகளை பராமரித்தாலும் அரச உத்தியோகத்தர்களாகிய இந்த தாய், தந்தையர்களுக்கு குழந்தைகளை பராமரிப்பதற்கான செலவினை சமாளிக்க முடியாது. எனவே "ஜனாதிபதியிடம் சொல்லுங்கள்" நிகழ்ச்சித்திட்டத்திற்கு அழைப்பினை மேற்கொண்டு ஜனாதிபதியிடம் உதவி கோருவதற்குஅயேஷா அதனாலேயே முடிவு செய்தார்.

"ஜனாதிபதியிடம் சொல்லுங்கள்" நிகழ்ச்சித்திட்டத்திற்கு கிடைக்கப் பெற்ற இந்த அழைப்பு தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, குழந்தைகளின் பராமரிப்பிற்காக தலா ஐந்து இலட்ச ரூபா வீதம் நான்கு குழந்தைகளுக்கும்20 இலட்ச ரூபா நிதியுதவியினை வழங்கினார்.

நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்திற்கு வருகை தந்த திருமதி. தில்ஹானி, அவரது கணவர், தாயார்உள்ளிட்ட நான்குகுழந்தைகளுடனும்ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து நிதியுதவியை பெற்றனர்.(7)


தவத்திரு வே.முருகேசு சுவாமி அவர்களின் 22 ஆம் ஆண்டு குருபூசை



காலம்- 12.04.2019
வெள்ளிக்கிழமை
நேரம்- முற்பகல் 10 மணி
இடம்- சந்நிதியான் ஆச்சிரமம்
விசேட நிகழ்வு: முருகேசு சுவாமிகளின் குருபூசையுடன் கூடிய இன்னிசை நிகழ்வு
வழங்குபவர்-
திரு தெ.திருவேரகன்
(பக்கவாத்திய சகிதம்)

மேற்படி குருபூசை நிகழ்வானது ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசை வழிபாடுகளோடு ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் அறுபத்துமூவர் குருபூசையுடன் நிறைவுபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(8355)

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

சுவாமி அவர்களின்
அடியவர்கள் சார்பில்
ஆ.அருணாசலம்



பழைமை வாய்ந்த
ஆதி சக்தி வாய்ந்த
மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி. அம்பத்தன்ன 077 939 5222
Viber 076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிக்கட்டமைப்பை அபிவிருத்தி செய்ய 20 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு



(கொழும்பு)

கொழும்பு மாநகரில் நிலவும் வாகன நெருக்கடிகளினால் தினந்தோறும் ஒரு பில்லியன் ரூபா நிதியை நாடு இழப்பதாக அமைச்சர் கபீர் ஹாஷிம் தெரிவித்துள்ளார்.

அதற்கு தீர்வாக வீதிக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்யவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதற்கு இணங்க இந்த வருடத்தில் 146 கிலோ மீற்றர் நீளமுள்ள அதிவேக நெடுஞ்சாலையை திறப்பதற்கு எதிர்பார்ப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். அதிவேக நெடுஞ்சாலைகளை அமைப்பதற்குச் சமாந்தரமாக நாட்டின் கஷ்டப் பிரதேச கிராமப் புறங்களின் வீதிகளையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ரன்மாவத் வேலைத்திட்டத்தின் கீழ் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்து காப்பெற் இடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சமய தலங்களுக்குச் செல்லும் வீதிகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இத்திட்டங்களுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் 20 ஆயிரம் மில்லியனுக்கும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (7)

# வேலையற்ற பட்டதாரிகள் பதுளையில் ஆர்ப்பாட்ட பேரணி

(பதுளை)

ஊவா மாகாண வேலையற்ற பட்டதாரிகளால் நேற்று பதுளையில் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஊவா மாகாண முதலமைச்சரின் இல்லத்தை முற்றுகையிட்டு குறித்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், தமக்கான தீர்வை முதலமைச்சர் வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டவர்களால் தங்களது கோரிக்கை அடங்கிய மனு ஒன்றும் முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

# வெடிபொருட்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டோர் கைது



(கிண்ணியா)

கிழக்கு கடற்படை கட்டளை தலைமையகம் மற்றும் சீனக்குடா துறைமுக பொலிஸார் இணைந்து நேற்று முன்னெடுத்த ரோந்து நடவடிக்கையின் போது வெடிபொருட்களைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 251 கிலோ மீன் மற்றும் மீன்பிடிப் படகு, வெடிபொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்கள் 24 , 21 வயதுடைய கிண்ணியா மற்றும் வெள்ள மணல் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக மீன்பிடிக்கு பயன்படுத்திய படகு மற்றும் வெடிபொருட்கள் என்பவற்றுடன் சீனக்குடா துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (7)

# மாவனல்லை சிலை உடைப்பு விவகாரம்; கைதிகள் இருவர் பிணையில் விடுவிப்பு

(மாவனல்லை)

மாவனல்லை சிலை உடைப்பு விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இருவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மாவனல்லை சிலை உடைப்பு சம்பவத்துடன் தொடர்புள்ளதாக தெரிவித்து குறித்த இருவரும் கடந்த ஜனவரி மாதம் விசேட அதிரடிப்படையினால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதன் பின் அவர்களை 90 நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வழங்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மாவனல்லை நீதிமன்றத்தினால் இளைஞர்கள் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (7)

# தேசிய வருமான வரிகள் திணைக்களத்தின் புதிய ஆணையாளர் நாயகமாக நந்துன்குருகே



தேசிய வருமான வரிகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக நந்துன் குருகே நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்துக்கான அனுமதி நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

குருகே இதற்கு முன்னர் தேசிய வருமான வரிகள் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளராக கடமையாற்றிய ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# நேபாளத்தின் கியால்சன் சிகரத்திலேறி முதன்முறையாக 3 வீரர்கள் சாதனை

(காத்மண்டு)

நேபாளத்தின் உயரமான சிகரங்களில் ஒன்றான கியால்சன் சிகரத்தின் உச்சியினை 3 மலையேறும் வீரர்கள் முதன்முறையாக எட்டி சாதனை படைத்துள்ளனர்.

உலகின் முதல் உயரமான மலைகளில் எட்டு நேபாளத்தில் அமைந்துள்ளது. உலகில் மூன்றாவது உயரமான மலையான கஞ்சன்சுங்கா மலை, கிழக்கு சிக்கிமுடனான எல்லையில் அமைந்துள்ளது.

இதேபோல் நேபாளத்தின் ஜுகால் ஹிமால் பகுதியில் கியால்சன் சிகரம் உள்ளது. இது 6,151 மீற்றர் உயரம் கொண்டதாகும். இந்த சிகரத்தின் உச்சியை இதுவரை யாரும் அடைந்ததில்லை. இந்த மலையின் உச்சியினை எட்ட கடந்த வெள்ளி அன்று 6 பேர் கொண்ட குழு பயணத்தை ஆரம்பித்தது.

ஆனால், கால நிலைமாற்றத்தினால் மழை பெய்ததில் ஏற முடியாமல் திணறிய 3 பேர் ஹெலிகொப்டர் மூலம் மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதையடுத்து மாயா குருங், சர்மிளா தபா, மிலன் தமங் ஆகிய 3 மலையேறும் வீரர்களும் நேற்று முன்தினம் முதன் முறையாக சிகரத்தின் உச்சியை அடைந்து சாதனை படைத்துள்ளனர். (7)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்க அமைச்சரவை அனுமதி

(கொலன்னாவ)

கொலன்னாவ பிரதேசத்தில் வெள்ளத்தின் காரணமாக சேதமடைந்த 1070 வீடுகளுக்கு நட்டஈடு வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2016 ஆம் ஆண்டில் பெய்த கடும் மழையின் காரணமாக களனி கங்கை பெருக்கெடுத்தமை மற்றும் மழைநீர் முறையாக வழிந்தோடாமை போன்ற நிலைமையின் காரணமாக கொலன்னாவ பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டது.

இந்த வெள்ளத்தின் காரணமாக சேதமடைந்த சில வீடுகள் மற்றும் சொத்துக்களுக்காக தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தினால் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

இதில் 1070 வீடுகளுக்கு நட்டஈடு செலுத்துவதற்கென பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அரச நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் சமர்ப்பித்த ஒன்றிணைந்த பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (7)

# ஆளுநரின் பொதுமக்கள் தினம்



ஆளுநரின் பொதுமக்கள் தினம் கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் அமைச்சு செயலகத்தில் வடமாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் பங்குபற்றுதலுடன் நேற்று நடைபெற்றது. (7)



# நாயின் உயிரை காப்பாற்ற முற்பட்ட நபர் பலியானார்

(பண்டாரகம)

பண்டாரகம, ஜனஹித மாவத்தை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஆட்டோ ஒன்று பாதையில் சென்ற நாயைக் காப்பாற்ற முயற்சித்த போது கவிழ்ந்து சென்று எதிரில் வந்த வான் ஒன்றுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த ஆட்டோ சாரதி மற்றும் அவரது மனைவி பண்டாரகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஆட்டோ சாரதி உயிரிழந்துள்ளார்.

பாணந்துறை பகுதியை சேர்ந்த 63 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கக்கல் அகழ்ந்தவர்கள் கைது

(பொகவந்தலாவை)

பொகவந்தலாவை, பெற்றசோ டெவன்போல் தோட்டப் பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடு பட்ட குற்றச்சாட்டில் 6 பேரை நேற்று அதிகாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்

இது தொடர்பாகத் தமக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து குறித்த இடத்திற்குச் சென்று முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது இச்சந்தேக நபர்களைக் கைதுசெய்துள்ளதுடன், மாணிக்கக்கல் அகழ்விற்கு பயன்படுத்தபட்ட உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (7)

# மத ரீதியான பிளவுகள் வேண்டாம்

## மன்னாரில் சர்வமத மக்கள் கவனயீர்ப்பு







மன்னார் மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம் பெற்றுவரும் மத ரீதியான பிணக்குகள் இனியும் வேண்டாம் எனவும் மதம் எனும் அடையாளத்திற்காக எமது உரிமைக்காக நாம் சண்டையிட்டு பிரிந்து விடக்கூடாது எனவும் மதங்களை கடந்த மனிதத்தை நேசிப்போம் எனும் தொனிப்பொருளில் மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் குழுத்தலைவர் யாட்சன் தலைமையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது. ஆண்டாண்டு காலமாக கட்டி யெழுப்பப்பட்ட எமது ஒற்றுமை சில மத ரீதியான காரணங்களுக்காக தகர்க்கப்படக் கூடாது எனவும் மத ரீதியான பிரச்சினைகள் எல்லா இடங்களிலும் ஏற்படுவதுண்டு. அதை மதம் சார்ந்தவர்கள் கலந்துரையாடல்மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும் அல்லது நீதிமன்றம் ஊடாக தீர்த்துக்கொள்ள வேண்டும். அதை விடுத்து அப்பிரச்சினையை அடையாளப்படுத்தி மன்னார் மாவட்டத்தை பிரித்து விடாதீர்கள் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கைவிடுத்தனர். (7-250-285-315)

## கிராம சக்தி செயற்றிட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்



(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்ட கிராம சக்தி செயற்றிட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன் தினம் பிற்பகல் 2 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது

இந் நிகழ்வில் கிராம சக்தி செயற்றிட்ட யாழ், கிளிநொச்சி மாவட்டங்களின். ஒருங்கிணைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஷிரால் லக்திலக, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பிரதேச செயலாளர்கள் , அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் ,மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்

மீளாய்வு கலந்துரையாடலின் போது 2017 ஆம் ஆண்டின் கிராம சேவையாளர் ரீதியாக மூன்று வேலைத்திட்டங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட குழுக்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் ஆகியோர் கிராம சக்தி செயற்றிட்டத்தின் வகிபங்கு, மக்களின் ஒன்றிணைவு, எதிர்கால செயற்பாடுகள், மேம்படுத்தல் நடவடிக்கைகள் குறித்தும் அனுபவ ரீதியிலாக பெற்றுக் கொண்டிருந்த கருத்துக்களையும் தெரிவித்திருந்தனர். (7-312)

## சமுர்த்தி சௌபாக்கியா - 2019 சித்திரைப் புத்தாண்டுக் கண்காட்சி



சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் மன்னார் நகர பிரதேசச் செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த "சமுர்த்தி சௌ பாக்கியா-2019 சித்திரை புத்தாண்டு விற்பனைக் கண்காட்சிநேற்று புதன்கிழமை காலை 9 மணியளவில் மன்னார் பிரதேச செயலக பிரதான வீதியில் இடம் பெற்றது. இக் கண் காட்சிக்கு பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் எஸ். குணபாலன் கலந்து கொண்டார்.

விருந்தினர்களாக மன்னார் உதவிபிரதேச செயலாளர் திருமதி சிவசம்பு கனகாம்பிகை, கிராம அலுவல கர்களுக்கான நிர்வாக உத்தி யோகத்தர் ராதா பெர்னாண்டோ ஆகியோர்கலந்து கொண்டனர். (7-250-285)

## மாகாணக் கண்காட்சி ஆளுநர் தலைமையில்






(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் கிராமிய மட்டத்திலான உற்பத்தி பொருட்களுக்கான அறிமுகத்தினையும் சந்தை வாய்ப்பினையும் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் வடமாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் மாகாணக் கண்காட்சி ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனினால் நேற்று முன்தினம் காலை யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் கிராமிய மட்டத்திலான உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை இந்த கண்காட்சியில் காட்சிப்படுத்தியிருந்தார்கள்.

இக்கண்காட்சி நேற்றும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## புதுவருட விற்பனைச் சந்தை

(பூநகரி)

வடமாகாண தொழிற்றுறைத் திணைக்களம், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பூநகரி பிரதேச செயலகம் இணைந்து நடத்தும் மாபெரும் புது வருட விற்பனைச் சந்தை இன்றும். நாளையும் வடமாகாண தொழில் திணைக்களத்தின் அனுசரணையுடன் பூநகரி நாச்சிக்குடாச் சந்திக்கருகிலுள்ள சந்தை வளாகத்தில் முற்பகல் 9.30 மணிக்கு பூநகரி பிரதேச செயலர் சி.ச. கிருஸ்னேந்திரன் தலைமையில் இடம்பெறும்.

பல்வேறுபட்ட உள்ளூர் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்கள் சந்தைப்படுத்தப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (7-84)

## பூநகரி பிரதேச செயலகத்தின் வருடாந்த விளையாட்டுவிழா

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலகம் நடத்தும் வருடாந்த விளையாட்டு விழா நாளை 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பூநகரி ஜெயபுரம் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும்.

பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிருஸ்னேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொள்வார். (7-84)

## கிளிநொச்சி மாவட்ட அரங்க மரபு நூல் வெளியீட்டு விழா இன்று

சந்தாப்பிள்ளை யேசுதாசன் எழுதிய கிளிநொச்சி மாவட்ட அரங்க மரபு நூல் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கரைச்சி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் முத்தையன் கட்டு வலது கரை மகா வித்தியாலய அதிபர் சி. நாகேந்திரராசா தலை மையில் நடைபெறும்.

இதில் விருந்தினர்களாக கிளிநொச்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் செ. விந்தன், கிளிநொச்சி அன்னை இல்ல இயக்குநர் அருட்பணி அந் தோனி முத்து குரூஸ், கிளி நொச்சி பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன், கிளிநொச்சி பிரதேச சபை உறுப்பினர் திருமதி. விக்டர் சாந்தி, கிளிநொச்சி புனித திரேசாள் பெண்கள் கல்லூரி அதிபர் மரியாம்பிள்ளை அன்ரனி சாந்தா, கிளிநொச்சி பண்டிதர் பரந்தாமன் கலைக் கல்லூரி இயக்குநர் க. சவுந்தரராஜன் காவேரி கலாமன்ற நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் கு. லெபோறா ஜீவமலர் ஆகியோர் கலந்து கொள்வர். (7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## சூடு பிடிக்கும் தேர்தல் களம்

# பாலகோட் தாக்குதல் தொடர்பில் பிரதமர் மோடி தேர்தல் பிரசாரம்

## அறிக்கை கோரும் தேர்தல் ஆணையம்



பாலகோட் தாக்குதல் குறித்த பிரதமர் நரேந்திர மோடியின் பிரசார பேச்சு தொடர்பாக தேர்தல் ஆணையம் அறிக்கை கோரியுள்ளது.

இந்திய நாடாளுமன்ற தேர்தல் களம் தீவிரமடைந்துள்ள நிலையில் பிரதான கட்சிகள் தங்கள் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன.

இந்நிலையில் பிரதமர் நரேந்திர மோடி மராட்டிய மாநிலத்தில் மேற்கொண்ட பிரசார பொதுக் கூட்டத்தில், தேர்தலில் முதன் முறையாக வாக்களிக்கும் வாக்காளர்கள் பாலகோட்டில் தாக்குதல் நடத்திய இராணுவ வீரர்களுக்கு வாக்குகளை வழங்க வேண்டும் என பேசியிருந்தார்.

இராணுவ வீரர்களின் நடவடிக்கைகளை தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் பயன்படுத்தக் கூடாது என தேர்தல் ஆணையம் கடந்த மாதம் தடை விதித்திருந்தது. அதனை மீறி பிரதமர் இவ்வாறு பேசியதால் தேர்தல் ஆணையத்திடம் அரசியல் கட்சிகள் முறைப்பாடு செய்திருந்தன.

இந்நிலையில்தேர்தல் ஆணையம் மராட்டிய தேர்தல் அதிகாரியிடம் அறிக்கை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## ரபேல் போர் விமான விவகாரம்

# மத்திய அரசின் கோரிக்கை உச்ச நீதிமன்றால் நிராகரிப்பு

(டில்லி)

ரபேல் போர் விமான பேரம் தொடர்பான வழக்கில், சீராய்வு மனுக்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை ஆய்வு செய்யக்கூடாது என மத்திய அரசு கூறியதை உச்ச நீதிமன்றம் ஏற்க மறுத்துவிட்டது.

ரபேல் போர் விமான பேரம் குறித்து விசாரணைக்கு உத்தர விடக் கோரிய மனுக்களை உச்ச நீதிமன்றம் கடந்த டிசெம்பர் 14 ஆம் திகதி தள்ளுபடி செய்தது. ரபேல் ஒப்பந்தத்தில் தவறு எதுவும் நடைபெறவில்லை என கூறியது.

அந்த தீர்ப்பை மறுஆய்வு செய்யக்கோரி, முன்னாள் மத்திய அமைச்சர்கள் யஷ்வந்த் சின்கா, அருண் ஷோரி, சட்டத்தரணி பிரசாந்த் பூஷண் ஆகியோர் உச்ச நீதிமன்றில் சீராய்வு மனுக்கள் தாக்கல் செய்தனர்.

இந்த மனுக்கள் விசாரணைக்கு வந்தபோது, ஒரு ஆங்கில பத்திரிகையில் ரபேல் பேரம் குறித்த ரகசிய ஆவணங்கள் வெளியாகின. அதே ஆவணங்கள், சீராய்வு மனுக்களுடனும் இணைக்கப்பட்டுள்ளன. இந்த ஆவணங்கள், இராணுவ அமைச்சகத்தில் இருந்து திருடப் பட்டுள்ளதாக மத்திய அரசின் அட்டார்னி ஜெனரல் கே.கே. வேணுகோபால் உச்ச நீதிமன்றில் தெரிவித்தார். பின்னர், "ஆவணங்கள் திருடப்படவில்லை, நகல் எடுக்கப்பட்டுள்ளது" என்று அவர் கூறினார்.

அதன்பின்னர் சீராய்வு மனுக்களுக்கு மத்திய அரசு சார்பில் பிரமாண பத்திர மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அதில், ரபேல் ரகசிய ஆவணங்களை திருடி வெளியிட்டதால், தேச பாதுகாப்புக்கு அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், அந்த ஆவணங்களை உச்ச நீதிமன்றம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்றும் கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில் இவ்வழக்கு தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, மத்திய அரசின் கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிபதிகள், சீராய்வு மனுக்களை விசாரணைக்கு ஏற்றனர்.

சீராய்வு மனுக்களுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களை பரிசீலனைக்கு ஏற்க முடிவு செய்திருப்பதாகவும், அந்த ஆவணங்கள் மீது விரிவாக ஆய்வு செய்யப்படும் என்றும் நீதிபதிகள் கூறினர். (7)

# பிரெக்சிட்டை தாமதமாக்கும் மசோதாவுக்கு பிரிட்டன் ராணி ஒப்புதல் அளிப்பு

ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து விலகும் பிரெக்ஸிட்டை தாமதப்படுத்தும் மசோதாவுக்கு பிரிட்டன் ராணி ஒப்புதல் அளித்துள்ளார். ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து பிரிட்டன் ஒப்பந்தம் இல்லாமல் வெளியேறுவதற்கான காலக்கெடு எதிர்வரும் 12 ஆம் திகதியுடன் முடிகிறது. இது சாத்தியமானால் பிரிட்டனில் வேலை வாய்ப்பு, தொழில் மற்றும் பாதுகாப்பில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும்.

எனவே இதனை தவிர்க்கும் விதமாக 'பிரெக்ஸிட்' நடவடிக்கையை தாமதப்படுத்த வலியுறுத்தி பிரிட்டன் பாராளுமன்றத்தின் கீழ்சபையில் எதிர்க்கட்சியினர் மசோதா ஒன்றை தாக்கல் செய்தனர். இந்த மசோதா அங்கு ஒரே ஒரு வாக்கு வித்தியாசத்தில் நிறைவேறியது.

அதனைத் தொடர்ந்து அந்த மசோதா மேல்சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அங்கும் இந்த மசோதா ஒருமனதாக நிறைவேறியது. அதன் பின்னர் அந்த மசோதா ராணி எலிசபெத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அவர் இந்த மசோதாவில் கையெழுத்திட்டார். இதையடுத்து, ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து பிரிட்டன் ஒப்பந்தம் இல்லாமல் வெளியேறுவதை தடுக்கும் நடவடிக்கை சட்டமானது.

அதாவது இனி பிரிட்டன் ஒப்பந்தத்துடன் மட்டுமே ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து வெளியேற முடியும். இதற்காக பிரதமர் தெரசா மே ஐரோப்பிய கூட்டமைப்பு தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி 'பிரெக்ஸிட்' நடவடிக்கைக்கான காலக்கெடுவை நீட்டிக்க ஒப்புதல் பெற வேண்டும். (7)

# அமெரிக்காவில் மருத்துவ இன்சூரன்ஸ் மோசடி; 24 பேர் குற்றவாளிகள் என அறிவிப்பு

அமெரிக்க வரலாற்றிலேயே மிகப்பெரிய் அளவில் மருத்துவ இன்சூரன்ஸ் துறையில் மோசடி நடந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டதாக அமெரிக்க விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதில் நூற்றுக்கணக்கான நோயாளிகளை ஏமாற்றி 100 கோடி டொலர் மோசடி செய்த சதி அம்பலத்திற்கு வந்துள்ளது. இதில் சம்பந்தப்பட்ட 24 பேர் மீது குற்றச்சாட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

"மருத்துவ பொதுக் காப்பீடு இன்சூரன்ஸ் திட்டத்தில் இடம் பெற்றுள்ள முதியவர்கள் அல்லது மாற்றுத் திறனாளிகளுக்கு மணிக்கட்டு, முழங்கால் மூட்டு மற்றும் பாதிக்கப்பட்டுள்ள உடலின் மற்ற பாகங்கள் தருவித்து தருவதாகக் கூறப்படும் இத்திட்டத்தில் நூற்றுக்கணக்கான நோயாளிகள் ஈர்க்கப்பட்டனர்.

பிலிப்பைன்ஸ் மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளின் கால் சென்டர்களிலிருநது இயங்கும் ஒரு சர்வதேச டெலிமார்க்கெட்டிங் சந்தையின்மூலம் அவர்கள் ஈர்க்கப்பட்டனர்.

இதில் மோசடிக்காரர்கள் கையாண்ட நூதன உத்தி என்னவென்றால் பணத்திற்காக நியமிக்கப்பட்ட மருத்துவர்கள் நோயாளிகளை நேரடியாக சந்திக்காமலே தேவையான உறுப்புகளைப் பரிந்துரைக்க வேண்டும் என்பதுதான்.

இந்த மோசடி திட்டங்களி லிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் முழுக்க உலகளாவிய சர்வதேச அளவில் நடத்தப்படும் ஷெல் கார்ப்பரேஷன்ஸ் எனப்படும் போலி நிறுவனங்களால் சூறையாடப்பட்டன.

இத்திட்டங்களினால் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் தொகை இழப்பு ஏற்பட்டுள்ளது. இதற்காக 130 எலும்பியல் உபகரணங்கள் சப்ளையர்களுக்கு எதிராக நிர்வாக அபராதங்களும் வழங்கப்பட்டன. இவ்வாறு அமெரிக்க நீதித்துறை அறிவித்துள்ளது. (7)

# ஏமனில் குண்டு
# 15 பேர் பரிதாப



(சனா)

ஏமனில் உள்ள பண்டகசாலையை குறிவைத்து நடத்த ப்பட்ட வெடிகுண்டு தாக்குதலில் 7 மாணவிகள் உட்பட 15 பேர் உயிரிழந்தனர்.

ஏமன் நாட்டின் தலைநகரான சனாவிலுள்ள சில பகுதிகளை ஆக்கிரமித்துள்ள பல் வேறு புரட்சிப்படையினர் அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்டைநாடான சவுதி அரசின் உதவியுடன் புரட்சிப் படையினர் மீது ஏமன் இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

# ஐந்தாவது முறை
# இஸ்ரேல் பிரதமராக



இஸ்ரேலின் பிரதமராக 5 ஆவது முறையாகவும் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

120 இடங்களைக் கொண்ட இஸ்ரேல் பாராளுமன்றுக்கு நேற்று தேர்தல் நடைபெற்றது.

நேற்று முன்தினம் பதிவான வாக்குகள் உடனடியாக எண்ணப்பட்டன. இதில், தற்போதைய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கட்சி பெரும்பாலான இடங்களில் வெற்றியை பதிவு செய்துள்ளது.

96 சதவீத வாக்குகள் எண்ணப் பட்டுள்ள நிலையில், பெஞ்சமின் நெதன்யாகுவின் வலதுசாரி கட்சியான லிகுட் கட்சி 37 இடங்களை கைப்பற்றியதாக உள்ளூர் ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளன.

மையவாத நீல.வெள்ளை கூட்டணியின் தலைவரான ஓய்வுபெற்ற ஜெனரல் பென்னி கான்ட்ஸ் கட்சி 36 இடங்களில் வென்றதாக செய்திகள் வந்துள்ளன.

வலதுசாரி அமைப்புகள் ஆதரவுடன் கூட்டணி அரசை பெஞ்சமின் நெதன்யாகு

# ஜெய்ஷ் இ முகம்
# புல்வாமாத் தாக்

## விசாரணையில் தகவல்

(புல்வாமா)

புல்வாமா தாக்குதல் குறித்து ஜெய்ஷ் இ முகம்மது இயக்க தளபதி நிஷார் அகமது முன்கூட்டியே அறிந்து இருந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து நாடு கடத்தப்பட்ட ஜெய்ஷ் இ முகம்மது இயக்க தளபதி நிஷார் அகமது, விசாரணையின் போது இவ்வாறு தெரிவித்ததாக இந்துஸ்தான் டைம்ஸ் ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

புல்வாமா தாக்குதலுக்கு முக்கிய கர்த்தாவாக திகழ்ந்த பயங்கரவாதியான முதாசீர் கான், புல்வாமா தாக்குதலில் பங்கேற்க வருமாறு தனக்கு அழைப்பு விடுத்ததாக நிஷார் அகமது தந்த்ரே விசாரணையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ண்டுவெடிப்பு
## தாபமாக பலி!



இந்நிலையில், சனா நகரின் கிழக்கு பகுதியிலுள்ள சவான் என்னுமிடத்தி லுள்ள ஒரு பண்ட கசாலையில் நேற்று சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. இதற்கு சவுதி தலைமையிலான விமானப் படை களை புரட்சிப்படையினர் குற்றம்சாட்டியு ள்ளனர். அதேவேளையில், இச்சம்பவ த்துக்கு காரணம் ஹவுத்தி புர ட்சிப்படை யினர் தான் என ஏமன் அரசு குற்றம்சாட் டுகிறது. இந்த குண்டுவெடிப்பில் 7 மாண விகள் உட்பட 15 பேர் உயிரிழந்ததாக உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன. (7)

# லிபியாவில் வலுக்கும் மோதல்; உயிரிழப்பு 25 ஆக அதிகரிப்பு

(டிரிபோலி)

லிபியாவில் அரச எதிர்ப்பு படைகளுக் கும் அரச படைகளுக்கும் இடையில் இடம் பெற்றுவரும் தாக்குதலில் உயிரிழந்தவர் களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தலைநகர் டிரிபோலியில் முன்னெடுக்கப்பட்டுவரும் இத் தாக்குதலில், இதுவரையில் 25 பேர் உயிரிழந்துள்ளதுடன், 80 பேர் காயமடைந்துள்ளனர்.

ஜெனரல் காலிஃபா ஹஃ ப்தரின் அரச எதிர்ப்பு படைகள், தலைநகர் டிரிபோலியை கைப்ப ற்றும் முனைப்பில் கடந்த சில நாட்களாக போரிட்டு வருகின் றன.

இந்நிலையில், அரச படை கள் எதிர்த்தாக்குதலை நடத்த, உள்நாட்டு போர் உக்கிரமடைந் துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சண்டையில் தமது தரப் பில் இதுவரையில் 19 பேர் கொல் லப்பட்டுள்ளதாக ஹஃப்தரின் தரப்பு அறிவித்துள்ளது.



இதேவேளை, அங்கிருந்த மக்களை பாதுகாப்பாக வெளி யேற்றும் முனைப்பில், இரண்டு மணித்தியால யுத்த நிறுத்தத்தை ஐ.நா. கோரியிருந்தது.

எனினும், தொடர்ச்சியாக தாக்குதல் இடம்பெற்று வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிட த்தக்கது. (7)

## முறையாகவும்
## மராக நெதன்யாகு



அமைக்க உள்ளதாக உள்ளூர் ஊடக ங்கள் குறிப்பிட்டுள்ளன.

இதன் மூலம், பெஞ்சமின் நெதன்யாகு 5 ஆவது முறையாக பிரதமராக பதவி யேற்கவுள்ளார். கடந்த 13 ஆண்டுகளாக பிரதமர் பதவியில் நீடிக்கும் பெஞ்சமின் நெதன்யாகுவே நீடித்து வருவது குறிப் பிடத்தக்கது. (7)

# கஷோக்கி கொலையுடன் தொடர்புடைய 16 பேருக்கு நாட்டிற்குள் நுழையத் தடை

## அமெரிக்கா தீர்மானம்

(வோஷிங்டன்)

ஊடகவியலாளர் ஜமால் கஷோ க்கியின் கொலையுடன் தொடர் புடைய 16 பேரின் பெயர்களை வெளியிட்டுள்ள அமெரிக்கா அவர்கள் தமது நாட்டுக்குள் நுழைவதற்கும் தடை விதித்து ள்ளது. கஷோக்கி தொடர்புடைய 16 பேர் மட்டுமின்றி அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர் களுக்கும் இத்தடை விதிக்கப் பட்டுள்ளது.

சவுதி அரேபிய இளவரசர் மொஹம்மட் பின் சல்மானின் முன்னாள் உதவியாளர்கள் இரு வரும் இப்பட்டியலில் உள்ளடங் கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் இஸ்தான்புல்லில் அமை ந்துள்ள சவுதி தூதரகத்தில் வைத்து ஊடகவியலாளர் ஜமால் கஷோ க்கி படுகொலை செய்யப்பட்டார்.

இப்படுகொலைக்கும் சவுதி இளவரசருக்கும் தொடர்புள்ள தாக சர்வதேச நாடுகள் பலவும் குற்றம்சாட்டியுள்ள போதிலும் சவுதி அரசு அதற்கு மறுப்பு தெரி வித்து வருகிறது.

இந்நிலையில் அமெரிக்க வெளி யுறவுத்துறையினால் கஷோ க்கி யின் கொலையுடன் தொடர்பு டைய வர்கள் எனக் கருதப்படும் 16 பேரின் பெயர்கள் வெளியி டப்பட்டு ள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# அணுவாயுத நாடுகளின் பேச்சுவார்த்தை மூலமே காஷ்மீர் பிரச்சினையை தீர்க்க முடியும்-இம்ரான்கான்

(இஸ்லாமாபாத்)

அணுவாயுதங்களை கொண்ட நாடுகளின் பேச்சுவார்த்தை மூலமே காஷ்மீர் பிரச்சினை யைத் தீர்க்கமுடியும் என பாகிஸ் தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்ற தேர் தல்கள் நெருங்கியுள்ள இந்த காலப்பகுதியில் புல்வாமா தாக்கு தலைப் பயன்படுத்தி பிரதமர் நரேந்திர மோடி பிரசார நடவடிக் கைகளை மேற்கொள்வதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதன் காரணமாக காஷ்மீர் பிரச்சினையை இனியும் தொடர விடக்கூடாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் ஜம்மு -காஷ் மீர் பகுதியில் இடம்பெற்ற புல் வாமா தாக்குதலில் 45 சி.ஆர்.பி எப் வீரர்கள் கொல்லப்பட்டனர். இத் தாக்குதலுக்கு ஜெய்ஷ் இ முகமது இயக்கம் பொறுப்பேற்றதுடன் இது தொடர்பாக சர்வதேச நாடுகள் பல கண்டனம் தெரிவித் திருந் தமை குறிப்பிடத்தக்கது. (7)



# முகம்மது இயக்கத்தாலேயே தாக்குதல் நடத்த தீர்மானம்

## தகவல் உறுதியானது

போது குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் தெரிவித்துள்ளதாக அந்த நாளிதழ் செய்தி யில் கூறப்பட்டுள்ளது.

குறித்த தகவலுக்கமைய, பாகிஸ்தானி லுள்ள ஜெய்ஷ் இ முகம்மது இயக்கத்தா லேயே புல்வாமாவில் தாக்குதல் நடத்து வதற்கு தீர்மானிக்கப்பட்டமை மற்றும் பயங்கரவாதியான முதாசீர் கான் தாக் குதலை நடத்தியமை மீண்டும் உறுதியா கியுள்ளதாக குற்றப்புலனாய்வு அதிகாரி கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2017 ஆம் ஆண்டு புல்வாமா வின் லெத்போராவிலுள்ள துணை இரா ணுவ முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலு க்கு முக்கிய சதிகாரராக விளங்கிய நிஷார் அகமது தந்த்ரே. ஐக்கிய அரபு இராச்சியத்



திற்கு தப்பிச்சென்றார். அதனைத் தொடர்ந்து இந்திய அரசின் கோரிக் கையின் அடிப்படையில் அண்மை யில் நிஷார் அகமதுவை, ஐக் கிய அரபு இராச்சியம், நாடு கடத்தி இந்தியாவிடம் ஒப்படைத்தமை யும் குறிப்பிடத்தக்கது. (7)

# தாய்லாந்தின் மாய் காவோ கடற்கரையில் செல்பி எடுப்பவர்களுக்கு மரணதண்டனை

## அரசு எச்சரிக்கை

தாய்லாந்தில் கடற்கரையில் செல்பி எடுத்தால் அதிகபட்சம் மரணதண்டனை விதிக்கப்படும் என அந்நாட்டு அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தாய்லாந்தில் மாய் காவோ என்ற கடற்கரைப் பகுதிக்கு அரு கில் புக்கட் விமானநிலையம் அமைந்துள்ளது. அங்கு விமா னங்கள் ஏறும் போதும் தரை இறங்கும் போதும் கடற்கரைப் பகுதியில் சில அடி உயரத்தில் பறப்பது வழக்கம்.

இதன் காரணமாக இங்கு வரும் சுற்றுலா பயணிகள் விமா னங்கள் தரை இறங்க துவங்கும் போது செல்பி எடுப்பதை வாடிக் கையாகக் கொண்டிருந்தனர்.

இதனை விடுமுறை காலங் களில் சுற்றுலாவாசிகள் சமூக வலைத்தளங்களில் பதிவிடுவது முக் கிய அங்கமாகவே இருந்துள்ளது.

இந்நிலையில் விமானத்தின் என்ஜினில் இருந்து வெளியாகும் அதிவேக காற்றில் சிக்கி சிலர் தூக்கி வீசப்பட்டு உயிரிழந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதன் காரணமாக கடற்க ரைப் பகுதியில் விமானங்கள் முன் செல்ஃபி எடுக்க தடை விதி க்கப்பட்டுள்ளது. இதனை மீறு பவர்களுக்கு குறைந்த பட்ச தண் டனையாக 20 வருட சிறை தண் டனையும் அல்லது 40,000 பாஹ் வரை அபராதமும், அதிக பட்ச மாக மரண தண்டனையும் வழங் கப்படும் என்றும் தாய்லாந்து அரசு எச்சரித்துள்ளது. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையுடன் பரந்துபட்ட ஆழமான ஒத்துழைப்புக்கு நாம் தயார்

## சீனா இணக்கம் தெரிவிப்பு

(பீஜிங்)

இலங்கையுடன் பரந்துபட்ட ஆழமான நடைமுறை ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்குத் தயாராக இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

சீனாவின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட மாத்தறை தொடக்கம் பெலியத்தை வரையிலான தொடரூந்துப் பாதையில் பயணிகள் சேவை ஆரம்பிக்கப்பட்டிருப்பது குறித்து கருத்து வெளியிட்டுள்ள சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் லூ காங்,

"சீனாவின் எக்சிம் வங்கியின் நிதியில் மாத்தறை- பெலியத்தை தொடரூந்துப் பாதை கட்டப்பட்டது. இது தென்பகுதிக்கான பயணத்தை இலகுபடுத்தியுள்ளதுடன் உள்ளூர்ப் பொருளாதாரம். சமூக அபிவிருத்திக்கு பெரும் வாய்ப்பை வழங்கியுள்ளது.

.பாதை மற்றும் அணை முயற்சித் திட்டத்தின் கீழ் இலங்கை மக்களுக்கு மேலும் நன்மைகளைத் தரக்கூடிய வகையில் பரந்துபட்ட ஆழமான நடை



முறை ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு சீனா தயாராக இருக்கிறது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (7)

# சீனாவின் உலங்குவானூர்தி,கப்பல் தயாரிப்பு முதலீட்டாளர்கள் அம்பாந்தோட்டையில் ஆய்வு

(கொழும்பு)

சீனாவின் உலங்குவானூர்தி மற்றும் கப்பல் தயாரிப்புத் துறை முதலீட்டாளர்கள் குழுவொன்று அம்பாந்தோட்டையில் முதலீடுகளைச் செய்வதற்கான வாய்ப்புக் குறித்து நேரடியாக ஆராய்ந்துள்ளது.

நேற்று முன்தினம் சீன முதலீட்டாளர்கள் குழு. அம்பாந்தோட்டை மாநகரசபையின் உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடியது.

இதன்போதே. அங்குள்ள முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் அதற்கான தடைகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சீனாவின் உலங்குவானூர்தி மற்றும் கப்பல்களைக் கட்டும் முதலீட்டாளர்களும் பங்கேற்றதாக அம்பாந்தோட்டை மாநகர முதல்வர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலை அடுத்து சீன முதலீட்டாளர்கள் குழு தமது முதலீடுகளுக்குப் பொருத்தமான நிலங்கள் குறித்தும் ஆய்வுகளை மேற் கொண்டுள்ளது. (7)

# தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் சந்தா விபரங்களை வெளியிடத் தயார்

## வடிவேல் சுரேஷ் தெரிவிப்பு



இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் சந்தா விபரங்கள் உள்ளிட்ட முழுமையான நிதி அறிக்கையை ஊடகங்களுக்கு வெளியிடத் தயாராக இருப்பதாக அதன் பொதுச் செயலாளரும் பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக பெறப்பட்ட தகவல்களின்படி, தொழிற் சங்கங்கள் சந்தாப்பணமாக பல கோடி ரூபாய்களை பெற்றிருப்பதாக செய்திகள் வெளியாக்கப்பட்டிருந்தது.

இது குறித்து நேற்று முன்தினம் பதுளை - ஹாலி-எலயில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய வடிவேல் சுரேஷ், சந்தாப்பணத்தின் ஊடாக இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், பல்வேறு நிர்வாக செலவுகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார். (7)

# மகாவலி நிலையத்திற்கு புதிய பணிப்பாளர் நியமனம்



(கொழும்பு)

மகாவலி நிலையத்தின் புதிய பணிப்பாளராக முன்னாள் அமைச்சர் தயாஸ்ரீத திசேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார். (7)

# டி.ஐ.ஜி.இருவரின் சேவைக்காலம் நீடிப்பு

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.எம். விக்கிரமசிங்க மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவீ செனவிரத்ன ஆகியோருக்கு ஒரு வருட சேவைக்கால நீடிப்பு வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

டி.ஐ.ஜி.செனவிரத்னவுக்கு எதிர்வரும் 21 ஆம் திகதியும் டி.ஐ.ஜி.விக்கிரமசிங்கவுக்கு எதிர்வரும் 22 ஆம் திகதியும் குறித்த பதவிகளுக்கான காலம் நிறைவடையவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பாம்புகள்

பாம்பு என்று சொன்னால் படையே நடுங்குமென சொல்லுவார்கள். அதில்லாமல் நாம் என்ன பாம்புக்கு மட்டுமா நடுங்குகின்றோம். பல்லியைப் பார்த்துக்கூட பயப்படுகின்றவர்கள் உண்டு சேர்.

"பாம்புக்கும் கீரிப்பிள்ளைக்கும் சண்டை வரப் போகின்றது. பார்த்துவிட்டுப் போங்கள்!" எனச் சொல்லுவார் வித்தை காட்டுபவர். எல்லோரும் அவரைச் சுற்றி நிற்போம். பாதியில் எழுந்திருப்பார் ஒருத்தர் "நேரம் ஆகிவிட்டது. வீட்டுக்குப் போக வேண்டும்" என்பதற்காக அதைப் பார்த்தவுடனே வித்தை காட்டுபவர் சத்தம் போடுவார்.

"யாராவது பாதியிலே எழுந்துபோனால் அல்லது காசு போடாமல் போனால் உங்கள் கண்ணிலே இரத்தம் வரும்!" என்பார். எழும்பியவர் "கம்" என உட்கார்ந்திடுவார். பாம்பிடம் மனிதனுக்கு இருக்கிற பயத்தை காசாக்க முயற்சி இது! அதேமாதிரி இந்த பயத்தை பக்தியாகவும் ஆக்கிவிடுவதும் உண்டு.

பாம்புக்கு பழிவாங்குகின்ற குணம் இருப்பது போல சில புராணக்கதைகள் உண்டு. இப்பவும் சிலர் வழியில் பாம்பைக் கண்டால் அடித்து அது அடிவாங்கிவிட்டு தப்பித்துப் போனால் திரும்பவும்அந்த வழியால் நடப்பதற்குப் பயப்படுவார்கள். ஏனென்றால் திரும்பவும் அது தேடிவந்து பழிவாங்குமாம்! "இந்த ஆள் தான் நம்மைக் குச்சியாலே அடித்தான். அவனை சும்மாவிடக் கூடாது" நல்ல வேளை திரும்பவும் அந்த வழியால் போகும் போது மாறுவேடத்தில் போகும் அளவிற்கு இன்னும் யாரும் வரவில்லை.பாம்புக்கு பழிவாங்குகின்ற குணம் உண்டு என்று விஞ்ஞான பூர்வமான ஆதாரம் எதுவும் கிடையாது."நான் ஒரு நல்ல பாம்பைப் பார்த்தேன். அது தலையில் ஒரு மாணிக்கக்கல் இருந்தது!" என உண்மை போலவே கதைப்பார் ஒருத்தர். பாம்பு தலையிலே கல் இருந்ததெண்டு நம்புகிறவர் இல்லை அவர். கேட்பவர்கள் தலையில் களிமண் இருக்கு என நம்புபவர்.

பாம்பு தலையில் மாணிக்கமும் இல்லை. வைடூரியமும் இல்லை. சில பாம்புகளின் தலையில் 'கல்' மாதிரி ஒரு பொருள் உண்டு. கெட்டியான திசு அது. அதில் ஒளியெல்லாம் ஒன்றும் வீசாது. கிட்டப் போய் யாரும் உற்றுப் பார்த்திட்டு இருக்காதீர்கள்.

மணல் பாம்பு என்று ஒரு வகை இருக்கு. இதைப்பற்றி என்ன சொல்லுவார்கள் தெரியுமா? "இந்தப் பாம்புடைய தலை இருக்கே அது கொஞ்ச நாள் வால் பக்கம் வந்து இருக்குமாம்! வால் பக்கம் தலையிருந்த இடத்திற்குப் போயிவிடுமாம்!" என்பார்கள். இது பொய். இரண்டு பக்கமும் பார்ப்பதற்கு ஒரேமாதிரி இருப்பதனால் வந்த குழப்பம் இது!

நாக பாம்பும் சாரைப் பாம்பும் இணைந்து இனப்பெருக்கம் செய்வது என்பது தவறு. இனப்பெருக்கத்தைப் பொறுத்த வரையில் பாம்பிடம் ஒரு விசேட தன்மையுண்டு. என்ன தெரியுமா? பாம்பில் முட்டை போடுகின்ற வகையும் உண்டு. குட்டி போடுகின்ற வகையும் உண்டு. நாகபாம்பு முட்டை போடும். விரியன் பாம்பு குட்டி போடும். பாம்புக்கு கண், மூக்கு, நாக்கு எல்லாம் இருக்கு. ஆனால் காது கிடையாது. அதனால்காற்று மூலமாகவரும்ஒலிஅலைகளை(Sound waves) பாம்புகள் உணர்வதில்லை. பாம்பாட்டி மகுடி வாசிக்கிறார் என்றால் அதைக் கேட்டுக்கொண்டு அந்த ராகத்திலே மயங்கிப் போய் பாம்பு ஆடவில்லை! மகுடி ஆடுது அந்த அசைவைப் பார்த்துவிட்டு இதுவும் தலையை ஆட்டுகின்றது அவ்வளவுதான்.

நாம் கூட சில சமயம் இப்படி செய்வதுண்டு. கச்சேரி செய்பவர் என்ன ராகம் பாடுகின்றார் என்றெல்லாம் நமக்குத் புரியாது. இருந்தாலும் அவர் தலை ஆட்டிற்று இருப்பதைப் பார்த்து நாமும் தலையை ஏன் சும்மா வைத்திருக்க வேண்டும் எனச் சொல்லி ஆட்டிக்கொண்டிருப்போம். நம்மைப் பார்த்தவுடன் பக்கத்தில் இருப்பவர்களின் தலையும் ஆட ஆரம்பிக்கும்.

ஒன்று அவர் நம்ம ரகத்தைச் சேர்ந்தவராய் இருக்க வேண்டும். இல்லை என்றால் அவருக்கு தூக்கம் வந்திருக்கும்! அது தூக்கமாக இருந் தால் அவர் தலை உங்கள் தோளில் மோதி தாளம் போட ஆரம்பிக்கும். ஆதி தாளம் மாதிரி இது மோதி தாளம்!

அது இருக்கட்டும். பாம்பை விட்டிட்டு வேற எங்கோ வந்து விட்டோமே! திரும்பவும் அங்கேயே போவோம் வாங்க! பாம்பு தரை மூலமாக ஏற்படுகின்ற அதிர்வுகளை (Vibrations) கொண்டு சுற்றுச் சூழலைப் புரிந்து கொள்கின்றது. ஒரு சின்ன அதிர்வு இருந்தால் கூட அது எச்சரிக்கையாகிவிடும்.நண்டு, சிலந்தி, பல்லி மாதிரி பாம்பு தோலுரிக்கிறது! ஆனால் எதற்காக இப்படி செய்கிறது என்று நிச்சயமாகத் தெரியவில்லை! பாம்பு தண்ணீர் குடிப்பது அபூர்வமான செயல். நம் ஊர் கோயில்களில் பாம்புக்குப் பால் வைப்பது உண்டு. அதை வந்து பாம்பு குடித்தாலும் அது தண்ணிக்குப் பதிலாக பாலைக் குடிக்கின்றது என்று அர்த்தம். பாம்புக்கு பால் என்பது கட்டாயம் தேவைப்படுகின்ற உணவு இல்லை. இருந்தாலும் சிறுத்தை, மான், குரங்கு இவற்றை முழுங்கக் கூடிய மலைப்பாம்பும் உண்டு. நாக பாம்புடைய விஷம் மயிலைப் பாதிப்பதில்லை! ஒரு வகையான வான் கோழியையும் பாதிப்பதில்லை. பொதுவாக உலகத்தில் இருக்கிற பாம்பு வகையில் முக்கால்வாசிக்கு விஷம் கிடையாது.


சிலர் கண்ணாடிக் கூண்டு தயார் செய்து அதற்குள் விஷப் பாம்புகளை எல்லாம் பிடித்துப் போட்டு அதற்குள் இருந்து காட்டுவார்கள். அப்படி சாதனை செய்த ஒருத்தர் பாம்புக் கூட்டினுள் நுழையும் போதுமிகவும்துணிச்சலாதைரியமாக உள்ளே போனார். பத்து நாள் கழித்து சாதனை முடிந்து வெளியே வந்தார்.உடலெல்லாம் உதற ஆரம்பித்துவிட்டது. பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை!

"ஏன் இப்படி" என்று கேட்டார்கள்! "ஒன்றுமில்லை நான் திரும்பவும் எந்து வீட்டுக்குப் போய் குடும்பம் நடத்த வேண்டுமே! அந்த ஞாபகம் வந்துவிட்டது!" என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு இராசி பலன்கள் - 2019

## 14.04.2019 முதல் 13.04.2020 வரை



**தனுசு இராசி வாசகர்களே!**

விகாரி வருடம் தொடங்கும் பொழுது உங்கள் இராசிநாதன் குரு உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பது யோகம் தான். அவரோடு சனி மற்றும் கேது ஆகிய 2 கிரகங்களும் இணைந்திருக்கின்றார்கள். அஷ்டமத்தில் சந்திரன் சஞ்சரித்து வருடத்தொடக்கம் ஆரம்பமாகின்றது. சப்தம ஸ்தானத்தில் இராகு இருக்கின்றார். எனவே எதிர்பார்ப்புகள் அனைத்தும் தடையின்றி நடைபெறும் ஆண்டாக இந்த ஆண்டு அமையப்போகின்றது.

கோடிநலம் தரும் குரு பகவான் ஆரம்பத்தில் உங்கள் இராசியில் இருந்தாலும், பிறகு விருச்சிகத்திற்கு மாறிச் சென்றுவிடுகின்றார். விருச்சிகம் விரய ஸ்தானமாகும். எனவே விரயங்கள் உங்களுக்கு அதிகரிக்கும். முறையான பலனும், முன்னேற்றமும் ஐப்பசிக்கு மேல்தான் கிடைக்கும். அப்பொழுது குரு பகவான் மீண்டும் தனுசு இராசிக்குச் செல்கின்றார்.

இராசிநாதன் இராசியில் சஞ்சரிக்கும்பொழுது யோசிக்காது செய்த காரியங்களில் கூட உங்களுக்கு வெற்றி கிடைக்கும். வருடத்தொடக்கத்தில் செவ்வாய் 6 ஆம் இடத்தில் இருப்பது யோகம் தான். 6 இல் சஞ்சரிக்கும் செவ்வாயின் பார்வை 12 ஆம் இடத்தில் பதிகின்றது. 12 ஆம் இடம் செவ்வாய்க்குரிய வீடாகும். எனவே உடன்பிறப்புகளால் உங்களுக்கொரு நன்மை கிடைக்கும்.

ஆண்டின் தொடக்கத்தில் சூரியன் உச்சம் பெற்றிருப்பது யோகம்தான். 9 ஆம் இடத்திற்கு அதிபதி 5 ஆம் இடத்தில் உச்சம்பெறுவதால் பூர்வ புண்ணியத்தின் பலனாக உங்களுக்கு என்னவெல்லாம் கிடைக்க வேண்டுமோ அவையெல்லாம் உங்களுக்கு சிறப்பாகக் கிடைக்கும். ஜென்ம கேது 7 இல் இராகு இருப்பதால் மனக்குழப்பங்கள் அதிகரிக்கும்.

இந்த ஆண்டு தொடங்கும் பொழுது ஏழரைச் சனியில் ஜென்மச்சனி தொடங்கும் ஆண்டாக இந்த ஆண்டு அமைகின்றது. எப்பொழுதுமே ஏழரைச் சனியில் ஜென்மச்சனி நடைபெற்றால் நிம்மதி கிடைக்காது. நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகாது. எல்லாவற்றிற்கும் வடிகாலாக நீங்கள் செய்த புண்ணியம் குரு பகவான் உங்கள் வீட்டிலேயே சஞ்சரிப்பது தான். அதுமட்டுமல்லாமல் குருவின் பார்வை பூர்வ புண்ணிய ஸ்தானத்திலும் பதிகிறது.

சனி உங்கள் இராசிக்கு 2, 3 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். இரண்டாமிடம் என்பது தன ஸ்தானமாகும். 3 ஆம் இடம் என்பது சகாய ஸ்தானமாகும். அப்படிப்பட்ட ஆதிபத்யங்களைப் பெற்ற சனிபகவான் ஏழரைச்சனியில் 2 ஆவது சுற்றாக வருவபர்களுக்கு எந்தத் தீமையும் ஏற்பாது. முதல் சுற்றோ, மூன்றாவது சுற்றோ நடந்தால் கூடுதல் கவனம் தேவை. குறிப்பாக விரயங்களைச் சந்திக்க நேரிடும். குடும்ப இரகசியங்களை 3 ஆம் நபரிடம் சொல்வதன் மூலம் சில பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதன் முன் ஒருகணம் யோசித்து செயற்படுவதுதான் நல்லது.

### தனுசு குருவின் சஞ்சாரம்

**(14.4.2019 முதல் 17.5.2019 வரையிலும், மீண்டும் 28.10.2019 முதல் 13.4.2020 வரையிலும்)**

இக்காலத்தில் குருவின் பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிகின்றது. சொந்த வீட்டில் சஞ்சரித்து குரு பார்க்கும் பொழுது வந்த துயரங்கள் வாயிலோடு நிற்கும். தடைகற்கள் படிக்கற்களாக அமையும். புத்திர ஸ்தானத்தை குரு பார்ப்பதால் செய்த பரிகாரங்களுக்கு பலனாக இப்பொழுது புத்திரப் பேறு கிட்டும். பூர்வீக சொத்துக்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

குருவின் பார்வை பலத்தால் எதிரிகள் உதிரியாவர். எதிர்கால நலன் கருதி நீங்கள் தீட்டிய திட்டங்கள் அனைத்தும் வெற்றி பெறும். குறிப்பாக வெளிநாட்டு செல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டவர்கள் எண்ணியது போல காரியங்கள் கைகூடும். பழைய நகைகளைக் கொடுத்து விட்டுப் புதிய நகை வாங்கி அணிந்து அழகுபார்க்கும் சூழ்நிலை உருவாகும். வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள் விரும்பும் விதத்தில் அமையும். உத்தியோகத்தில் உழைப்பிற்கேற்ற உயர்வு கிடைக்கும்.

தந்தைவழி உறவில் இருந்த விரிசல் அகலும். முன்னோர்கள் கட்டிவைத்த ஆலயத் திருப்பணிகளை முறையாகச் செய்யவேண்டும் என்று நினைப்பீர்கள். பங்காளிப் பகை மாறும். பயணங்களுக்கு ஏற்ற விதத்தில் புதிய வாகனம் வாங்க முன்வருவீர்கள். புதிய பாதை புலப்படும். காரியத் தடைகள் அகலும்.

### விருச்சிக குருவின் சஞ்சாரம்

**(18.5.2019 முதல் 28.10.2019 வரை)**

இக்காலத்தில் குரு பகவான் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். குறிப்பாக 7.8.2019 வரை வக்கிர இயக்கத்திலும் பிறகு வக்கிர நிவர்த்தியாகி விருச்சிக இராசிக்குள்ளேயே உலாவருகின்றார். இதன் பலனாக 4, 6, 8 ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன. நலம் தரும் 4 ஆம் இடம் புனிதமடைவதால் நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறப்போகின்றது. மாலைசூடும் வாய்ப்புகளும், மகிழ்ச்சியான சம்பவங்களும் இல்லத்தில் நடைபெறப் போகின்றது. போட்டிகளுக்கு மத்தியில் உங்கள் முன்னேற்றம் கூடும்.

6 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் கடன் சுமை குறையப் புதிய வாய்ப்புகளும் உருவாகும். கடமையில் இருந்த தொய்வு அகலும். வேலையில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது வேலை கிடைக்கும். பணி நிரந்தரமாகாதவர்களுக்கு இப்பொழுது பணி நிரந்தரம் பற்றிய நல்ல தகவல் வந்து சேரும். பணி நீக்கம் செய்யப்பட்டுப் பலமாதங்களாக வீட்டில் இருந்தவர்களுக்கு இப்பொழுது மீண்டும் அழைப்புகள் வரலாம். வரும் வாய்ப்பை உபயோகப்படுத்திக் கொள்வது நல்லது.




**ஜோதிட கலாமணி சிவல்புரி சிங்காரம்**

மேலும் பழைய வாகனங்கள் பழுதாகி, பழுதாகி மனதை வாடவைக்கின்றது என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது புதிய வாகனம் வாங்க முன்பதிவு செய்வீர்கள். பிறமொழி பேசும் நண்பர்களால் நன்மை கிடைக்கும்.

தொழிலில் பழைய பங்குதாரர்களை விலக்கிவிட்டு புதிய பங்குதாரர்களைச் சேர்த்துக் கொள்வீர்கள். வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும்.

வெளிநாட்டில் பணிபுரிவதற்காக சென்று தாய்நாடு செல்ல முடியாமல் தத்தளிப்பவர்களுக்கு இக்காலத்தில் நல்லவர்களின் தொடர்பால் நலமும் கிடைக்கும், வளமும் கிடைக்கும். வீடு, இடமாற்றங்கள் உத்தியோக மாற்றங்கள் பற்றிச் சிந்திக்கும் நேரமிது. பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள் கிடைக்கும்.

### சனியின் சஞ்சார நிலை

ஆண்டு முழுவதும் சனி பகவான் ஜென்ம இராசியில் சஞ்சரிக்கின்றார். ஏழரைச் சனியில் ஜென்மச் சனியாக உலா வருகின்றார். இடையில் 8.5.2019 முதல் 3.9.2019 வரை தனுசு இராசியிலேயே வக்ரம் பெறுகின்றார்.

எனவே சனியின் பார்வை பதியும் இடங்களில் எல்லாம் நல்ல மாற்றங்கள் உங்களுக்கு வந்து சேரும். 3, 7, 10 ஆகிய மூன்று இடங்களிலும் சனியின் பார்வை பதிகின்றது. எனவே உடன் பிறப்புகள் வழியே உதவிகள் கிடைக்கும். கடன் சுமை தீர அவர்களது ஆலோசனை கை கொடுக்கும்.

எதிர்பாராத விதத்தில் இல்லத்தில் திருமணப் பேச்சுக்கள் முடிவாகலாம். வேலைப்பளு அதிகரிக்கும். விரும்பிய காரியங்களை விரும்பியபடியே செய்து முடிப்பீர்கள். பயண வாய்ப்புகள் பலன்தருவதாக அமையும்.

இக்காலத்தில் சனி கவசம் பாடி, சனி பகவானை வழிபடுவது நல்லது. சனிக்குரிய சிறப்பு ஸ்தலங்களான திருநள்ளாறு, திருக்கொள்ளிக்காடு, குச்சானூர், பெரிச்சிக்கோவில் போன்ற ஸ்தலங்களுக்கு வாய்ப்பிருக்கும்பொழுது சென்று வழிபட்டு வருவது நல்லது.

### இராகு-கேதுக்களின் சஞ்சாரம்

உங்கள் இராசியிலேயே கேதுவும், சப்தம ஸ்தானத்தில் இராகுவும் சஞ்சரிக்கின்றார்கள். இதன் விளைவாக சர்ப்ப தோஷம் உருவாகின்றது. எனவே ஏற்றமும், இறக்கமும் கலந்த வாழ்க்கைதான் உங்களுக்கு அமையும். ஒருதொகை கரைந்த பிறகே அடுத்ததொகை உங்கள் கரங்களில் புரளும்.

இன்பமும், துன்பமும் கலந்து வரும் இந்த நேரத்தில் இன்பங்களை மட்டுமே சந்திக்க விரும்புபவர்கள் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

மனஅமைதி கொஞ்சம் குறையலாம். மாற்றுக் கருத்துடையோர் எண்ணிக்கையும் குறையும். பொதுவாக இக்காலத்தில் விழிப்புணர்ச்சியோடு இருந்தால் விரயங்களிலிருந்து தப்பிக்க இயலும்.

### சனி செவ்வாய் பார்வைக்காலம்

**(14.4.2019 முதல் 23.6.2019 வரை)**

உங்கள் இராசிக்கு 2, 3 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. செவ்வாய் 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர்.

இவை ஒன்றையொன்று பார்த்துக்கொள்வதன் மூலம் பிள்ளைகளால் தொல்லை ஏற்படும். பிரச்சினைகள் அதிகரிக்கும். இடம் வாங்கியதை விற்க நேரிடும்.

உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக இருக்க மறுப்பர். கடன் சுமை ஏறாமல் பார்த்துக்கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

தனுசு இராசியில் பிறந்த பெண்களுக்கு, இந்தப் புத்தாண்டில் வளர்ச்சி கூடுதலாகவே இருக்கும். வரும் மாற்றங்களும் நல்ல மாற்றங்களாகவே வந்து சேரும். ஆரோக்கியத் தொல்லை அகல மாற்று மருத்துவம் கைகொடுக்கும். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. அப்பொழுதுதான் மன அமைதி கிடைக்கும். சுபகாரியப் பேச்சுக்கள் ஐப்பசிக்கு மேல் முடிவாகும். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. சிலருக்கு கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் வாய்ப்புகள் கைகூடலாம். தொழிலில் உங்கள் பெயர் நீக்கப்பட்டு மீண்டும் சேர்க்கப்படலாம். சர்ப்ப தோஷத்திற்கான கிரக அமைப்பு இருப்பதால் நிரந்தமாக நீங்கள் எந்த முடிவும் எடுக்க இயலாது. தடைகளும், தடுமாற்றங்களும் இடைஇடையே வரலாம். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்பட்டு அகலும். பொன். பொருட்கள் வாங்கும் யோகமும் உண்டு. அடகு வைத்த நகைகளை மீட்டுக்கொண்டு வந்து அணிந்து அழகு பார்ப்பீர்கள்.

தாய் மற்றும் சகோதரர்களின் ஆதரவு ஓரளவே கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு இடமாற்றங்கள், ஊர் மாற்றங்கள் வரலாம். உத்தியோகத்தில் நீண்ட நாட்களாக வரவேண்டிய சம்பளப் பாக்கிகள் வந்து சேரும். குல தெய்வ வழிபாடும், சர்ப்ப சாந்திப் பரிகாரங்களும் பலன் தரும்.

### வருடம் முழுவதும் வசந்தகாலமாக வழிபாடு

செல்வ வளம்பெருக சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயரை வழிபாடு செய்வது நல்லது. அனுமன் கவசம் பாடி வழிபடுவதோடு வெற்றிலை மாலையும் சூட்டலாம்.

திசைமாறிய குரு தட்சிணாமூர்த்தியை வழிபடுவதன் மூலம் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி பெறும் வாய்ப்பு உருவாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் கதைப்பதற்குகூட சுதந்திரம் இருக்கவில்லை

## ஸ்ரீநேசன் தெரிவிப்பு

(ஏறாவூர்)

**கடந்த கால மகிந்த ஆட்சியில் கதைப்பதற்குக் கூட சுதந்திரம் இருக்கவில்லை என நாடாளு மன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.**



மட்டக்களப்பில் சாதாரண தரத்தில் சிறப்பு சித்தி பெற்றவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "கடந்த ஆட்சிக்காலத்தில் தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டார்கள். பேசுவதற்கு சுதந்திரம் இல்லை. கதைப்பதற்கு சுதந்திரம் இருக்கவில்லை. நடமாடுவதற்கு கூட சுதந்திரம் இல்லாத நிலைமை காணப்பட்டது.

ஆனால் இன்று ஓரளவு சுதந்திரம் இருக்கின்றது. அபிவிருத்திகளை ஓரளவு செய்யக்கூடிய நிலையிருக்கின்றது.

கடந்த கால ஆட்சியை விட முன்னேற்றமான நிலையிருக்கின்றது. இருக்கின்ற ஆட்சியாளர்களில் ஓரளவு நல்ல விடயங்களை இந்த ஆட்சியாளர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

அதற்காகவே வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தோம். வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்காக 500கோடி ரூபாயினை ஒதுக்கியுள்ளார்கள்.

கிழக்கு அபிவிருத்திக்கான செயலணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதன் ஊடாக பல்வேறு அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதனூடாக வாழைச்சேனை காகித ஆலை உட்பட பல தொழிற்சாலைகளை புனரமைப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (7)

# "கோராத்வு" தாயகம் திரும்பியது



(திருமலை)

கடந்த ஏப்ரல் 07 ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்த இந்திய கடற்படை கப்பல் கோரா த்வு நேற்று வெற்றிகரமாக தனது விஜயத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பியது.

இலங்கை கடற்படையினரினால் நாட்டை விட்டு புறப்பட்ட இக்கப்பலுக்கு கடற்படை மரபுகளுக்கமைய பிரியாவிடையளிக்கப்பட்டன. (7)

# இலங்கைப் பொலிஸ் ஐ.நா.அமைதிப்படையில்


(ஜெனிவா)

ஐக்கிய நாடுகளின் அமைதிப்படை இராணுவத்துடன் இணைந்து கடமையாற்ற, இலங்கையின் பொலிஸ் அதிகாரிகள் 69 பேருக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையினால் நடத்தப்பட்ட விசேட நேர்முகப் பரீட்சையின் பின்னரே குறித்த 69 பேருக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளதென்றும், இந்த 69 பேரில் பொலிஸ் கான்ஸ்டபிள் தொடக்கம் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் வரை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தமது கடமைகளை ஆரம் பிப்பதற்கு முன்னர் அவர்களது பின்னணி குறித்த அறிக்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஊடாக பெறுக் கொள்வதற்கு ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (7)

# தாமரை மொட்டில் மலர்ந்த நாமலின் பிறந்தநாள் குவியும் வாழ்த்துக்கள்





(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று தனது பிறந்தநாளை வெகு விமர்சையாக கொண்டாடியுள்ளார்.

1986ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி பிறந்த நாமல் ராஜபக்ஷ நேற்று தனது 32ஆவது பிறந்தநாளை கொண்டாடினார்.

இந்த நிலையில் நேற்று அதிகாலை தாமரை மொட்டில் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டார். இதேவேளை, அவரை வாழ்த்துவதற்காக அவரின் நண்பர்கள் அங்கு திரண்டிருந்ததுடன், அரசியல்வாதிகள் பலரும் அங்கு சென்று பிறந்தநாள் வாழ்த்து கூறியுள்ளனர். (7)

# சுவரில் மோதிய பேருந்து; 11 பார்வையற்றோர் படுகாயம்

(சிலாபம்)

பேருந்து மோதி இடிந்து விழுந்த மதில் சுவரில் சிக்கி கண் பார்வையற்ற 11 பேர் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை நடந்ததாக சிலாபம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சிலாபம் சுதுவெல்ல பிரதேசத்தில் கடற்கரையில் உள்ள மண்டபம் ஒன்றில் நடைபெற்ற வைபவத்திற்கு நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பார்வையற்றோர் கலந்து கொண்டுள்ளனர்.

வைபவம் முடிந்து வீடுகளுக்கு திரும்புவதற்காக அவர்கள் மண்டபத்திற்கு எதிரில் இருந்துள்ளனர். அப்போது அவர்களை ஏற்றி செல்ல வந்த தனியார் பேருந்து, திரும்பிச் செல்ல திருப்பப்பட்ட போது, பேருந்து பெயர்ப்பலகை பொருத்தப்பட்டிருந்த மதில் சுவரில் மோதியுள்ளதுடன் சுவர் இடிந்து விழுந்துள்ளது.

இதனால், சுவருக்கு அருகில் நின்றுகொண்டிருந்த பார்வையற்றோர் உடைந்து விழுந்த சுவரில் சிக்கி காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (7)

# வெலிக்கடைச் சிறைச்சாலையில் சயனைட் குப்பிகள், ஊசிகள் மீட்பு

(வெலிக்கடை)

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதியொருவரிடமிருந்து, சயனைட் குப்பிகள் இரண்டும் மருந்து ஏற்றப்பட்ட ஊசிகள் இரண்டும், புலனாய்வுத் துறை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன என, பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண புலனாய்வுத்துறை பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவல்களை அடுத்து, கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலின் போதே, இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

அந்தத் தேடுதலில், சயனைட் அடங்கிய சயனைட் குப்பிகள் இரண்டு, மருந்து ஏற்றப்பட்ட ஊசிகள் இரண்டும் கைப்பற்றப்பட்டன. அதனை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தில், கைதியொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விவகாரத்துடன் தொடர்புடைய சந்தேக நபரான அந்தக் கைதி, ஹெரோயின் போதைப் பொருள் தொடர்பிலான வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு, சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். அவர், "மரால சுரங்க" என்றழைக்கப்படும் சமன் புஷ்ப குமார என அடையாளம் காணப்பட்டுள்ளார். (7)

# புத்தாண்டுக் காலத்தில் அதிக கட்டணம் அறவிடும் பேருந்துகளின் அனுமதிப்பத்திரங்கள் இரத்தாகும்

## அர்ஜுன ரணதுங்க நடவடிக்கை



(கொழும்பு)

சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில் பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளிடமிருந்து அதிக கட்டணம் அறவிடும் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக, போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

புத்தாண்டுக் காலத்திற்கு பின்னர், தங்களது கடமையின் நிமித்தம் பஸ்களில் பயணிக்கும்போது, பெரும்பாலான பஸ்களில் அதிக கட்டணம் அறவிடப்படுவதாக, பயணிகள் கவலை வெளியிட்டுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கமைய, பஸ்களில் பற்றுச்சீட்டு வழங்குதல் மற்றும் அதிக கட்டணம் அறவிடுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை கண்காணிக்கவுள்ளதாகவும், இதற்காக அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

அத்தோடு, பஸ் வண்டிகளில் அதிக கட்டணம் அறவிடப்படும் பட்சத்தில் 1955 எனும் இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறிவிக்க முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

**ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)**

கலாநிதி மு.குணசிங்கம்

218



சைமன் காசிச்செட்டி

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

மோணிங்ஸ்ரார் (Morning Star), கத்தோலிக்க பாதுகாவலன் (The Catholic Guardian), தி எக்ஸாமினர் (The Examiner), த சிலோன் ஒப்சேவர் (The Ceylon Observer), த சிலோன் ரிவியூ (The Ceylon Review) போன்ற செய்திப் பத்திரிகைகள் இச் சம்பவங்களையிட்டுச் செய்தி வெளியிட்டு முத்துக்குமாரசுவாமியைப் பாராட்டின.

அவருடைய பிரபலமும் புகழும் தமிழ்ச்சமூகத்தை பெருமையடையச் செய்து மக்களின் உரிமைகளுக்காகப் போராடும் தன்னம்பிக்கையையும் துணிவையும் எதிர்கால அரசியல்வாதிகளுக்கு அளித்தன.

இலங்கையில் மக்கள் வருங்கால அரசியல் பிரமுகர்கள் ஆகிய இருசாராருக்குமே அவர் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

கொழும்பு வர்த்தகரான சைமன் காசிச்செட்டி (Simon Casei Chetty) *1838-· 1845* வரையில் சட்ட நிருபண சபையில் அங்கம் வகித்தபோதும் அவரால் தமிழரின் வடக்கு- கிழக்குப் பிரதேசங்களின் பிரச்சினைகளை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை.

முத்துக்குமாரசுவாமி தமிழரின் பல்வேறு சமூகப் பிரச்சினைகளை சபைக்கு எடுத்துச் சென்ற போதும் அவர் ஓர் இலங்கைத் தேசியவாதியாகவே காணப்பட்டார். அத்தோடு அவர் அங்கத்தவராக இருந்த காலப்பகுதியில் அதிக வருடங்கள் இங்கிலாந்தில் கழித்திருக்கிறார்.

எனவே வடக்கு- கிழக்கு பிரதேச மக்களையோ, இப் பிரதேசத்தின் அபிவிருத்திகள் பற்றியோ அநேகமாகப் பாராமுகமாகவே இருந்திருக்கின்றார் என்றே கொள்ள வேண்டும்.

பொன்னம்பல முதலியாரின் மகனும் முத்துக்குமாரசுவாமியின் மருமகனுமான பொ. இராமநாதன் உயர்வாகக் கணிக்கப்பட்ட போட்டியாளர்கள் மத்தியிலிருந்து முத்துக் குமாரசுவாமியின் பதவி வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட்டார்.

இந்த மட்டத்திலே நிலவிய போட்டி மனப்பான்மை தமிழர் எவ்வளவுக்கு அரசியல் நடை முறைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதை விளக்குவதில் முக்கியமாகின்றது.

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் கொழும்பிலும் வாழ்ந்த உள்ளூர் தமிழ் மக்கள், சட்ட நிருபண சபைக்குத் தமிழ்ப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் துடிப்பாகப் பங்குபற்றினர்.

தமிழ் மக்களினது சமய, கலாசார, மொழிப் பாரம்பரியங்களின் நலனைக் கருத்திற் கொண்டு, மிகப் பொருத்தமான வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதில், ஆறுமுகநாவலரும், உள்ளூர் உயர் மட்டத்தினரும் உற்சாகமாக அக்கறை செலுத்தினர்.

விசேடமாக நாவலர், எவ்வளவுக்கு அதிகமாகத் தமிழ் மக்களை அரசியலில் பங்கு பெறச் செய்ய முடியுமோ அவ்வளவுக்கு அவர்களை ஈடுபட செய்யப் பாடுபட்டார். ஆறுமுக நாவலரின் பல்வகைத்தான பணிகள் யாவும் எவராலுமே அவரைப் போல் செயற்பட முடியாதவையாக இருந்தன.

முன்னைய அத்தியாயங்களில் நாம் பார்த்தது போன்று, ஊதியம் எதிர்பாரா ஆசிரியர் , பாடசாலைகளின் தாபகர், நிர்வாகி அச்சுக்கூட உரிமையாளர், புத்தக வெளியீட்டாளர், விமர்சகர் , உரையாசிரியர், பத்திராதிபர், மொழி பெயர்ப்பாளர், புலவர், அரிய எழுத்துச் சுவடி சேகரிப்பாளர், பேச்சாளர், வாதத்திறமை மிக்க எழுத்தாளர், சிறு பிரசுர வெளியீட்டாளர், புத்தக ஆசிரியர், விண்ணப்பதாரர் , கொள்ளை நோய் பஞ்ச காலத்தில் மக்கள் துயர் களைபவர், மனுக்கள் மூலம் மக்களின் துன்பங்களை வெளிப்படுத்தியவர், பொதுக் கூட்டங்களையும், விவாதங்களையும் ஒழுங்கு செய்தவர், வழக்காளி , அடிக்கடி இந்தியாவிற்குப் பயணம் செய்தவர் எனப் பல்வேறு வகையில் அவர் செயற்பட்டதை நாம் எடுத்துக் காட்ட முடியும்.

மனித இனத்தை மேம்படுத்தவும் தமிழரின் சமய, கலாசார, மொழி, சமூக விழுமியங்களைப் பாதுகாக்கவும், நவீன உலகில் தமிழர் மேலும் சிறந்து வாழ்வதற்கு அவர்களை தயார் செய்யவும் இவை யாவற்றையும் நாவலர் ஒன்றிணைத்துச் செயற்பட்டார்.

மேற்குறிப்பிட்ட துறைகளுடன் மட்டும் நாவலரின் சாதனைகள் நின்றுவிடவில்லை. அவர் தனது கடைசிக் காலத்தில் தமிழ்ச் சமூகத்தின் நிலையை உயர்த்துவதற்காக சமூக, அரசியல் கருமங்களிலும் ஈடுபட்டிருந்தார்.

1874 இல் இருந்து, தென்னிந்தியாவில் அவர் இராமலிங்க வள்ளலாருடன் நிகழ்த்திய நீண்ட சமய வாதங்களின் பின்னர் அவர் நாடு திரும்பி, தமிழரைப் பாதிக்கின்ற சமூக, அரசியல் பிரச்சினைகளுக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்.

நாவலரது சமூக, அரசியல் செயல் முனைப்பு, இந்தியாவில் தமிழர் மத்தியிலான சமூகக் கருமங்களில் இராமலிங்க வள்ளலார் கொண்டிருந்த ஈடுபாட்டின் செல்வாக்கின் காரணமாக ஏற்பட்டிருக்கவும் கூடும்.

ஆனால் இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், நாவலர் தனது சமூக, அரசியல் பாத்திரத்தை மேலும் விஸ்தரித்துக் கொண்டார் என்பதாகும்.

உதாரணமாக 1876இலும் 1877 இலும் கடும் வரட்சி காரணமாக தீபகற்பத்தில் ஏழ்மை நிலவிய போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவளிப்பதில் சளைக்காது பாடுபட்டார்.

அவர்கள் கலாசார கொள்ளை நோயினாலும் பாதிக்கப்பட்டிருந்த போது நாவலர் இதனைச் செல்வந்தர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து , அவர்களுடன் இணைந்து இந்த நோயை அழிக்க அயராது உழைத்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 மெகா வோல்ட்ஸ் வலுக்கொண்ட மிதக்கும் சூரிய மின் நிலையம் அமைக்க ஒப்பந்தம் கைச்சாத்து



(கொழும்பு)

மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தில் 100 மெகாவோல்ட்ஸ் வலுவுடைய மிதக்கும் சூரிய மின்சக்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்கு மின்வலு, சக்திவலு மற்றும் தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சுக்கும் கனேடியன் கொமர்ஷியல் கோப்போரேஷன் (Canadian Commercial Corporation) நிறுவனத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இடம்பெற்றது.

மின்சக்தி பிரச்சினைக்கு தீர்வளிக்கும் முகமாக குறைந்த செலவிலான புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி முறைகளை கையாளும் முகமாக மகாவலி பொருளாதார வலயங்களுக்குட்பட்ட நீர்த்தேக்கங்களில் மிதக்கும் சூரியசக்தி மின் நிலையங்களை நிர்மாணிக்கும் வேலைத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு, மின்வலு, சக்திவலு மற்றும் தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சு ஆகியன முன்வைத்த பிரேரணைக்கு அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது.

அதற்கமைய பல பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படும் இவ்வகையான மிதக்கும் சூரிய சக்தி மின் நிலையங்களினால் 2030 ஆம் ஆண்டளவில் இந்நாட்டு மின்சார தேவையின் 50 சதவீதத்தை புதுப்பிக்கத்தக்க மின் சக்தியினால் பூர்த்திசெய்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன் முதலாவது வேலைத் திட்டம் மகாவலி வலயத்திற்குட்பட்ட மாதுறு ஓயா நீர்த் தேக்கத்தை மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன், சூரிய படல்கள் மற்றும் மின்சாரத்தை சேமிக்கக்கூடிய மின்கலங்களைக் கொண்டு சூரிய சக்தியை சேமிக்கும் செயற்றிட்டம் Canadian Commercial Corporation நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படவுள்ளது. குறித்த வேலைத்திட்டத்திற்கு நீர்த்தேக்கத்தில் 500 ஏக்கர் அளவிலான இடத்தை பயன்படுத்த எண்ணியுள்ளதுடன், அந்தப் பரப்பளவு நீர்த்தேக்கத்தின் நூற்றுக்கு 4 சதவீதத்தைவிட குறைந்ததாகும்.

இந்த செயற்றிட்டத்தை துரிதமாக நிறைவுசெய்ய திட்டமிட்டுள்ளதுடன் முதலாவதாக 10 மெகாவோல்ட்ஸ் மின்சாரத்தை இந்த ஆண்டு நவம்பர் மாத இறுதியில் பூர்த்தி செய்வதற்கும் 2020 செப்டெம்பர் இறுதியில் 100 மெகாவோல்ட்ஸ் மின் உற்பத்தியை அடைவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முன்னிலையில் மின்வலு, சக்திவலு மற்றும் தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுரேன் பட்டகொட மற்றும் Canadian Commercial Corpo ration நிறுவனத்தின் ஆசிய வலயத்திற்கான பணிப்பாளர் Yvonne Chin உம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைசாத்திட்டனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மின்வலு, சக்திவலு மற்றும் தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அநுர திஸாநாயக்க ஆகியோரும் மின்வலு, சக்திவலு அமைச்சின் அதிகாரிகளும் இலங்கைக்கான கனேடிய தூதுவர் David McKinnon மற்றும் Canadian Commercial Corporation நிறுவனத்தின் பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (7)

# திருகோணமலை-மொரவெவ பிரதேச சபையின் அவசர தேவைகள் உடன் தீர்க்கப்படும்

## கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லா உறுதி



(திருமலை)

திருகோணமலை - மொரவெவ பிரதேச சபையின் அவசரத் தேவைகள் உடன் தீர்க்கப்படும் என ஆளுநர் ஹிஸ்புல்லா உறுதியளித்துள்ளார்.

மொரவெவ பகுதியில் அமைக்கப்பட்ட W.R.நம்பண்டா ஞாபகார்த்த மண்டபம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா பிரதம விருந்தினராக பங்கேற்று மண்டபத்தின் பெயர்ப் பலகையினை திரை நீக்கம் செய்துவைத்தார்.

இதனைத் தொடர்ந்து கல்வி, சுகாதாரம் மற்றும் சபையின் அவசியத்தேவைகள் குறித்து பிரதேச சபையின் உறுப்பினர்கள் ஆளுநர் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

அவசரமாக தீர்க்கப்பட வேண்டிய தேவைகள் தொடர் பாக உரிய அதிகாரிகளுக்கு தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற் கொள்ளுமாறு உத்தரவு பிறப்பித்தார். (7)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1691

Search for people, places and things

### அபி

காய்ச்சல்னு சொல்லி லீவு கேட்கிற உடம்பு நல்லாத்தானே இருக்கு!
அது மர்மக் காய்ச்சல் டீச்சர்!



### சாந்தன்

இப்படி ஒரு காட்சியை இனிமேல் காண்பது அரிது



### நிமலன்

அம்புலன்ஸ்க்கு சிறுவழி விடுங்கள்.. அதில் எரியும் சிவப்பு விளக்கு ஒரு பெண்ணின் குங்குமமாகக் கூட இருக்கலாம்




### வருண்

உங்களுக்கு பேய்னா பயமா...?
அதுக்கெல்லாம் பயந்தா குடும்பம் நடத்த முடியுமா?



### கமலன்

மிகவும் கஷ்டமான காரியங்களில் ஒன்று குழந்தைகளிடம் கொடுத்த போனை திரும்ப வாங்குவது



### சுஜன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச கிரைசீஸ் குழு ஆய்வாளர் இராணுவத் தளபதி மகேஷுடன் சந்திப்பு



(கொழும்பு)

பிரித்தானிய சர்வதேச கிரைசீஸ் குழுவின் திட்டமிடல் பணிப்பாளரும்உயர்ஆய்வாளருமான அலன் கீணான், இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவை சந்தித்துள்ளார்.

குறித்த சந்திப்பானது நேற்று முன்தினம் இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்றுள்ளது.

நல்லிணக்கத்தை வட மாகாணத்தில் மேற்கொள்ளும் நோக்கில் இராணுவத்தின் சிவில் இராணுவ ஒருங்கிணைப்பு தொடர்பாக இதன்போது இவர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

அத்துடன் இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க இராணுவத்தின் நலன்புரித் திட்டத்தினூடாக வறுமைக் கோட்டின் கீழ் காணப்படும் மக்களுக்கு உதவி புரிதல் கல்வி விவசாயம் மற்றும் பொருளாதார மேம்பாடு, வீடமைப்பு திட்டங்கள், பாடசாலை உபகரணப் பொருட்கள்,சைக்கிள்கள் போன்றவற்றை வழங்கல் போன்றவற்றையும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அவர் இராணுவமானது வன்முறையில் இருந்து மீட்கப்பட்ட 13,000 போராளிகளை சமூகத்துடன் ஒன்றிணைத்து தமது வாழ்வை கொண்டு செல்வதற்கான வழிகளை அமைத்தமை உலக சாதனையை எய்தியுள்ளது எனத் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் மேஜர் ஜெனரல் நிஷ்ஷங்க ரணவன, பணிப்பாளர் ஜெனரல் ஸ்டாப் அதிகாரி மற்றும் வெளிநாட்டு நடவடிக்கை பணிப்பகப் பணிப்பாளரான பிரிகேடியர் பிரதாப் திலகரத்தினவும் கலந்து கொண்டனர். (7)

# சட்டவிரோதமாக குவைத் செல்லமுற்பட்ட பெண்கள் உட்பட மூவர் நாடு கடத்தல்

(குவைத்)

போலியான கடவுச் சீட்டு மூலம் குவைத் செல்ல முற்பட்ட இரண்டு இலங்கைப் பெண்கள் உட்பட மூன்று பேர் அங்கிருந்து நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

அல்அன்பா டெய்லி என்ற ஊடகம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

குவைத் சர்வ்தேச விமான நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள கைவிரல் அடையாளத்தை உறுதிப்படுத்தும் இயந்திரத்தின் மூலம் அவர்கள் போலியான கடவுச் சீட்டைக் கொண்டவர்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்கள் மூன்று பேருக்கும் ஏற்கனவே குவைத் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# நாட்டுக்குத் தேவையான 30 வருட பௌதீகவள அபிவிருத்தித் திட்டம் தயார்

## சம்பிக்க மகிழ்ச்சி

(கொழும்பு)

நாட்டுக்கு அடுத்த 30 வருடங்களில் தேவையாகும் தேசிய பௌதீக வள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறினார். நாம் தற்பொழுது இலங்கைக்கு 2050 வரையில் தேவைப்படும் பௌதீக திட்டத்தை அமைத்துள்ளோம். அடுத்த 30 வருடங்களில் எந்த இடங்களில் அதிவேக பாதைகள் அமைக்கப்படவுள்ளன என்பதையும், மின் உற்பத்தி நிலையங்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், தொழிற்சாலைகள், நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் என்பன எங்கெங்கு அமைக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் திட்டமிட்டுள்ளோம்.

தற்பொழுது நாட்டில் நடைபெறும் அத்தனை அபிவிருத்தித் திட்டங்களுக்கும் மகிந்த, கோத்தபாய, பசில் ஆகியோர் உரிமை கோரி வருகின்றனர். இருப்பினும், இந்த அரசாங்கம் முன்னெடுக்கும் விடயங்கள் எமது தேசிய பௌதீக திட்டத்தில் உள்ளவையே ஆகும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(7)

# மாகாண சபை முறை நீக்கப்பட வேண்டும்

## ஓமல்பே சோபித்த தேரர் வலியுறுத்து

மாகாண சபைகளின் மூலம் நாட்டுக்கு எந்தவித நன்மையும் இல்லையென ஜாதிக ஹெல உறுமயவின் சிரேஷ்ட உறுப்பினர் கலாநிதி ஓமல்பே சோபித்த தேரர் தெரிவித்துள்ளார். அம்பிலிப்பிட்டியவில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நாட்டிலுள்ள மாகாண சபைகளில் 450 உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்படுகின்றனர். இவர்களுக்கான கொடுப்பனவுக்காக ஒரு வருடத்துக்கு 225 கோடி ரூபாவை அரசாங்கம் ஒதுக்குகின்றது. மேலதிக செலவுகளுக்கென ஒதுக்கப்படும் தொகையுடன் சேர்ந்து ஒரு வருடத்துக்கு சுமார் 500 கோடி ரூபாவை இவர்களுக்காக அரசாங்கம் செலவு செய்கின்றது. இருப்பினும், இவர்களினால் நாட்டுக்கும், மக்களுக்கும் கிடைக்கப் போகும் பயன் மிகவும் குறைவாகவே காணப்படுவதாகவும் தேரர் மேலும் தெரிவித்தார். (7)

# மின் தட்டுப்பாடு குறித்து ஆராய பிரதமர் ரணில் தலைமையில் குழு

(கொழும்பு)

மின்தட்டுப்பாடு சம்பந்தமாக ஆராய்ந்து பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக ஐந்து அமைச்சர்கள் அடங்கிய குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட உள்ளதுடன், மின் தட்டுப்பாட்டுக்கான காரணத்தை ஆராய்ந்து, அதற்கு சரியான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட உள்ளன. (7)

# புதையல் தோண்ட முயற்சித்த 3 பேர் பொலிஸாரால் கைது

(தம்புள்ள)

புதையல் தோண்ட முயற்சித்த 03 பேர் தம்புள்ளை - எபுல் அபே பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது அவர்கள் பயன்படுத்திய உபகரணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 18, 23 மற்றும் 30 வயதுடைய சந்தேகிய மற்றும் தம்புள்ளை பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# ஹற்றனில் விபத்து வான் சாரதி படுகாயம்





(ஹற்றன்)

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியின் செனன் பகுதியில் வான் ஒன்றும் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் வான் சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியின் செனன் பகுதியில் வான் ஒன்றும் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த விபத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 05.30 மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கினிகத்தேன பகுதியிலிருந்து ஹற்றன் நோக்கி பயணித்த லொறி ஒன்றும் நுவரெலியாவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த வானும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் வான் சாரதி படுகாயங்களுடன் வட்டவலை வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வானை செலுத்திய சாரதியின் அதிகவேகம் காரணமாகவே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் குறித்த வானின் முன் பகுதி முழுமையாக சேதமடைந்துள்ளதாகவும் லொறி க்கு சிறியளவிலான சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.(7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 120 | 200 |
| தக்காளி | 70 | 80 | 60 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 80 |
| கோவா | 60 | 60 | 60 | 80 |
| கரட் | 80 | 120 | 80 | 140 |
| பூசணி | 40 | 40 | 25 | 40 |
| புடோல் | 100 | 60 | 70 | 80 |
| வாழைக்காய் | 80 | 120 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 90 | 80 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 90 | 85 | 60 | 100 |
| பாகற்காய் | 120 | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | — | 40 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 90 | 80 |
| லீக்ஸ் | 100 | 80 | 80 | 120 |
| பீற்றூட் | 80 | 40 | 40 | 120 |
| கறிமிளகாய் | 100 | 80 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 250 | 300 |
| போஞ்சி | 120 | 80 | 110 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | — | 60 | 50 |
| கீரை - 1பிடி | 25 | 20 | 30 | 40 |
| தேசிக்காய் | 160 | 80 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 45 | 35 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 150 | 150 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 120 | 150 | 120 | — |
| முள்ளங்கி | 70 | 40 | 35 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 40 | 40 |
| வல்லாரை | 50 | 30 | 20 | 20 |
| ஈரப்பலா | — | — | 110 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எத்தன் செய்த தந்திரம்



ஒரு சமயம் பக்கத்து பக்கத்து கிராமத்தில் இரண்டு திருடர்கள் வசித்து வந்தனர். இருவரும் பலே திருடர்கள். இவர்கள் இருவரும், சமயம் கிடைக்கும் போதெல்லாம், ஒருவரை ஒருவர் ஏமாற்றப் பார்ப்பது வழக்கம்.

ஒருநாள், வணிகர் ஒருவர் இறந்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்ட கொமுரு என்ற திருடன், "அவர் வீட்டிற்குச் சென்றால் ஏதாவது சுருட்டலாம்" என்று நினைத்து அங்கே சென்றான்.

வணிகர் பெரும் பணக்காரர். அதனால், அங்கு ஏகப்பட்ட கூட்டம் இருந்தது. அங்கு சென்று ஒரு ஓரமாய் உட்கார்ந்த அவன், சற்றுத் தொலைவில் கூட்டத்தோடு கூட்டமாய் நின்றிருந்த எத்தனைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனான்.

இந்த எத்தனும் கூட நம்மைப் போலவே இந்த வீட்டில் திருட வந்துள்ளான் என்பதைப் புரிந்து கொண்ட கொமுரு, அவன் எப்படி இங்கிருப்பவர்களை ஏமாற்றித் திருடப் போகிறான் என்றுதான் பார்ப்போமே என்று, கூர்ந்து கவனிக்கத் தொடங்கினான்.

வீட்டின் உள்ளேயுள்ள ஒரு இருட்டறையில், ஒரு பெரிய கட்டிலின் மீது, வணிகரின் உடல் கிடத்தப்பட்டிருந்தது. அந்த அறைக்குள், மினுக்மினுக்கென்று ஒரு விளக்கு மட்டும் வெளிச்சம் காட்டிக் கொண்டு இருந்தது. வணிகர் கிடத்தப்பட்டிருந்த கட்டிலுக்குக் கீழே ஒரு பெரிய மரப்பெட்டி கேட்பாரற்றுக் கிடந்தது.

கூட்டத்தோடு கூட்டமாய் நின்றிருந்த எத்தன் இப்போது, மெல்ல அந்தக் கட்டிலின் ஓரமாகச் சென்று, தான் கொண்டு வந்த மாலையை, வணிகர் மீது போட்டான்.

பிறகு, தன்னை யாராவது பார்க்கின்றனரா? என்று சுற்றும் முற்றும் ஒருமுறை பார்த்துக் கொண்டான். யாரும் பார்க்கவில்லை என்று தெரிந்து கொண்டதும், கட்டிலுக்குக் கீழே உள்ள மரப்பெட்டிக்குள் பொசுக்கென்று புகுந்து கொண்டு விட்டான்.

எத்தனின் இந்தச் செய்கைகளை எல்லாம், சற்றுத் தொலைவில் இருந்தவாறு வைத்த கண் வாங்காமல் கொமுரு பார்த்துக் கொண்டிருந்தான். இறந்து போய்க் கட்டிலில் கிடந்த வணிகர், இப்போது திடீரெனப் பேசத் தொடங்கினார். அங்கிருந்த எல்லாருக்கும் ஒரே ஆச்சர்யம்.

வணிகரா பேசுகிறார்! வணிகரைப் போல் குரலை மாற்றி, அந்தக் கட்டிலின் கீழே கிடந்த மரப்பெட்டிக்குள் புகுந்திருந்த எத்தனல்லவா இப்படிப் பேசுகிறான். வணிகர் பேசத் தொடங்கியதும், அந்த வீட்டின் அழுகுரல்கள் அனைத்தும் இப்போது ஓய்ந்து போயின.

ஆம்... போன உயிரல்லவா மீண்டும் திரும்பி வந்திருக்கிறது. வணிகர், அவர் மனைவியை மட்டும் அருகே வரும்படி கூப்பிட்டார். அவளும், கட்டிலின் ஓரமாய் வந்து நின்றாள்.

"நான் இறந்து போய்விட்டதென்னவோ உண்மை தான். ஆனால், சிறிது நேரம் மட்டும் எமதூதர்கள், என் உயிரைச் சற்று விட்டுப் பிடித்து இருக்கின்றனர். நான், போன மாதம் பக்கத்து ஊரு பங்காரு நாயுடுவிடம்,. ஐநூறு வெள்ளிப் பணத்தைக் கடனாக வாங்கியிருந்தேன். அதைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்!" என்றார்.

இப்படி வணிகர் கூறியதும், "ஆமாம்! சாகும்போது கடனோடு சாகக்கூடாது." என்றனர் அந்தக் கட்டிலைச் சுற்றி நின்ற கூட்டத்தினர்.

"அது சரி வணிகரே... நீங்க சொன்ன அந்தப் பங்காரு நாயுடுவை, நாங்கள் எப்படி அடையாளம் கண்டு கொள்வது?" என்று, அங்கிருந்தவர்களில், விடயம் தெரிந்து ஒருவர் தான் இப்படிக் கேட்டார்.

"இப்போது நண்பகல் ஆகிறதல்லவா... இன்று மாலை ஆறு மணிக்கெல்லாம்இங்கே, வெள்ளை வேட்டி, சிவப்புச் சட்டை, நீலத் துண்டு அணிந்து, கையில் வெற்றிலை டப்பாவுடன் ஒருவர் வருவார். நெற்றியில் பெரிய நாமம் கூடப் போட்டிருப்பார். அவர் தான் பங்காரு நாயுடு!" என்று முடித்தார், கட்டிலில் பிணமாய்க் கிடந்த வணிகர்.

"சரிங்க... அவரிடமே கொடுத்துடறேன்," என்று தலையாட்டினாள் வணிகரின் மனைவி.

அதற்குப் பிறகு வணிகருக்குப் பேச்சுமில்லை மூச்சுமில்லை.

கட்டிலுக்குக் கீழே உள்ள அந்த மரப்பெட்டிக்குள் ஒளிந்து கொண்டு எத்தன் நடத்தும் இந்த நாடகத்தை, சற்று தொலைவில் நின்று பார்த்துக் கொண்டிருந்த கொமுரு, அந்தத் திருக்கடையூர் எத்தனின் சாமர்த்தியத்தை எண்ணி மிகவும் வியந்து போனான்.

கட்டிலுக்குக் கீழே இருக்கும் இந்த எத்தன், இனி யாரும் அறியாதபடி முதலில் வெளியே வந்தாக வேண்டும். பின்னரே, பங்காரு நாயுடு போல வேஷம் போட்டு ஏமாற்ற முடியும். ஏன், நாமே இந்த வேஷத்தைப் போட்டு, இங்கிருப்பவர்களை ஏமாற்றி, இந்த ஐநூறு வெள்ளிப் பணத்தையும் அப்படியே அடித்துக்கொண்டு போகக்கூடாது. இப்படி யோசிக்கலானான் கொமுரு. அவ்வளவு தான்... உடனே புறப்பட்டான் அந்த எண்ணத்தைச் செயலாக்க.

ஒரு துணிக்கடைக்குச் சென்று, வெள்ளைவேட்டி, சிவப்புச்சட்டை, நீலத்துண்டு போன்றவற்றை வாங்கி அணிந்து கொண்டான். நெற்றியில் பெரிய நாமமும், கையில் வெற்றிலை டப்பாவுடனும், வணிகர் வீடு போய்ச் சேர்ந்தான்.

பங்காரு நாயுடுவைப் பார்த்ததுமே, மறுபேச்சின்றி, ஐநூறு வெள்ளிப் பணத்தை அப்படியே மூட்டையாகக் கட்டிக் கொடுத்தாள் வணிகரின் மனைவி.

அதை வாங்கிக்கொண்ட கொமுரு, அங்கிருந்து உடனே புறப்படத் தொடங்கினான் வேகமாக. அவன் புறப்படத் தொடங்கிய அந்தச் சமயத்தில் தான், கட்டிலுக்குக் கீழே ஒளிந்திருந்த எத்தன், மெல்ல வெளியே வந்தான். அப்படி வெளியே வந்தவன், தான் தெரிவித்த அதே பங்காரு நாயுடு மாதிரியான தோற்றத்தோடு கூடிய ஒருவன் இப்போது மெல்ல நழுவிக்கொண்டு இருப்பதைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனான்.

நம்முடைய திட்டத்தை முன்கூட்டியே தெரிந்துகொண்டு விட்ட எவனோ ஒருவன் தான், இப்படி இங்கிருப்பவர்களையெல்லாம் ஏமாற்றிப் பண மூட்டையோடு நழுவிக் கொண்டிருக்கிறான் எனச் சட்டென உணர்ந்தான் எத்தன். அவ்வளவுதான், பண மூட்டையோடு நழுவும் அவனை விரட்டிப் பிடிப்பதென முடிவு செய்தான்.

அடுத்த நொடியே, முடிவு செயலானது.

"ஏய், ஏய்..." என்று கத்திக் கொண்டு எத்தன், கொமுருவின் பின்னால் ஓடத் தொடங்கினான். இந்தச் சத்தத்தைக் கேட்ட பிறகு தான், சட்டென்று திரும்பிப் பார்த்தான், பண மூட்டையோடு நழுவிக் கொண்டிருந்தான் கொமுரு.

அவ்வளவுதான்! அப்படியே அதிர்ச்சி அடைந்து, உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு, தலைதெறிக்க ஓடத் தொடங்கினான் கொமுரு. இப்போது, எத்தன் விடுவதாகவும் தெரியவில்லை, கொமுரு நிற்பதாகவும் தெரியவில்லை. இருவரும் ஓடிக் கொண்டே இருந்தனர்.

இப்படி இருவரும் ஓடிக் கொண்டே இருக்கும்போது, ஊருக்கு வெளியே சற்று தூரத்தில், வைக்கோல் போர்கள் இருந்தன. "இந்த வைக்கோல் போருக்குள் நுழைந்துகொண்டு விட்டால், யாராலும் கண்டுபிடிக்க முடியாது என்றுநினைத்த கொமுரு, மறுகணமே, வைக்கோல் போருக்குள் புகுந்து மறைந்துவிட்டான்.

கொமுருவை விரட்டியபடி, அந்தக் களத்துமேட்டிற்கு வந்து சேர்ந்த எத்தன், பணமூட்டையை எடுத்து கொண்டு ஓடி வந்தவன், திடீரெனக் காணாமல் போனது பற்றிக் கவலைப்படலானான். எப்படியும், இந்த வைக்கோல் போர்களில் தான் அவன் ஒளிந்திருக்க வேண்டும் என்று, கடைசியில் ஒரு முடிவுக்கும் வந்த எத்தன், அவனை எப்படிக் கண்டுபிடிப்பதென்று யோசிக்கலானான்.

எத்தன் இப்படி யோசித்துக் கொண்டிருந்தபோது, அந்தப் பக்கமாக, ஆட்டுக் கிடாய்களை ஓட்டிக்கொண்டு ஓர் இடையன் வந்தான்.

அவனிடம், "ஆட்டின் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் சலங்கையில், ஐந்து மணிகளை மட்டும் இரவல் தர முடியுமா?" என்று கேட்டான் எத்தன்.

இடையன் கொடுத்த சலங்கை மணிகளைக் கயிற்றில் கோத்து, தன் கழுத்தில் கட்டிக் கொண்டான் எத்தன். பின், அந்த களத்து மேட்டிலிருந்த ஒவ்வொரு வைக்கோல் போரின் மேலும், மாடு உராய்வது போல உராயத் தொடங்கினான்.

அப்படி அவன் உராயத் தொடங்கியபோது, சலங்கை மணிகள் அவ்வப்போது ஓசையை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

இப்படி ஒவ்வொரு போராகச் சென்று எத்தன் உராய்ந்து கொண்டு வரும் போது, கொமுரு ஒளிந்திருந்த அந்த வைக்கோல் போரும் வந்தது. தான் ஒளிந்திருக்கும் அந்த வைக்கோல் போரில் வந்து உராய்வது ஒரு மாடு தான் என்று நினைத்த கொமுரு, "சே, சே... இந்த சனியன் பிடித்த மாடு. ஏன் தான் இப்படி வந்து உராய்கிறதோ தெரியவில்லையே!" என்று கூறினான் போருக்குள் இருந்தபடியே.

அவ்வளவுதான்... பண மூட்டையோடு வந்தவன், இந்த போருக்குள் தான் இருக்கிறான் என்று புரிந்துகொண்ட எத்தன், "எழுந்து வாடா வெளியே!" என்று அதட்டினான்.

ஒளிந்திருந்த இடம் தெரிந்து விட்டதால், வேறு வழியின்றி வெளியே வந்தான் கொமுரு. "அடடே... நீ தானா!" என்று வியந்தான் கொமுருவைப் பற்றி முன்பே தெரிந்து வைத்திருந்த எத்தன்.

"ஆமாம்... நானேதான்!" என்றான், அசட்டுத் சிரிப்புடன் கொமுரு. பிறகென்ன, வணிகரின் ஐநூறு பணமும், ஆளுக்குப் பாதியானது.

## விடுகதைகளும் விடைகளும்

• இலையுண்டு கிளையில்லை, பூ உண்டு மணமில்லை, காய் உண்டு விதையில்லை, பட்டை உண்டு கட்டை இல்லை, கன்று உண்டு பசு இல்லை அது என்ன?

**வாழை**

• எவர் கையிலும் சிக்காத கல் எங்கும் விற்காத கல், அது என்ன?

**விக்கல்**

• நான்கு கால்கள் உள்ளவன், இரண்டு கைகள் உள்ளவன், உட்கார்ந்து கொண்டிருப்பான், உட்கார இடம் கொடுப்பான் அவன் யார்?

**நாற்காலி**

## பொது அறிவு துணுக்குகள்

• பல்பில் உள்ள டங்ஸ்டன் இழை, சுமார் 3400 டிகிரி செல்சியஸ் வரை வெப்பத்தைத் தாங்கும் ஆற்றல் பெற்றது.

• வானிலை இயல் (Meteorology) என்பது வளிமண்டலமும் அதன் மழை தட்பவெப்பம் காற்றோட்டம் தொடர்பான பண்புகள் பற்றிய அறிவியல்

• உயர்ந்த ஒலி கவரும் பொருள் இழைக்கண்ணாடி

• குளிர் காலத்தில் குயில் கூவுவது இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிறு வலிக்கச் சிரிப்பவர்கள் மனித ஜாதி. பிறர் வயிறெரியச் சிரிப்பவர்கள் மிருக ஜாதி.
~ கவிஞர் கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அவர்கள் பிரிவதும் சேர்வதும் தமிழினத்தை அழிக்கவே!

அரசியலுக்கு இப்போது கிரக நிலைகள் அவ்வளவு நல்லதாகத் தெரியவில்லை.

இது தென்பகுதி அரசியலுக்கு மட்டுமல்ல. தமிழர் அரசியலுக்கும் அதேநிலைதான்.

இப்போது ஜனாதிபதி மைத்திரிக்கும் மகிந்த ராஜபக்ஷ தரப்புக்கும் உறவு நிலை ஆரோக்கியமாகத் தெரியவில்லை.

அதேபோன்று தமிழ் அரசியல் தரப்பிலும் முரண்பாடுகள் தன்பாட்டில் ஏற்பட்டுக் கொள்கின்றன.

வயது, அரசியல் புலம், பதவி நிலை, மதிப்பு, மரியாதை என்பதெல்லாம் கவனிக்கப்படாமல் விமர்சனங்கள் எழத் தொடங்கியுள்ளன.

யாரை யார் விமர்சிப்பது என்ற விவஸ்தை இல்லாமலே அரசியல் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

சொல்லப்பட்ட விடயங்கள் என்ன என்புதைத் தீர விசாரிக்காமலே எழுந்தமானமாகக் கருத்துரைப்பதும் அறிக்கை விடுவதும் எங்களுக்கிருக்கின்ற பஞ்சப்பட்ட அரசியலில் சர்வசாதாரணமான விடயமாகிவிட்டது.

என்ன செய்வது தமிழ் மக்களின் அரசியலைத் தம் உயர்வுக்கான ஏணியாக்கிக் கொண்டு தங்களை உயர்த்துவதற்கான முயற்சிகள் நடக்கின்றனவே தவிர,

நாம் எல்லோரும் ஒன்றுபட்டு தமிழினத்தின் விடிவுக்காக, தமிழ் மக்களின் வாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்ற சிந்தனை எங்கள் அரசியல் தரப்பிடம் அறவே இல்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

தவிர, நம் தமிழ் அரசியலில் முரண்பட்டுக் கொண்டால் அதனை பெருங்கோபமாக்கி இறுதிவரை சாதிக்கின்ற வக்கிரத்தன்மையும் எம்மிடம் இருப்பதன் காரணமாக முரண்பட்டவர்கள் மீண்டும் ஒன்றுசேர முடியாத ஒரு சூழ்நிலையும் ஏற்பட்டு விடுகிறது.

எனவே கற்பிளவு போல எங்கள் அரசியல் தரப்புகள் முரண்பட்டால் முரண்பட்டதுதான் என்றாகிறது.

ஆனால் சிங்கள அரசியலில் அவ்வாறான நிலைமை அறவே இல்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாட்டுக்கு பிரதம விருந்தினராக ஜனாதிபதி மைத்திரி செல்வார்.

பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஜனாதிபதி மைத்திரிக்கு வெறுப்பு ஏற்பட, முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுடன் இணைந்து கொள்வார்.

கால சூழ்நிலையில் மைத்திரி தரப்பும் மகிந்த தரப்பும் பிரிந்து கொள்ளும்.

இவ்வாறு பிரிந்து கொள்வதெல்லாம் தமிழினத்துக்கு எதனையும் வழங்காமல் தவிர்ப்பதற்கானதென்பதே உண்மையாகும்.

ஆக, மைத்திரி - மகிந்த - ரணில் - சரத் பொன்சேகா என யார் பிரிந்தாலும் கூட்டுச் சேர்ந்தாலும் அதன் உள்நோக்கம் தமிழனுக்கு எதுவும் கிடைத்துவிடக் கூடாது என்பதுதான்.

# பொதுப் போக்குவரத்து சேவைகளில் பெண்கள் துன்புறுத்தலை எதிர்கொள்கின்றனர்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

பொதுப் போக்குவரத்து சேவைகளில் பெண்கள் பாரியளவில் துன்புறுத்தல்களை எதிர்நோக்குகின்றனர் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கதுருவலயில் நேற்று இடம்பெற்ற புதிய பேருந்து தரிப்பிடத்தை திறந்துவைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொதுப் போக்குவரத்து சேவைகளில் பெண்கள் பாரியளவில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர் என்பது இரகசியமானதொரு விடயமல்ல.

இவ்வாறான சூழ்நிலையில்; பெண் பிள்ளைகளை தமது பிள்ளைகள் என அனைவரும் எண்ண வேண்டும்.

அதுபோல பெண்களை, தமது தாய்மார்களாகவும் சகோதரிகளாகவும் கருத வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு பிரச்சினைகள் இருப்பதன் காரணமாகவே பெண்கள் மற்றும் சிறுவர் விவகார பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், சிறந்த சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் அரச அதிகாரிகளுக்கும் பொதுமக்களின் பங்களிப்பு கிடைக்க வேண்டும்.

இலலாவிட்டால் அதனை நிறைவேற்ற முடியாது என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வீடு புகுந்து கொள்ளையில் ஈடுபட்ட சந்தேகநபர்

### குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது

வீடு புகுந்து கொள்ளையில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் யாழ்ப்பாணம் சிறப்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து கொள்ளையிடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் பிரதான வீதி மடத்தடியில் உள்ள வீட்டில் கடந்த முதலாம் திகதி இரவு கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

குறித்த குடும்பம் உறக்கத்திலிருந்த வேளை வீடு புகுந்த கொள்ளைக் கும்பல், அங்கிருந்த தொலைக்காட்சிப் பெட்டி உள்ளிட்ட பெறுமதியான பொருட்களைக் கொள்ளையிட்டுத் தப்பித்தது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது. அதனடிப்படையில் விசாரணைகளை யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தினேஸ் கருணாரத்னவின் கீழான சிறப்புக் குற்றத் தடுப்பினர் முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் நாவற்குழியைச் சேர்ந்த சந்தேக நபர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து வீட்டில் கொள்ளையிடப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டி உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், சந்தேகநபரிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப் படுவதுடன், கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த மேலும் இருவர் தேடப்படுகின்றனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-3)

## முச்சக்கர வண்டி தடம்புரண்டதில் அதன் சாரதி படுகாயம்

### சாவகச்சேரி கச்சாய் வீதியில் சம்பவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - கச்சாய் வீதி முருகமூர்த்தி ஆலயத்திற்கு அருகாமையில் நேற்று புதன்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் முச்சக்கர வண்டிச் சாரதி காயமடைந்துள்ளார். முச்சக்கரவண்டிக்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் சடுதியாக நடு வீதியில் மோட்டார் சைக்கிளை நிறுத்தியுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணை காப்பாற்ற முனைந்த முச்சக்கரவண்டிச் சாரதி சடுதியாக பிறேக் பிடித்தபோது முச்சக்கரவண்டி தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் முச்சக்கரவண்டிச் சாரதி தலை மற்றும் உடல் பகுதிகளில் படுகாயமடைந்துள்ளார்.

முச்சக்கரவண்டியின் பின் இருக்கையில் பயணித்த சாரதியின் குழந்தைகள் தெய்வாதீனமாக எந்தவொரு காயங்களும் இன்றித் தப்பித்துள்ளனர்.

இருப்பினும் முச்சக்கர வண்டி விபத்துக்குள்ளாகக் காரணமான பெண் அவ்விடத்தில் இருந்து நழுவிச் சென்றதாகத் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த முச்சக்கரவண்டிச் சாரதி 1990 அம்புலன்ஸ்மூலம் யாழ்போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ம-30)

## 'அன்பில் மலர்ந்த அமரகாவியம்' திருப்பாடுகளின் நாடகம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தால அரை நூற்றாண்டைக் கடந்து தொடர்ச்சியாக ஆண்டு தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்பட்டு வருகின்ற திருப்பாடுகளின நாடகம்இவ்வாண்டு'அன்பில் மலர்ந்த அமரகாவியம்' என்னும் பெயரில் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாட்களுக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

வியாழன், சனி, ஞாயிறு தினங்களில் மாலை 6.45 மணிக்கும் வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கும் இவ்வாற்றுகை ஆரம்பமாகவுள்ளது. (இ-7)

## போதைப்பொருள் குற்றச்சாட்டு

### நகரசபை உறுப்பினரை தடுத்து வைத்து விசாரிக்க நீர்கொழும்பு நீதிமன்று அனுமதி

(கொழும்பு)

போதைப்பொருள் குற்றச்சாட்டுத் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் சிலாபம் நகரசபை உறுப்பினர் ஸ்டேன்லி பெர்னாண்டோவை தடுத்து வைத்து விசாரணை செய்ய நீர்கொழும்பு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

நீர்கொழும்பு பிராந்திய குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது ஒரு கிலோ 8 கிராம் நிறையுடைய ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட நபரொருவருக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் இவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள நகர சபை உறுப்பினர் ஸ்டேன்லி பெர்னாண்டோவை 5 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய நீர்கொழும்பு நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதி அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## வீதிக்கு குறுக்காக குரங்கு பாய்ந்ததில் மோ.சைக்கிள் விபத்து; ஒருவர் படுகாயம்

சர்வகச்சேரி - நுணாவில் பகுதியில் புதன்கிழமை காலை ஏ9 வீதியில் வீதிக்கு குறுக்காகப் பாய்ந்த குரங்குடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவத்தில் கொற்றாவத்தை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 43 வயதான சி.ஜெயந்தன் என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-30)

## சத்திய தரிசனம்

### சத்திய சோதனையே வாழ்க்கை



❖ சேவை செய்யும் போது "நான் எஜமான்" என்ற எண்ணம் கூடாது. கடவுளுக்கு செய்வதாகக் கருதி செயல்கள் செய்தால் தெய்வ உணர்வுடன் செய்ததாகப் பொருள்படும்.

❖ முற்றிய தேங்காயை கடவுளுக்கு நைவேத்தியமாகப் படைக்கிறோம். அதேபோல் பக்குவமிகுந்த முதிர்ச்சி அடைந்த உள்ளத்தை ஆண்டவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

❖ கடவுள் நம் முன் விஸ்வரூபம் எடுத்து வந்தால் அதைத் தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தி நமக்கு கிடையாது. மனித வடிவில் வரும்போதுதான் நாம் அன்பு காட்டி வழிபடுகிறோம்.

❖ வாழ்க்கையை ஒரு சத்தியசோதனையாக எடுத்துக் கொண்டு, எண்ணம், வாக்கு, செயலில் தூய்மையை கடைப்பிடித்தால் வாழ்வில் அமைதி உண்டாகும்.

❖ நல்ல சிந்தனையைத் தூண்டும் புத்தகங்களைப் படிப்பது, நல்லவர்களுடன் பேசுவது போன்ற செயல்களில் ஈடுபட்டால் மனதுக்கு வேலை கிடைக்கும். வீணான சிந்தனைகளில் மனம் அலையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் அணிகளின் மோதல் இன்று





சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான ராஜன் கதிர்காமர் வெற்றிக்கிண்ணத்திற்கான 50 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி இன்று வியாழக்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. 27 ஆவது தடவையாக இவ்விரு கல்லூரிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள இப்போட்டி 1985 ஆம் ஆண்டு அப்போதைய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் அடிகளாரால் அப்போதைய யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் ராஜன் கதிர்காமர் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது மட்டுமன்றி வடமாகாணத்தில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட போட்டியாகக் காணப்பட்டது.

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற 26 ஆவது போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் இடை நிறுத்தப்பட்டதன் பின்னர் மீண்டும் 2019 ஆம் ஆண்டில் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்தந்தை அ.பீ.திருமகன், யாழ்ப்பாண கல்லூரி அதிபர் வணக்கத்திற்குரிய கலாநிதி டி.எஸ்.சொலமன் மற்றும் இரு கல்லூரிகளின் பழைய மாணவர்கள், ஆசிரியர்களின் பெரு முயற்சி மூலம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலம் நடைபெற்ற போட்டிகளில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 19 தடவைகளும் யாழ்ப்பாணக் கல்லூரி 6 தடவைகளும் வெற்றி பெற்றன. ஒரு போட்டி இடை நிறுத்தப்பட்டது.

இவ்வருடம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு டீ.ஆர்.பியற்றிக், யாழ்ப்பாணக் கல்லூரிக்கு ஏ.கஜீபன் ஆகியோர் தலைமை தாங்குகின்றனர். இரு அணிகளும் சிறந்த அனுபவம்மிக்க வீரர்களைக் கொண்டுள்ளதால் இப்போட்டி இரு அணி வீரர்களுக்கும் சவால் மிகுந்ததாக அமையும். (க)

## மின்னொளியிடம் பணிந்தது துர்கா

கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகம் நடத்தும் தென்மராட்சி ரீதியான தாச்சிச் சுற்றுப்போட்டியில் லீக் சுற்றின் முக்கிய போட்டியில் கைதடி மின்னொளி விளையாட்டுக்கழகம் கைதடி துர்கா விளையாட்டுக்கழகத்தினை 5:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டது. (க)

## சம்பியனாகியது நவசக்தி



மத்தொனி ஜே/366 கிராம சேவகர் பிரிவில் சமூக சிவில் அமைப்பினரால் நடத்தப்பட்ட துடுப்பாட்டப் போட்டி கடந்த 9 ஆம் திகதி விக்கினேஸ்வரக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இத் தொடரில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழக அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

இவர்களுக்கான வெற்றிக் கிண்ணத்தை காங்கேசன்துறை உப பொலிஸ் அத்தியட்சகர் சித்ரானந்த ஜெயக்கொடி மற்றும் நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயதிலக ஆகியோர் இணைந்து வழங்கினர். (க-60)

## யாழ்.பிரதேச செயலக உதைபந்தாட்டம் குருநகர் பாடும்மீன் அணி அரையிறுதியில்



யாழ்.பிரதேச செயலக உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் கடந்த 9 ஆம் திகதி துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

வடக்கில் இரு துருவங்களான பாடும்மீன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்லஸ் அணியும் மோதியது. இரு அணியினரும் ஒன்றையொன்று சளைத்தவர்கள் அல்லவென்று போட்டி நடைபெற்றது. போட்டியாக இடம்பெற்ற போதிலும் இடைவேளைக்கு முன்னதாக பாடும்மீன் அணி முதலாவது கோலைப் போட்டது.

இடைவேளைக்குப் பின் இரு அணியினரும் விளையாட்டு உச்சக்கட்டத்தை அடைந்தனர். இரு அணியினரும் ஆக்ரோஷமாக விளையாடினர். இறுதியில் 1-0 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் அணி அரை இறுதிக்குள் நுழைந்தது.

தேசிய நல்லிணக்க புத்தாண்டு பெருவிழா துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இவ்வேளையில் யாழ்.பிரதேச செயலக உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டியும் சிறப்பாக நடைபெற்றது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதேவேளை அரியாலை சுதேசிய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட உதைபந்தாட்டத் தொடரிலும் நாவாந்துறை கலைவாணி அணியை எதிர்த்து பாடும்மீன் அணி மோதி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று பாடும்மீன் அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றது. (க-106)

## கொலின்ஸ்- அண்ணா சிலையடி அணிகள் வெற்றி பெற்றன

லண்டன் வல்வை புளூஸ் நண்பர்களின் அனுசரணையுடன் வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான மாபெரும் உதைபந்தாட்டத் தொடர் தீருவில் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

முதலாவது போட்டியில் கரணவாய் கொலின்ஸ் மற்றும் வதிரி பொம்மர்ஸ் அணிகள் மோதின. இப்போட்டியில் கொலின்ஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு போட்டியில் அண்ணாசிலையடி அணியை எதிர்த்து வல்வை அணி மோதியது. இப்போட்டியில் அண்ணா சிலையடி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது வெற்றியை பெற்றுக்கொண்டது. (க)



கொல்கத்தா அணியுடனான வெற்றிக்குப் பின்னர் சென்னை சுப்பர் கிங்ஸ் அணித் தலைவர் டோனி வீடு திரும்ப விமான நிலையம் சென்ற அவர் கிடைத்த கொஞ்ச நேரத்தில் தரையில் படுத்து உறங்கிய புகைப்படம் இணையத்தில் வைரல் ஆகி வருகின்றது. (க)

## ஊரெழு றோயல் அணிக்கு வெற்றி



வடக்கின் நாயகன் உதைபந்தாட்டத் தொடரில் கடந்த 9 ஆம் திகதி நடந்த இரண்டாவது போட்டியில் ஊரெழு றோயல் எதிர் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. விறுவிறுப்பான இப்போட்டியில் ஊரெழு றோயல் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

றோயல் அணி சார்பாக பிரசன்னா, நிதர்சன் ஆகியோர் தலா 1 கோலை பதிவு செய்தனர். ஆட்ட நாயகனாக றோயல் அணியின் வீரர் [illegible] தெரிவு செய்யப் பட்டார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள்...

துள்ளபோதும் புத்தாண்டை முன்னிட்டு இலங்கையில் அதிகரிக்கப்படவில்லை என அமைச்சுச் சுட்டிக்காட்டியுள்ளது.

எரிபொருள் விலைச் சூத்திரத்தின் அடிப்படையில் ஏப்ரல் மாதத்துக்கான எரிபொருள்களின் விலை மாற்றம் 10ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

எனினும் புத்தாண்டை முன்னிட்டு எரிபொருள்களின் விலை மாற்றம் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என நிதி அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது.

உலக சந்தையில் எரிபொருள்களின் விலை அதிகரித்துள்ள போதும் நாட்டில் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்படாது என அமைச்சுக் கூறியுள்ளது. (ம-3)

## நாடு முழுவதும்...

ஏற்படும் உயிரிழப்புகளை கட்டுப்படுத்துவதற்காகவும் குற்றச்செயல்களை குறைப்பதற்காகவும் இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

பண்டிகைக்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஊடகங்களை தெளிவுபடுத்துவதற்காக நேற்று புதன்கிழமை பொலிஸ் தலைமையகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதற்கமைய நாடளாவிய ரீதியில் 2ஆயிரத்து 400 பொலிஸார் மேலதிகமாக கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பில் மாத்திரம் 800 பொலிஸார் மேலதிகமாக சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளதுடன் சிவில் உடையிலும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் மதுபாவனையுடன் வாகனம் செலுத்தும் சாரதிகளை கண்டுபிடிப்பதற் காக 25 ஆயிரம் பரிசோதனை கருவிகள் எடுத்து வரப்பட்டுள்ளது.

மேற்படி கண்காணிப்பு நடவடிக்கைகள் இன்று முதல் எதிர்வரும் 20ம் திகதி வரையிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (ம-3)

## மானிப்பாயில்...

யிலுள்ள அடுத்தடுத்து இரண்டு வீடுகள் மற்றும் மானிப்பாய் நகருக்கு அண்மையிலுள்ள வீடொன்றிலும் இடம்பெற்றது எனவும் பொலிஸார் கூறினர்.

மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் வந்த 9 பேர் கொண்ட வன்முறைக் கும்பலே இந்தத் தாக்குதலை முன்னெடுத்தனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் அனைவரும் ஆவா குழுவைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் அண்மையில் தாக்குதல் முன்னெடுக்கப்பட்ட நிலையில் நேற்று இரண்டாவது தடவையும் அங்கு புகுந்து பெறுமதியான பொருள்களைத் தாக்கி உடைத்துவிட்டு கும்பல் தப்பித்தது.

அந்தவீட்டுக்கு அயலிலுள்ள வீட்டுக்குள் புகுந்த கும்பல் அங்கும் அடாவடியில் ஈடுபட்டு விட்டுத் தப்பித்தது. அத்துடன், மானிப்பாயில் உள்ள தனியார் வங்கி ஒன்றுக்கு அண்மையிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த கும்பல் அங்குள்ளவர்களை அச்சுறுத்தும் வகையில் தாக்குதலை நடத்தியுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-3)

## பகிடிவதையில்...

நேற்று யாழின் பல இடங்களிலும் இந்த துண்டுபிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன், பல்கலைகழகத்தை அண்மித்த பகுதிகளில் ஒட்டப்பட்டுமிருந்தது.

ஆவாவை சமூக விரோதிகளாக ஊடகங்கள் சித்திரித்துள்ளன. ஆனால் பெண்களிற்கு எதிரான வன்முறைகளையும், சமூக சீர்கேட்டையும் அழிக்கும் அமைப்பாகவே எமது அமைப்பு கட்டமைக்கப்பட்டுள்ளது என கொள்கை விளக்கம் வேறு அளித்துள்ளனர்.

அந்த துண்டுபிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது வருமாறு,

இலங்கையில் பகிடிவதை தண்டனைக்குரிய குற்றமாகும். அதற்கான தண்டனைகள் இலங்கையில் இருக்கின்ற போதும் பல பல்கலைக்கழகங்களில் பகிடிவதை இடம்பெற்று வருகின்றது.

ஈழ பூமியில் ஈழப்போராட்டங்கள் இடம்பெற்ற காலத்தில் இல்லாத பகிடிவதைகள் இப்பொழுது தலை தூக்கியதற்கான காரணங்கள் என்ன? இது தொடர்பில் பல முறைப்பாடுகள் ஆவாக் குழுவினருக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதுவரை காலமும் உண்மைக்கு புறம்பாக கூறும் ஊடகங்களால் ஆவா குழு சமூக சீர்கேட்டாளர்களாகவே கூறப்பட்டு வருகின்றது.

எமது ஆவா அமைப்பானது பெண்களுக்கு எதிரான வன்முறைகளையும் சமூக சீர்கேடுகளையும் அழிக்கும் அமைப்பாகவே நாம் இதை கட்டமைத்துள்ளோம்.

எமது அமைப்பின் 40 சதவீதமானோர் பல்கலைக்கழக மாணவர்களே. ஆகவே பல்கலைக்கழக பகிடிவதையினை தவிர்ப்பதற்கு ஆவா குழுவினால் (அன்ரி ராக்கிங் கொமிட்டி) உருவாக்கப்பட்டுள்ளது.

மறைமுகமாகவோ நேரடியாகவோ பல தீர்வுகளை பெற்றுக்கொடுத்திருப்பது நீங்கள் அறிந்ததே. அது மட்டும் இன்றி பல்கலைக்கழக மாணவர்களான சுலக்சன் மற்றும் கஜன் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகிய போதும் நாம் மேற்கொண்ட நடவடிக்கையும் நீங்கள் அறிந்ததே.

ஆகவே இனிவரும் காலங்களில் பல்கலைக்கழகத்தில் பகிடிவதை இடம்பெறுமாயின் பகிடிவதைகளில் ஈடுபடுபவர்களின் உடல் பாகங்கள் ஈவிரக்கம் இன்றி துண்டிக்கப்படும்.

பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பகிடிவதையினை எமக்கு அறியத் தரலாம். அது பல விசாரணைகளின் பின்பு உண்மைத் தன்மை அறியப்பட்டு அதற்கான தண்டனைகள் வழங்கப்படும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## வவுனியாவில்...

வவுனியா மாமடுவ பகுதியிலுள்ள வெற்றுக் காணி ஒன்றிலிருந்து நேற்று முன்தினம் மாலை 13 மிதிவெடிகளை பொலிஸார் மீட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

காணியை பைக்கோவின் உதவியுடன் துப்பரவுப்பணி மேற்கொண்ட காணியின் உரிமையாளர் அப்பகுதியில் மிதிவெடிகள் காணப்பட்டுள்ளதை அவதானித்துள்ளார்.

இதையடுத்து வவுனியா பொலிஸா ருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் பாதுகாப்பு வலயத்தினை ஏற்படுத்தியதுடன் மாமடுவ விசேட அதிரடிப் படையினருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

நீதிமன்ற அனுமதியைப் பெற்று மிதிவெடிகள் எனச் சந்தேகிக்கப்படும் வெடி பொருளை அழித்தொழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-3)

## பயங்கரவாத...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்டோரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேகநபரான பிரதி பொலிஸ்மா அதிபர் நாலக சில்வாவுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ள விதம் குறித்து அவரது சட்டத்தரணி சவாலுக்கு உட்படுத்தியுள்ள விடயங்களை ஆராய்ந்தபோதே நீதவான் ரங்க திஸாநாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்தும் தெரிவித்த அவர், நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டம் விளங்கிக்கொள்ள முடியாத பல சிக்கல்களை கொண்டமைந்துள்ளதென தெரிவித்தார்.

முன்னர் தமிழர்களையும், தமிழீழ விடுதலை புலிகள் இயக்க உறுப்பினர்களையும் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யும்போது எவரும் அதனை கண்டுகொள்ளவில்லை என்றும் தற்போது ஒரு தரப்பினர் கைது செய்யப்படும்போது மாத்திரம் அதன் ஓட்டைகள் அனைவருக்கும் புரிகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழே குற்றம் சுமத்துவது என தீர்மானிப்பது யார், எவ்வாறு அதனை தீர்மானிப்பது என்பது குறித்து சட்டத்தில் எந்த வழிகாட்டல்களும் இல்லை என்றும் பயங்கரவாதி என்பதற்கான வரைவிலக்கணம் குறித்தும் குறிப்பிடப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் பயங்கரவாத தடைச்சட்டம் அமுல் செய்யப்பட வேண்டும் என்பதை யார், எவ்வாறு தீர்மானிப்பது என்பது குறித்து எந்த அறிவுரையும் சட்டத்தில் இல்லை என்றும் கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-3)

## சுதந்திரக்கட்சி...

பொதுஜன முன்னணியின் தவிசாளரான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கூட்டணி அமைப்பு குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும் இடையில் எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, புதிய கூட்டணியை அமைப்பது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும் இடையில் அடுத்தமாதம் 9 ஆம் திகதி மீண்டும் பேச்சு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள ஜீ.எல்.பீரிஸ், குறுகிய நோக்கத்துடன், தேர்தலை இலக்கு வைத்து உருவாக்கப்படும் கூட்டணி நிலையானதாக அமையாது என குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், கூட்டணி அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உட்பட ஏனைய பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாட உள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அடுத்துவரும் வாரங்களில் இதற்கான சந்திப்புகளை நடத்த உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த முறை இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் கொள்கை அடிப்படையிலான 20 விடயங்களின் அடிப்படையில் நேற்றைய தினம் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிலையில், நேற்றைய பேச்சுவார்த்தையில் குறித்த விடயங்கள் 25 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றைய தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தை குறித்து ஜனாதிபதிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுவுக்கும் தெளிவுபடுத்த உள்ளதாகவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். (ம-3)

## மண்டைதீவில்...

வுள்ளனர்.

சுவீகரிக்கப்படவுள்ள 18 ஏக்கர் காணியை இன்று 11 ஆம் திகதி அளவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மண்டைதீவில் காணி சுவீகரிப்பு நடவடிக்கையை தடுப்பதற்காக இன்று நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில் அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

## மண்டைதீவு -...

புனரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுவதால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

குறித்த இவ்வீதியை மண்டைதீவு அல்லைப்பிட்டி மக்கள் பயன்படுத்துவதுடன் மண்கும்பான், வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களுக்குச் செல்வதற்கான முக்கிய வீதியாகவும் இது இருக்கின்றது.

எனினும் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் இதுவரை மண்டைதீவு - அல்லைப்பிட்டி இணைப்பு வீதியை புனரமைக்கும் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம)

## கோத்தபாயவுக்...

டனை வழங்கப்படவில்லை என்றால், அமெரிக்காவின் நீதிமன்றங்களில் தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்தனகல்லை ரஜமஹா விகாரையில் நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார். (ம-3)

## சிறிய, நடுத்தர...

வங்கி வட்டி வீதத்தை குறைப்பது தொடர்பில் ஆராய்வதற்காக் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை அந்தக் குழுவின் தலைவரினால் நேற்று முற்பகல் தனக்கு கையளிக்கப்பட்டதாக பிரதமர் கூறினார்.

52 நாள் நிர்வாக காலத்தில் நாட்டின் பொருளாதாரம் கடும் பின்னடைவை சந்தித்ததாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார். (ம-3)

# 21 இலங்கை மீனவர்களை விடுவிக்கிறது

## மாலைதீவு அரசு

(கொழும்பு)

மாலைதீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 21 இலங்கை மீனவர்களும் விடுவிக்கப்படவுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை இராஜாங்க அமைச்சர் திலிப் வெதாராச்சி தெரிவித்தார்.

குறித்த மீனவர்கள் இன்று வியாழக்கிழமை இரவு மாலைதீவிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

21 மீனவர்களுக்கும் தேவையான பற்றுச்சீட்டு, உணவு உள்ளிட்ட செலவுகளுக்காக ரூ.16 இலட்சம் வழங்குவதற்கு கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மாலைதீவு முக்கியஸ்தர்களுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையினையடுத்து, குறித்த மீனவர்களை விடுவிக்க துரித நடவடிக்கை எடுக்க முடிந்ததாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி 28 இல் அரபிக்கடலில் மீன்பிடித்து விட்டுத் திரும்பும் போது இரு படகுகள், பெருமளவிலான மீன்கள், உபகரணங்களுடன் மீனவர்கள் மற்றும் அரபிக்கடலில் இரு படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் பலரும் மாலைதீவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

மெகா பவர்
திகதி 10/04/2019
சீட்டிழுப்பு இலக்கம் 368
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
T 11 60 63 72 78

கொவிசெத
திகதி 2019.04.10
சீட்டிழுப்பு இலக்கம் 2090
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
M 01 26 48 49

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 2019/04/10
சீட்டிழுப்பு இலக்கம் 0933
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
S 6 2 3 5 1 6

தன நிதானய
திகதி 2019/04/10
சீட்டிழுப்பு இலக்கம் 0138
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
R 22 54 64 81

தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை கடற்...

கைது செய்யப்படுகின்றனர்.

இன்னும் நூற்றுக்கணக்கானோர் இலங்கையில் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்களுக்கு பிரச்சினை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

அதேபோல் குஜராத்தில் உள்ள மீனவர்களுக்கு பாகிஸ்தான் கடற்படையால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இவற்றைத் தீர்த்து வைப்பதற்கு கண்காணிப்புக் குழு ஒன்றை அமைக்க உள்ளதாக பிரதமர் மோடி அறிவித்து ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் அது அமைக்கப்படவில்லை என ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (ம-3)

## மக்கள் பிரதிநிதி...

தேர்தல் மேடைகளில் எத்தகைய கருத்துக்களை தெரிவித்த போதிலும் பாராளுமன்ற தினங்களில் பாராளுமன்றத்திற்கு செல்வதற்கோ அல்லது மாகாண சபை மற்றும் பிரதேச சபை அமர்வுகளில் கலந்துகொள்வதற்கோ மக்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட சில மக்கள் பிரதிநிதிகள் அக்கறை செலுத்தாது உள்ளதோடு. அதனால் நாட்டு மக்களின் பிரச்சினைகள் பற்றிய சரியான புரிந்துணர்வை அவர்களால் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். (ம-3)

இலங்கையின் முதல்தர 5 நட்சத்திர விருது வென்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்
எமரல்ட் ஐல்
License No. 1162
வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற முகவராக வழங்கும்
மலேசிய வேலைவாய்ப்பு
2-3 வருட கம்பனி விசா
விசா, டிக்கட் கிடைத்த பின்னரே கட்டணம் அறவிடப்படும்!

| பொலியஸ்தர் தொழிற்சாலை | இறப்பர் தொழிற்சாலை | வீட்டுப் பணிப்பெண் | கோழிப் பண்ணை |
|---|---|---|---|
| ஃபோக்லிஃப்ட் டிரைவர் மெஷின் டெக்னீஷியன் எலெக்ட்ரீஷியன் தொழிற்சாலை பணியாளர் ரூ.75,895/- (மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு உள்ளடங்கலாக) | உற்பத்தி உதவியாளர்கள் ரூ.55,510/- (மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு உள்ளடங்கலாக) | முற்றிலும் பாதுகாப்பான வீடுகளில் பணி ஏற்பாடு ரூ.52,800/- | பண்ணை பணியாளர்கள் ரூ.55,510/- (மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு உள்ளடங்கலாக) தமிழ் உரிமையாளரின் பண்ணையில் பாதுகாப்பான வேலை |

முற்றிலும் இலவச பயணம்!
தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து, விமானச்சீட்டு வழங்கப்படும். 8 மணி + OT வாரம் 6 நாள் வேலை. வயதெல்லை : 18 - 40
எமரல்ட் ஐல் License No. 2268
077 00 38 215
021 221 9 221
077 55 46 956
221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம், The Loverக்கு அருகே
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச்
(C-6059)
Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 20.04.19 சனி காலை 8 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 22.04.19 3.30pm
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக் கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623 (8434)

டிப்பர் விற்பனைக்கு
LI XXXX
தொடர்பு :
077 633 2140 (C-6061)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(C-6058)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## வெப்பநிலை மேலும் அதிக...

பதிவாகியிருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதனைத்தொடர்ந்து பொலனறுவை மாவட்டத்தில் 38.1 பாகை செல்சியஸ் பதிவாகியுள்ளது. மேலும் குருணாகலையில் 36.9 பாகை. செல்சியஸ் அநுராதபுரத்தில் 36.8 பாகை செல்சியஸ், மஹா இழுப்பள்ளம மற்றும் இரத்தினபுரியில் 36.7 பாகை செல்சியஸ், மொனராகலையில் 36.5 பாகை செல்சியஸிலும் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

இதேவேளை எதிர்வரும் மூன்று நாட்களுக்குள் நாட்டின் வெப்பநிலை மேலும் அதிகரிக்குமென்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இன்றும் நாளையும் வட மேல் மாகாணத்தின் அநேகமான பகுதிகளிலும் கம்பஹா, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, அநுராதபுரம், திருகோணமலை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களிலும் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படுமென்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வெப்பநிலை அதிகரிக்கும் பிரதேசங்களில் உள்ளோர் அதிகம் தண்ணீர் குடிக்குமாறும் நிழலான இடத்திலிருந்து வேலை செய்யுமாறும் வெளியிடங்களின் செயற்பாடுகளை குறைத்துக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன் பிள்ளைகளை தனியாக மூடிய வாகனங்களில் விட்டுச் செல்ல வேண்டாமென்றும், பாரம் குறைந்த வெள்ளை மற்றும் இளம் நிறங்களிலான ஆடைகளை அணியுமாறும்வயோதிபர்கள் மற்றும் நோயாளிகளின் உடல் நலன் குறித்து அடிக்கடி அவதானத்துடன் இருக்குமாறும் வானிலை அவதான நிலையம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# மரண அறிவித்தல்

## அமரர் பொன்னையா உதயகுமார்

(உதயன் - கனடா)

தோற்றம் : 15.05.1963 மறைவு : 05.04.2019



7ஆம் வட்டாரம் குமுழமுனையை (முள்ளியவளை, முல்லைத்தீவு) பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா உதயகுமார் (உதயன்) கடந்த வெள்ளிக்கிழமை 05.04.2019 கனடா மிஸிஸாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி பொன்னையா மற்றும் சின்னம்மா - பொன்னையா தம்பதியரின் அன்பு மகனும், சித்திரவேல் தம்பதிகளின் அன்பு மருமகனும், கௌரி லூர்த்து மேரியின் (கனடா) அன்புக் கணவரும், நிவேதாவின் (கனடா) அன்புத் தந்தையும், எதிராஜ் (கனடா) அவர்களின் அன்பு மாமனும், மேக்னாவின் (கனடா) அன்புப் பேரனும், உதயராசா (பிரதி அதிபர், பெரியபுலம் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்), உதயச்சந்திரன் (முகாமைத்துவ உதவியாளர், மாஞ்சோலை வைத்தியசாலை, முள்ளியவளை), உதயரஞ்சினி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுபாஜினி (துறைத் தலைவர், புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), வனிதமலர் (குமுழமுனை), காந்தரூபன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கவிநிலவன் (யாழ்ப்பாணம்), பிரணவிகா (யாழ்ப்பாணம்), கவிந்தன் (குமுழமுனை), பிறையாளன் (குமுழமுனை), புவிதரன் (குமுழமுனை) ஆகியோரின் அன்பு பெரியப்பாவும், சுலக்ஷன் (நோர்வே), யதுர்ஷி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13.04.2019 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு (கனடா நேரம்) Our Lady of the Airways Church, 7407 Darcel Ave, Mississauga, ONT, L4T, 2X5 என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் 13.04.2019 சனிக்கிழமை காலை 11.30 மணிக்கு (கனடா நேரம்) Queen of Heaven Catholic Cemetery, 7300, On 27, Woodbridge ONT, LAL IA5 என்னும் முகவரியில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எதிராஜ் - 647 574 7443 (கனடா)
கௌரி - 416 902 3502 (கனடா)
உதயராசா - 0094 77 679 8695 (இலங்கை)
உதயச்சந்திரன் - 0094 77 189 4730 (இலங்கை)
உதயரஞ்சினி - 0047 2139 0045 (நோர்வே)
(8430)

தகவல் : குடும்பத்தினர்.

பதவி வெற்றிடம்
- அலுவலகச் செய்தியாளர்கள் வெளிக்களம் (ஆண்கள் மட்டும்)
- அலுவலகச் செய்தியாளர்கள் உள்ளகம் (பெண்கள் மட்டும்)

தகைமை
க.பொ.த உயர்தரம் தோற்றியிருத்தல்
01.01.2019 இல் 25 வயதைப் பூர்த்தி செய்திருத்தல்.
தகைமையும் விருப்பமும் உடையவர்கள் இன்று 11.04.2019 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு வலம்புரி அலுவலகத்துக்கு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.
இல. 3.2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
பொது முகாமையாளர்

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட
நூற்றாண்டு விழா
இன்றைய இரவு நிகழ்ச்சியின் சிறப்பு நிகழ்வாக இந்தியாவில் இருந்து வருகை தருகின்ற பேராசிரியர்
பர்வீன் சுல்தானா
அவர்களின் சிறப்புப் பேச்சு
அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய முன்றலில் இரவு 7.30 மணிக்கு இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நூற்றாண்டு விழா கலைக் குழு
(C-6063)



இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org